093

# SEN-TAMIL READER

## FOR FORM III.

OFFICE OF THE REGISTRAR OF ... 5 JUN 1928 MADRAS

BY

N. R. SUBRAMANIA SARMA,

*HEAD TAMIL PANDIT,*

*A. M. High & Training Schools, Pasumalai, and*
*Author of several Prose & Poetical works.*

MADURA:

... M. GOPALAKRISHNA KONE.

1928. [Price As. 8.

TB
031(8)
N28
34635

1347
494 81186

# செந்தமிழ் வாசகப் புத்தகம்.

## எட்டாம் வகுப்புக்கு உரியது.

OFFICE OF THE ...
5 - JUN 1928
MADRAS

மதுரை-பசுமலை
அமெரிக்கன் மிஷன் உயர்தர, போதனுமுறைக் கலாசாலைகளின்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
நெ. ரா. சுப்பிரமணிய சர்மா
எழுதியது.

மதுரை புஸ்தக வியாபாரம்,
இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்
வெளியிட்டது.

திவு செய்தது.] [விலை அணா 8.

1928.

# முகவுரை.

---

இவ்வாசகப் புத்தகம் மத்தியதர வகுப்பு மாணவர்க்காக யான் எழுதியவற்றுள் எட்டாம் (மூன்றும் பாரம்) வகுப்பிற்குரியது. இது தற்கால கல்வி முறைக் கேற்றவாறு புதியதோர் முறையில் எழுதப்பெற்றுளது. இதில் இதிகாசம், சுகாதாரம், அரசியல், பிராணி சாத்திரம், நீதிக்கதைகள், தாவர நூல், விவசாய நூல், கட்டுக்கதை சம்பந்தமான பாடங்களே அமைந்துள்ளன. இவைகளே நம் நாட்டு மாணவர்க்கு ஏற்றனவும், இன்றியமையாதனவுமாக உள்ளன.

ஒவ்வொரு பாடமும் மாணவர் மனக் கிளர்ச்சியோடு கற்கத் தக்கதாக எழுதப்பட்டுள்ளது. பாடங்களின் வசனப்போக்கும், பொருள் அமைதியும் முறையே உயர்த்தப்பட்டிருப்பதோடு, சொற்செறிவும், பொருள் நுட்பமும் விரவிய தன்மையில் நன்கு விளங்குமாறு எழுதப்பட்டுள்ளன. இதில் அமைந்துள்ள சித்திரப் படங்கள் பாடங்களின் கருத்திற்கேற்பச் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூலின் 15, 16-வது பாடங்களைக் கற்பிக்கையில், ஆசிரியர் மாணவர்க்கு அவ்வப்பயிர்களை நேரிற்காண்பித்துப் போதித்தல் நலம்.

மாணவர்க்குப் பலவிதத்திலும் பயன்படும்படி நீதிமுறை யொன்றையே உணர்த்தும் செய்யுட்களை முழுதுங்கொள்ளாது, பல விஷயங்களும் தழுவிய கதை சம்பந்தமான செய்யுட் பாடங்களும் இதிற் சேர்க்கப்பட்டுள்ளன.

இதனைக் கற்கும் மாணவர் அறிவிலும், ஒழுக்கத்திலும், உலகானுபவத்திலும், தமிழ்த் தேர்ச்சியிலும் முன்னேற்றம் பெறுவர் என்று நம்புகிறேன்.

இதனைக் கண்ணுறும் ஆசிரியர்கள் தங்கள் கலாசாலை-களில் இதனைப் பாடப்புத்தகமாக வைத்து என்னை யாதரிக்க-வேண்டுகிறேன்.

இந்நூலின் முன்னேற்றத்தைக் கருதிக் கூறப்பெறும் விஷயங்களை அன்பார்ந்த வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளக் காத்திருக்கிறேன்.

இங்ஙனம்,

நே. ரா. சுப்பிரமணியன்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
5 - JUN 1928
MADRAS

# பொருள் அடக்கம்.

## வசன பாடங்கள்.


| பாடம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | கல்விச் செல்வம் ... ... ... | 1 |
| 2. | பரதன் சகோதர பக்தி ... ... | 4 |
| 3. | நீர்யானை ... ... ... ... | 11 |
| 4. | திருஞான சம்பந்தர் ... ... ... | 14 |
| 5. | நெருப்புக்கோழி ... ... ... | 25 |
| 6. | மனுச்சோழன் ... ... ... | 29 |
| 7. | 'பிளேக்' என்னும் பெருவாரி நோய் ... | 36 |
| 8. | கோபாலகிருஷ்ண கோகலே ... ... | 41 |
| 9. | பவளம் ... ... ... ... | 48 |
| 10. | ஆண்டாள் ... ... ... | 53 |
| 11. | புகழேந்திப் புலவர் ... ... ... | 57 |
| 12. | நரம்பு மண்டலம் ... ... ... | 68 |
| 13. | இந்திய ரப்பர் ... ... ... | 73 |
| 14. | 'கொக்கோ' என்னும் செடி ... ... | 77 |
| 15. | தாவரங்களைத் தாக்கும் பூச்சிநோய் ... | 79 |
| 16. | தாவரப் பூச்சிநோயைத் தடுக்கும் விதம் ... | 86 |
| 17. | அதிவீரராம பாண்டியன் ... ... | 91 |
| 18. | ஐக்கிய நாணய சங்கம்... ... ... | 97 |
| 19. | நல்லொழுக்கம் ... ... ... | 103 |
| 20. | 'டைமன்' என்னும் பிரபு ... ... | 106 |

## செய்யுட் பாடங்கள்.


| | | |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் ... ... ... | 113 |
| 2. | அரிச்சந்திரபுராணம்: சூழ்வினைக் காண்டம் ... | 114 |
| 3. | நீதிநெறி விளக்கம் ... ... ... | 117 |
| 4. | சுந்தர காண்டம் ... ... ... | 122 |
| 5. | தனிப் பாடல் ... ... ... | 123 |
| 6. | திரிகடுகம் ... ... ... ... | 124 |
| 7. | நட்பு ... ... ... ... | 126 |

# வசன பாடங்கள்.



பரதன் சகோதர பக்தி. [பக்கம் 4]

# செந்தமிழ் வாசகப் புத்தகம்.

## (எட்டாம் வகுப்பு)

---

### 1. கல்விச் செல்வம்.

உலகிலுள்ள எல்லாச் செல்வங்களும் இருபெரும் பிரிவினுள் அடங்கும். அவை கல்விச்செல்வமும், பொருட்செல்வமும் ஆம். அவற்றுட் கல்விச்செல்வமென்பது கல்விபயின்று அதனால் அடையும் ஞானம். பொருட்செல்வம் என்பது இடம், பொருள், ஏவல், வாகனாதிகளால் அடையும் நலன். இவ்விரண்டினும் கல்விச்செல்வமே உயர்ந்தது.

உலகில் அரசன் மிக்க செல்வம் உற்றவனாபினும், வறிஞரான கற்றோர்க்கே சிறப்பதிகம்.

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் —மன்னற்குத்
தன்றேய மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு.

என்பதில் எவ்வளவு உண்மையுள்ளது! சோழனோடு மனஸ்தாபப்பட்டுச் சேரனாடு அடைந்த கம்பர் அங்குத் தமது புலமையைப் புலப்படுத்தி, அச்சேரனையே தமக்கு அடைப்பை தாங்கியாகக்கொண்டு சோழன்பால் வந்தமையே இதற்கோர் சிறந்த உதாரணமாகும். ஒட்டக்கூத்தர் என்னும் கவிச்சக்கரவர்த்தியின் பாதங்களைப் புவிச் சக்கரவர்த்தியாகிய குலோத்துங்க சோழன் 'தலைமேற்றாங்குவேன்' என்று தானே பெருமையுடன் சொல்லின், கல்விச்சிறப்பைக் கணிக்க யாராலாகும்?

ஒருவகையில் பிரமனிலும் கலைவல்லார் பெருமை பெற்றவர் என்னலாம். ஏனெனில்,

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு.

கல்விச்செல்வத்தால் அடையலாகாத சில உலக இன்பங்களைப் பொருட்செல்வத்தால் ஒருவாறு பெறலாமெனினும், கல்விச்செல்வமே யுயர்ந்ததாம். ஏனெனில், பொருட்செல்வம் நிலையற்றது. கல்விச்செல்வம் அஃதுடையான் அழிந்தாலும் அழியாது. பொருட்செல்வமோ கள்வராலும், தாயத்தாராலும், ஒரு சமயம் அரசராலும், துஷ்டராலும், பிறவலியராலும் கவரத்தக்கது; நெருப்பு நீர் முதலிய பூதங்கள் அதனைச் சேதப்படுத்தும்; பிறர்க்கீவதால் குறைவுறும். கல்விச்செல்வமோ முற்கூறிய எவற்றாலும் அழியாது; கொடுத்தாலும்குறைவுறாது. கல்விச்செல்வம் தேடுங்காலை ஆரம்பித்துத் துன்பமாய் பின்னர் இன்பம் பயக்கும் அது காரணமாக, அதைத் தேடும் முயற்சியைக் கைவிடலாகாது. கல்விச்செல்வம் பெறவிரும்புவோர் கலாசாலைக்குச் சரியான காலங்களிற்சென்று குருவை வணங்கி அவன் இருவென இருந்து, பாடம் சொல்லென்றவுடன் சொல்லி, ஆசான் போதிப்பனவற்றை ஆவலுடன் மனத்துட் கொள்ளவேண்டும். வீடடைந்ததும், கலாசாலையிற் பயின்றவற்றைப் பலமுறை நினைத்துப்பார்த்துத் தன்னோடொத்த மாணுக்கர்களோடு படித்தவற்றை வினவியும், வினவியவற்றுக்கு விடையிறுத்தும் வருதல்வேண்டும். இதனால் பயின்ற கல்வியறிவு மேன்மேல் அதிகரிக்கும்.

சிலர் தாங் கற்றவற்றைப் பேணுது மேன்மேல் கற்கத் தொடங்குவர். அவ்வாறு செய்தல் கையில் இருந்த கருந்தனத்தைச் சிதறிவிட்டுப் பின்னர் அதனை அரிப்பரித்துச் சேகரிப்பார் தன்மையே ஒக்கும். கல்வி பயிலுங்காலும் அத்துணை வறுமை வரினும், அதனைப் பொருட்படுத்தாது இரந்தேனும் கற்கவேண்டும். 'பிச்சைபுகினும் கற்கை நன்றே' என்ற ஆன்றோர் வாக்கைக் கற்கத்தொடங்குவோன் மறக்கவொண்ணுது.

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகில் தெரிந்து.

என்பதை நன்குதெளிந்து தக்கநூல்களையே பயில வேண்டும்.

தமக்குக் கிடைத்தற்கரிய காலத்தைச் சிலர் வம்பளப்பதிற் செலவிடுகின்றனர். பரீட்சாகாலம் நெடுநாளைக் கப்பாலுள தெனநினைந்து விளையாட்டில் சிலமாணவர் பொழுதைச் செலவிடுகின்றனர். இது பெருந்தவறு. இளமையை வீணுக்கலாகாது. காலத்தையும் வீணிற் செலவிடலாகாது. 'இளமையிற் கல்' என்பதையும், 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்பதையும் மனத்திலிருத்திக் கல்விச் செல்வத்தைப் பெற இடைவிடாது முயலவேண்டும்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்

என்றதால், கல்லாதார் விழிபெற்றும் குருடராய் முடிவர். கல்லாதார் பகுத்தறிவில்லா மரத்தோ டொப்பிடப்படுவர். கல்வியறிவற்றவன் கற்றோர்சபை சார்ந்து வாய்திறத்தல், 'புல்லுருக்-

கண்டஞ்சும் பிராணிகள்போல், எம் வல்லுருக் கண்டஞ்சன்மின்' என்றலை ஒக்கும். சுருங்கச் சொல்லின் கல்வியாலடையக் கூடியன அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருடார்த்தங்களுமே யாம் 'அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்' ஆதலின், எவ்வளவு கற்றிருப்பினும் எவரும் செருக்குக் கொள்ளலாகாது.

## 2. பரதன் சகோதர பக்தி.

தன் மாதுலன் ஊரினின்று அயோத்தியடைந்த பரதன், அங்கு நடந்துள்ள விஷயங்களை நகரின் அலங்கோல நிலையினின்று நன்கறிந்தான். அவன் இராமனிடத்து நீங்கா அன்பும், பக்தியும் பூண்டவன் ஆதலால், அவனைத் தன்னுயிரினும் அருமையாகக் கருதிவந்தனன். கைகேசியிடம் கோபமும், சோகமும் அவனுக்குண்டாக, அனலிலிட்ட மெழுகுபோல் மனமுருகி ஒருதாய் தன் குழந்தைகளுக்கு இத்தகைய கொடுமை இழைப்பாளோ வென்றெண்ணி, அவளைநோக்கி, 'அன்னாய்! நீ என்னைப் பெற்றதுண்மை ஆயினும், எனக்கு எமனே ஆனாய். நீஎனக்கு மகுடாபிஷேகம் செய்வித்தற்காக வெண்ணி என் தமயனைக் காடேக விடுத்தாய். அதனால் என் பிதாவை வானேகவிடுத்தாய். பாவி! நீசெய்த அநீதியை நீயே அறிந்திலை. நீ செய்த காரியம் என்நெஞ்சைப் பிளக்கின்றது. உன்னைப் பெண்ணென்றும் தாயென்றும் பாராது, என்கைவாளால் இப்போதே உன்னுயிரைப் போக்கிவிடுவேன் ஆனால் இராமன் என்னை வெகுளுவான் என்றெண்ணியே ஏதும் செய்திலேன்' என்று கூறி, 'ஆ! இராம இராம!'' எனப் புலம்பினான். அடியற்றமரம்போற்றரையில் அவன் வீழ்ந்தான்; விம்மினான்; நெஞ்சம் பதைத்தான்; மூர்ச்சை யடைந்தான்.

பிறகு பலர் தேற்ற மூர்ச்சைதெளிந்து, தன்பிதாவின் ஈமக்கடன்களைச் செய்து, இராமனைத்தேடப் புறப்பட்டான். சத்துருக்கனனும், தாய்மாரும், வசிஷ்டரும்,சுமந்திரன் முதலிய அமைச்சர்களும், சுற்றத்தாரும்,நண்பரும் அவனைப் பின்தொடர்ந்தனர். எல்லாரும் இராமன் சென்றவழியே சென்று கங்கைக்கரையை யணுகினார்கள்.

இங்ஙனம் இவர்கள் அணுகுதலைக்கண்ட குகன் என்னும் வேடர் தலைவன்,பரதனது மனநிலையை உணராது, இராமனைக் காட்டிற்குப்போக்கியதுமன்றி அவனோடு பொருதற்கும் சேனையொடு பரதன் வருகின்றானெனவெண்ணி, அவனோடு அமர்புரிய ஆயத்தமானான். அக்குகனை இன்னானென அறியாத பரதனுக்குச் சுமந்திரன்,'அண்ணால்! இவன் கங்கையில் நாவாய் உய்ப்பவன்; இராமனுக்கு ஒரு துணைவன்; குகன் என்னும் பெயரினன்.' என்று கூறினான். அதுகேட்ட பரதன் தானேசென்று அவனைக்காணப் புறப்பட்டேகக் குகன் தனது தவறான எண்ணத்திற்கு வருந்திப் பிரமித்து நின்றான்.

வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகைஇழந்த முகத்தானை
கற்சனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான்.

நம்பியுமென் நாயகனை ஒக்கின்றான் அயல்நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான் தவவேடம் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பென்றான்.

உண்மை உணர்ந்ததும் குகனும், பரதனும் ஒருவரை ஒருவர் தழுவி அளவளாவினர். வந்தவாறு யாதெனக் குகன் வினவ, பரதன் 'முழுதுலகளித்த தந்தையார் முந்தையோர்

முறையினின்று வழுவினர். அதனை நீக்கி மன்னனைக் கொணர்-வான் வந்தேன்' என்றான். உடனே குகனுக்குப் பரதனிடத்-திற் பேரன்புண்டாய் அவனை நோக்கி,

தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை என்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கேழ் ஆவரோ தெரியி லம்மா

என்று பலவாறு புகழ்ந்து தொழுதான். பின்னர் பரதன் குகனை நோக்கி, 'நமது தமயனார் எவ்வழி ஏகினர்?' என, குகன், 'வீர! இவ்வழியே சென்றார். அந்நெறியை நானே உனக்குக் காட்டுவேன்' என்றான். அக்கணமே பரதன் அவ் வழியை நோக்கிக் கானெனக் கடிதுசென்று இராமன் தங்கி யிருந்த பள்ளியைக்கண்டு பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான். 'என் அண்ணா! என்னாற் கந்தமூலாதிகளை உண்டீரே! பஞ்-சணைமீது துயிலும் நீர் பார்மீது படுத்தீரே! இவற்றையெல்லாம் கண்டும், என்னுயிர் இன்னும் நீங்கவில்லையே!' என்றேங்கிப் புலம்பினான். குகன் அவனைத்தேற்றி புறப்பட வேண்ட, பரதன் அதற்கு இணங்கினன்.

குகன் ஒரு படகைக்கொண்டுவந்தான். இராமனைத் தேடிச்செல்லும் இரு சகோதரரும், தாயரும் அதில் ஏறினர். பிறர் வேறு படகுகளில் ஏறினர். பரதனேறிய படகைச் செலுத்திய குகன் கோசலையை அறியானாய் இவர் யாரெனப் பரதனை வினவினன். பரதன், 'தேவரும் தொழும் இவர் நம் பிதாவின் மூத்தமனைவியார். பாவியாகிய நான் பிறந்ததால் தம்மகனான இராமனைத்தோற்றுநிற்கும் பெரியாராகியகோசலை யார்' என்றான். குகன் அவளுடைய பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான். இப்படித் தொழுவோன் யாவன் எனக்

கோசலையினவப் பரதன், 'தாயே! இவன் ஸ்ரீராகவருக்குத் தம்பி; இலக்குவற்கும் சத்துருக்கனனுக்கும் எனக்கும் மூத்தோன்' எனக் கோசலை மனமகிழ்ந்து, 'இராமன் காடுற்றதும் நலமேயாயிற்று. இதுவரை நால்வராயிருந்த நீவிர், ஐவீர் ஆபினீர். இனி ஐவீரும் ஒருவீராய் நெடுங்காலம் இருங்கள்' என்றுசி கூறினள்.

பின்பு அவள் பக்கத்திருந்தவள் யாரெனக் குகன் கேட்கப் பரதன், 'இவர் சுமத்திரா தேவியார்; இராமருக்குத் தம்பியும் உளன் என்று சொல்லத் தக்கவனும், இராமரை அரைக்கணமும் பிரியாதவனுமான இலக்குமணனைப் பயந்த பெருமாட்டியார்' என்றான். பிறகு எஞ்சி நின்ற கைகேசியை யார்எனக் குகன்வினவினன். அதற்குப் பரதன், 'தன்கணவன் துஞ்சவும், இராமரை வனம்புகவும்செய்து உலகத்தைத் துயர்க்கடலில்ஆழ்த்திய இப்பழிகாரியை நீயின்னும் அறியவில்லையா? இவளே என்னை ஈன்றவள்' என்றான். குகன் அவளையும் தாயெனத் தொழுதான். இதற்குள் படகும் கங்கையின் தென்கரையைச் சேர்ந்தது. யாவரும் கரையில் இறங்கினர். பிறகு அவர்கள் பலகாவதங்கள் நடந்து பாரத்துவாஜர் ஆச்சிரம மடைந்தனர். அப்பால் அங்கிருந்து வெகுதூரம்சென்று இராமன் இருக்கும் சித்திரகூடத்தை அடைந்தார்கள்.

பெரும்படையோடு பரதன் வருவதைக் கண்ணுற்ற இலக்குவன், 'அண்ணா! அதோபார்த்தீர்களா! பரதன் பெருஞ்சேனையோடு உங்களுடன் பொருதற்கு வருகின்றான். எனக்கு விடை கொடுங்கள். அரைக்கணத்தில் அவன் படையைத் தூளாக்கி விடுகிறேன்' என்றான். அப்போது இராமன் இலக்குவனைப் பார்த்து, 'இளையோய்! எத்தகைய பகைவரையும்

எளிதில் நீ வென்றுவிடுவாய் என்பது ஒருபக்கம் இருக்கட்டும். பரதனுடைய பண்பறியும் ஆற்றல் உனக்கில்லாமற் போயினமைக்குப் பெரிதும் விசனிக்கின்றேன். அவன் நம்மேற்பூண்ட பேரன்பால் நம்மை யழைத்துச் செல்ல எண்ணி இங்கு வருகின்றான். இவ்வுண்மையைச் சிறிது பொழுதில் நீ அறிவாய்' எனறான்.

இதற்குள் பரதனும், சத்துருக்கனனும் சேனைக்குமுன் ஓரே ஓட்டமாய் ஓடித் தம் கண்ணீர் மார்பிற்சோர இரகுநாதன் திருவடிகளில் வீழ்ந்து பேச நாவெழாதிருந்தனர். இராமன் அவர்களைத் தேற்றி மார்புறத்தழுவிக் கொண்டு ஒளிகுன்றிய முகமுடைய பரதனைப் பார்த்து, 'தம்பி! நம் தந்தை சுகமா?' என, பரதன், 'அண்ணு! என்புகல்வேன்! நுமதுபிரிவென்னும் நோயாலும், கைகேசியின் வரமென்னும் எமனாலும் தந்தை உயிரிழந்துவிட்டாரே! என்செய்வேன்?' என்று பிரலாபித்தனன். இம்மொழிகளைச் செவியிற்கொண்ட இராமன்,

நந்தா விளக்கனைய நாயகனே! நானிலத்தோர்
தந்தாய்! தனி அறத்தின் தாயே! தயாநிலையே!
எந்தாய்! இகல்வேந்தர் ஏறே! இறந்தனையோ
அந்தோ இனிவாய்மைக் காருளரே இவ்வுலகில்?

'பலகாலம் வரங்கிடந்துபெற்று என்னை உயிரினும் அரிதாகப் போற்றினீரே. அவ்வாறு போற்றப்பட்ட நானே உமதுயிர்க்குக் கூற்றானேன். நான் காடடைந்ததற்குப் பொறாது வீடுஎகிய உமதன்பை என்னென்பேன்! நீதிபதியுடன் நீர் காத்த உலகைச் சிறுவர்களாகிய நாங்களோ புரக்கத் தகுந்தவர்கள்!' என்று புலம்பினன்.

இதற்குள் பின்னடைந்துவந்த பரிசனங்கள் இராமனிருக்கும் இடத்தைச் சார்ந்தனர். அப்போதும் இராமன் தன் அழுகையையும், புலம்பலையும் நிறுத்தவில்லை. அதுகண்ட வசிஷ்டர், 'இராமா! இவ்வுலகில்பிறந்தார் என்றேனும் அழிவது உறுதி. அஃதுனக்குத் தெரிந்ததே. அறுபதினாயிரம் வருஷம் செம்மை திறம்பாது கோலோச்சிய பிறகு உயிர்விட்ட உன் தந்தைக்காக நீ வருந்தலே. காலனைத் தடுக்க யாரால் ஆகும்? இனிச் செய்யத் தகுவனவற்றைச் செய்' என, இராமனும் சிறிது தேறி, தான் மேற்செய்யவேண்டிய உத்தரகிரியைகளை நிறைவேற்றினன்.

விஷயம் யாவுமுணர்ந்த சானகியடைந்த துன்பத்திற்களவில்லை. யாவரும் சிறிதுதுயரமாறியதும் இராமன் பரதனைப் பார்த்து, 'தம்பி! பிதா இறந்த பின்னர் இராஜ்யம் ஆள்வாரற்றிருத்தல் ஒண்ணுமா? நீமுடிசூடாது ஈண்டுவந்தது எவ்வளவு தவறு?' என, அவன் கைகூப்பி நமஸ்கரித்து, 'அண்ணா! ஆட்சிக்கும் எனக்கும் யாது சம்பந்தம்? உம்முடையதன்றோ அந்த ஆட்சி? நான் மாபாவி. கணவனைக் கொன்ற காதகிபெற்ற காதகன். இஃதுணர்ந்தும் உயிர்விடாமல் நான் இருத்தற்குத் தற்கொலை செய்வதால் நேரும் பாவத்துக்கு உள்ளாக வேண்டிவருமே என்ற அச்சந்தான் காரணம். கைகேசியின் பாவமும் எனக்குநேர்ந்த பழியும் சிறிதே தீருமாறு நகர்க்குத் திரும்பி அரசாள வேண்டுகிறேன்.' என்றான். அதற்கிராமன், 'தாய் சொற்கேட்டலும், தந்தை சொற்கேட்டலும் ஈசற்கே செயுங்கடன் என்று எண்ணுக பெற்றோர் கூறுமுன்பே குறிப்பின்படி யொழுகவேண்டிய நான், அவர்கள் மொழிந்த பிறகும், அவர்கள் ஆணைக்கு முரணிநிற்றல் நீதியோ? நீ

உத்தம சகோதரனுயின், உடனே ஒருகாரியம் செய். நீ விரைவில் நாடடைந்து முடிபுனைந்து ஆட்சிபுரிக.' என்றான்.

பரதன்—அண்ணா! முன்னோருக்கே அரசியல் உரியது. அஃதென்னதன்று. எனக்கே உரியது என்பீராயின், அதனை நான் உங்களுக்குத் தருகின்றேன் ஏற்றருளவேண்டும்.

இராமன்—தம்பி! நீ என்பால்வைத்த அன்பாற் கூறிய இவ் வார்த்தைகள் நீதிமொழிகளல்ல. நின் மொழிப்படி நான் செய்யின், நம் தந்தையின்மொழி பொய்த்துப்போம். பெற்றோர் மொழியைப் பொய்யாக்கவோ பிள்ளைகள் பிறந்தோம்? பதினான்கு வருடங்கள் கழிந்தன்றி நான் திரும்பேன். தந்தை மொழிகேட்டு நான் அரசாள இசையவில்லையா? நான்கூறுவதைத் தடுத்து அரசாள நீ மறுத்துரைப்பது முறையோ?

இதுகேட்ட வசிஷ்டர் இராமனுக்குப் பல நியாயங்களைக் கூறி அவனை முடிசூடுமாறு வற்புறுத்தினர். அதற்கும் அவன் இணங்காது பல நியாயங்கள் கூறி அரசாட்சியை ஏற்க மறுத்துவிட்டான்.

பரதன்—இரகுபதி! நீர் வாராது நான் ஊர்புகேன். உம்முடன் ஆரண்யத்திலேயே தங்குவேன். நாட்டை யார் வேண்டுமாயினும் ஆளுக.

இராமன்—தம்பி! இதுவரை நீ என்மொழிகடந்து நடந்ததில்லை. இப்போது அவ்வாறு செய்யத் துணிந்தது ஆச்சரியமே. அப்புறம் உன் இஷ்டம். நான்வருவேன் என்று மட்டும் கனவினும் கருதாதே.

பரதன்—(மிகவும் வருந்தி) ஆனால் சரி. உமது விருப்பின்படி நான் ஊருக்குத் திரும்பிச்செல்வேன். ஆனால் ஒன்று




இராமன் பாதுகைகளைப் பரதன் பெறுதல். (பக்கம் 11)

தெரிவித்துக் கொள்ளுகிறேன் பதினான்கு ஆண்டு கழிந்தவுடன், அயோத்தியை யடையீரேல் உம்பேல் ஆணை, நான் அக்கினிப்பிரவேசஞ்செய்வேன்.

பரதன் வேண்டியவாறு இராமன் செய்வதாக ஒப்புக் கொண்டான். ஆட்சி இராமனது என்பதற் கறிகுறியாக பரதன் முடிசூடாது அவனது பாதுகையைப் பெற்று கிரீடமாக அதனைத்தாங்கி வந்தவழியே மீளலுற்றான். அவனைத் தொடர்ந்து வந்தவரும் அவனுடன் மீண்டனர். பரதன் அயோத்திக்குச் செல்லாது நந்திக்கிராமம் என்னும் ஊரிற் றங்கி பாதுகையை அரியணை மீதமர்த்தி அதனைத் தொழுத வண்ணமாய் இராமன் திருப்ப வரும்வரை அரசு புரிந்துகொண்டிருந்தான்.




## 3. நீர்யானை.

நீர்யானை ஆப்பிரிக்காவில் நீலநதி தீரத்தில் வசிக்கும் ஒரு நாற்காற்பிராணி. ஐரோப்பியர் இதனை 'ஹிப்போபடமஸ்' என்பர். அச்சொல்லுக்குக் கிரீக்பாஷையில் நீர்க்குதிரை என-

பது பொருள். குதிரையைப் போல் உரத்துக் கனைப்பதால், முன்சொன்ன பெயரால் அவர்கள் இதைக் கூறினர்போலும். ஆயினும், அதன்உடல் யானையின் உருவத்தையே ஒத்திருப்பதால், அதை நீர்யானை என்று புகல்வதே பொருத்தமுடையது.

நன்கு வளர்ந்தால், இம் மிருகம் பத்துப் பன்னிரண்டடி நீளமும், நான்கு அல்லது ஐந்தடி உயரமும் உள்ளதாயிருக்கும். அதனுடலும் கால்களும் குறுகியவை. அதன் ஒவ்வொரு அடியிலும் நான்கு குளம்போடு சேர்ந்த நான்குவிரல்கள் உண்டு. அதன் வயிறு தரைநோக்கித் தொங்கியிருக்கும். அதன் தலை மிகப்பெரிது. வாயே அதன் சிரத்தில் பருத்தகன்ற உறுப்பு. அதன் பற்கள் மிக்க வெண்மையாகவும், திண்மையாகவும், வரிசையாகவும் வாய்ந்திருக்கின்றன. சிறிய செவிகளும், கண்களும் அதற்குண்டு. இவ்விலங்குக்குக் கொம்புஇல்லை. நீர்யானையின் சருமம் பல வரைகளோடும், மங்கலான கறுப்பு நிறமுள்ள மிகச்சிறிய புள்ளிகளோடும் இருக்கும்.

நீர்யானை சாக பக்ஷணி. புல், கோரை, வேர், கிழங்கு, இலை, தழை முதலியன அதன் உணவாம். தண்ணீரில் வெகு நேரம் தங்கியிருக்கும் வேட்கை அதற்கதிகம். பாதங்கள் அகன்றிருப்பதால், விளைபுலங்களில் மேயும்போது, ஆங்குள்ள பயிர்களை அது மிதித்துத் துவைத்து நாசமுறச் செய்யும்.

நீர்யானைகள் கூட்டம் கூட்டமாகக் கூடி வாழ்வன. ஆற்றங்கரையில் நிழலும், கோரையும் அமைந்த இடங்களில் இளைப்பாறும். யாராவது அதனைப் பின்பற்றினால் அது நீரில் மூழ்கி ஒளிந்துகொள்ளும். அப்போது, அது தன் மூக்கை எவர்க்-

கும் புலப்படாமல் தந்திரமாக அமைத்துக்கொள்ளும். இதன் தோலிலுள்ள புரைகளில் ஒருவிதத் தைலம் எப்போதும் வெளிப்பட்டுக்கொண்டிருக்கும். அதனால் அது புனலில் எவ்வளவுகால மிருந்தாலும், அதற்கு எவ்விதத் தீங்கும் விளைவதில்லை.

இயற்கையில் ஹிப்போபடமஸ் அதிகச் சாந்தமான பிராணி. அது எவர்க்கும் எவ்வித இன்னலும் செய்வதில்லை. ஆயினும் தனக்குத் தீங்கு செய்தவர்மேற் பாய்ந்து, கூரிய பற்களாற் கடித்து அது ஊறுபடுத்தும். வேட்டையாட விரும்புவோர், பெரும் பள்ளங்களைப் பறித்து அவற்றின் மேற்பரப்பைப் புல்லால் மூடிவைப்பார்கள். அதைத் தின்ன வரும் அம்மிருகம் பள்ளங்களில் விழுந்துவிடும். அங்கு முன்னரே அமைக்கப்பெற்ற கழு, அதன் உடலிற்பதிந்து இன்னற்படுத்தும். அச்சமயம் வேட்டைக்காரர் அதனைக் கொன்று விடுவார்கள்.

பயிர் பச்சைகளைப் பாழாக்கி நஷ்டத்தை உண்டாக்குவதால், அது உயிர்த்திருக்கும்போது மனிதருக்கு அதனால் தீமையே நேரும். ஆயினும், இறந்தபிறகு அதைப் பலவிதங்களில் மனிதர் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். அதன் சிறந்த மாமிசத்தை ஆப்பிரிக்கர் விரும்பி உண்கிறார்கள். எல்லா உறுப்புகளிலும், உண்பவர்களுக்கு அதன் நாவே அதிக உருசியுள்ளதாம். அதன் சருமத்தால் கேடகம் முதலிய ஆயுதங்கள் செய்யப்படுகின்றன. பற்பல பொருளைச் செய்வதற்கு அதன் தந்தம் பயன்படுகின்றது.

## 4. திருஞான சம்பந்தர்.

சோழநாட்டிலே, சீர்காழியில் அந்தணர் குலத்திற் கௌண்டன்ய கோத்திரத்திற் பிறந்த சிவபாதவிருதயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் எல்லா நல்லொழுக்கமும், சிவபக்தியுமுடையவர். அவர் பகவதியார் என்ற கற்பரசியை மணந்து இல்லறம் நடத்தி வந்தனர். அக்காலத்திற் சைவசமயம் அருகியும், சமண பௌத்த சமயங்கள் பெருகியும் வருதலை அவர் உணர்ந்து, அவற்றை ஒழித்துச் சைவசமயத்தை நிலைநிறுத்தப் புத்திரப்பேறு விரும்பி, அப்பதியிலுள்ள சிவபெருமானை நோக்கி நற்றவம் புரிந்தனர். அத்தவத்தின் பயனாய் அவர்களுக்கு முருகக்கடவுளின் அமிசமாக ஆவணித் திருவாதிரையில் பிள்ளையார் திருவவதாரம் செய்தனர்.

பெற்றோர் அப்பிள்ளையாரைக் கண்மணிபோற் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தனர். மூன்றும் பருவத்தில் சிவபாத விருதையர் நீராடச் செல்லும்போது, அவரைப் பிரிய மனமில்லாது, பிள்ளையார் தந்தையாரைப் பின்தொடர்ந்தனர். தந்தையார் திருக்குளத்தை யடைந்து நீரிலமிழ்ந்து செபம் செய்யும்போது, அவரைக் காணாத பிள்ளையார், கரையில் நின்றபடியே தோணியப்பரது கோயில்விமானத்தின் சிகரத்தை நோக்கி அழ ஆரம்பித்தனர். தோணியப்பர், அவர்மீது கருணைகொண்டு, பார்வதிதேவியாருடன் இடபாரூடராய்த் தோன்றித் தேவியைப் பார்த்து, 'இதோ குழந்தை அழுகின்றான்; உன் பாலைப் பொன் வட்டிலிற் பெய்து, இவனுக்கு ஊட்டு.' என்றருளினர். தேவியார் அவ்வாறே தமது பாலோடு சிவஞானமும் கலந்தூட்டினர். பிள்ளையார் அதனைப் பருகிக் களிப்புற்றனர்.

திருக்குளத்தின் நீரில் மூழ்கியெழுந்த சிவபாதவிருதயர் வெளியேறிப் பிள்ளையார் வாயிற் பாலிருந்ததைப் பார்த்து, 'யார் பாலைப் பருகினுய்?பால் கொடுத்தாரைக் காட்டு.' என்று கடிந்துரைத்தார். அப்போது பிள்ளையார் ஆகாயத்தில் உமா-தேவரைச்சுட்டித் 'தோடுடைய செவியன்' என்ற பதிகத்தை யாவரும் வியப்பும் உருக்கமும் அடையப் பாடினர். அப்பால் அவர் தோணியப்பர் எழுந்தருளிய திருக்கோயிலை யடைந்த-னர். பிள்ளையாரைப் போலச் சிவபாதவிருதயர் அக்கடவுளைக் காணப்பெற்றிலர்.ஆயினும் யாவும்தோணியப்பரின்திருவருள் எனச் சிந்தித்துப் பிள்ளையாரைப் பின்பற்றிச் சென்றனர். அங்கு நிகழ்ந்தவைகளை உணர்ந்த வேதியர் யாவரும் கோயிற்புறத்தில் வந்து கூடினர். பிள்ளையார் தோணியப்பர்-மேல் திருப்பதிகம் பாடி கோயிலினின்று புறப்பட, அந்தணர் எதிர்வந்தழைத்து அவரை நமஸ்கரித்தெழுந்தனர். சிவபாத விருதயர் பிள்ளையாரைத் தோளின்மேல் வைத்துக்கொண்டு பலவகை வாத்தியங்கள் ஒலிக்கத் தமது இல்லம் அடைந்தனர்.

இப் பிள்ளையார் சீர்காழியிற் பிறந்ததால், காழிப் பெருமான் என்றும், சிவபெருமான், உமாதேவி ஆகிய இருவ ராலும் ஆளப்பட்டமையால் ஆளுடையபிள்ளையார் என்றும், சிவஞானசம்பந்தமுடையவராதலால் ஞானசம்பந்தர் என்றும் அழைக்கப்பெற்றனர். இந்தப் பாலபக்தர் செய்தருளிய அரிய காரியங்கள் பல. அவற்றுள் சில வருமாறு:

ஒருநாள் திருஞானசம்பந்தர் திருக்கோலக்கா என்னும் தலத்தையடைந்து, கைத்தாளம் போட்டு ஒரு திருப்பதிகம் பாடினுர். அப்போது ஸ்ரீபஞ்சாக்ஷரம் பொறிக்கப்பெற்ற

பொற்றாளம் அவர்கையில் தெய்வீகமாக வந்தது. இது சிவனருளே யென்றெண்ணி அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் பல தலங்களுக்குச்சென்று தேவாரப் பதிகங்கள் பாடி வந்தனர்.

ஒரு சமயம் திருநீலகண்டப்பெரும்பாணர் விறலியாரோடு யாழ்கொண்டு சீர்காழி யடைந்தனர். பாலறாவாயர், அவர் வரவை யறிந்து,கூசி வெளிநின்ற அவரை எதிர்கொண்டழைத்துத் திருக்கோயிலின் புறமுன்றிலிலிருந்து யாழ் வாசிக்கவேண்டினர். பாணர் அங்ஙனமேசெய்ய, ஆளுடைய பிள்ளையார் அகமகிழ்வு அடைந்தனர். பெரும்பாணர், பிள்ளையாரோடு பல சிவதலங்கள் சென்று, அவர் அருளும் பதிகங்களைத் தமதுயாழிற் பண்ணோடு இசைத்துப்பாடினர். அப்பால் பிள்ளையார் அடியார்கள் சூழ்ந்துவரச் சிதம்பரத்தை யடைந்து சுவாமி தரிசனம்செய்து பதிகம் பாடினார். அங்கிருந்து பெரும்பாணர் அவதரித்த திருவெருக்கத்தம்புலியூருக்கு அவர் வேண்டுகோளாற்சென்று, திருமுதுகுன்றத்துக்குப்போய் சுவாமிதரிசனம் செய்தனர்.

ஒருநாள் திருநெல்வாயிலரத்துறையை நோக்கிப் பிள்ளையார் நடந்துசெல்லும்போது, அரத்துறை நாதரான சிவபெருமான் அத்தலத்தாரைக்கொண்டு அவருக்கு முத்துச் சிவிகையும்,முத்துக்குடையும்,முத்துச்சின்னங்களும் கொடுத்துக் களைப்பை ஆற்றியருளினார்.

சீர்காழியில் சம்பந்தருக்கு உபநயனம் நடந்தபொழுது, அந்தணர் அவருக்கு மந்திரோபதேசம் செய்யப்போகையில், சம்பந்தர் அவர்களுக்கு வேதமந்திரங்களை எடுத்தோதிப் பஞ்சாக்ஷரத் திருப்பதிகம் பாடியருளினர்.

திருநாவுக்கரசு சுவாமிகள் ஆளுடைய பிள்ளையாரின் பெருமைகளைக் கேள்விப்பட்டுச் சீர்காழிக்கு வந்து அவரது திருவடிகளில் விழுந்து வணங்க, அவர், அவரை வணங்கி, 'அப்பரே!' என்று உபசரித்துச் சிலநாள் அவருடன் அளவளாவி யிருந்து பிறகு அவரைத் தலயாத்திரைசெய்ய அனுப்பி விட்டுத் தாம் சீர்காழியில் இருந்தனர். பிறகு, சம்பந்தர் பலதலங்களுக்கு யாத்திரை சென்று திருமருகலுக்குச் சென்றார். அப்போது, தான் மணம் செய்துகொள்ளும் பொருட்டு ஒரு கன்னிகையை உடன்கொண்டு வழிச்சென்ற வணிகன் ஒருவன், பாம்பு தீண்டிப் பரலோகமடைந்தான். அக்கன்னியின் துயரைக்கண்டு சகியாத காழிப்பெருமான் அவளுக்கிரங்கி ஒரு பதிகம் பாடி விடந்தீர்த்து அவ்வணிகனை உயிர்ப்பித்தனர்.

மற்றொரு சமயம் சம்பந்தரும் அப்பரும் வேதாரண்யத் தலத்தையடைந்து கோவிலினுட் புகுந்தனர். அங்கு வேதங்கள் அருச்சித்துச் சாத்தின நாள்முதல், திறக்க முடியாமல் அடைபட்டே யிருந்த திருவாயிலுக்கு முன்வந்து, அக்கதவைத் திறக்கமுடியாமையால், வேறொரு பக்கத்தில் திருவாயிலிட்டு அதன் வழியே அடியவர் செல்கின்றார்கள் என்பதைக் கேட்டறிந்தனர். பின்பு அக்கதவைத் திறக்கும்படி அப்பமூர்த்திகள் திருப்பதிகம் பாடவே, கதவு திறக்கப்பட்டது. அவ்விருவரும் சுவாமி தரிசனம்செய்து வெளிவந்த பிறகு, அப்பர் வேண்டுகோளின்படி சம்பந்தர் ஒரு திருப்பதிகம் பாடத்தொடங்கி முதற்பாசுரம் பாடினவுடன் அக்கதவு அடைத்தது. அன்றுதொட்டு இன்றுகாறும் அது திறத்தலு மடைத்தலுமாகிய தன்மை வாய்ந்துளது.

அக்காலத்தில் சமணமுனிவர்கள் தங்கள் மதக்கோட்பாடுகளை எங்குமுபதேசித்துப் பலரைத் தமது சமயத்திற் சேர்த்து வந்தனர். மதுரையை யாண்ட கூன்பாண்டியனும், அவன் குடிகளிற் பலரும் சமணர் ஆயினர். ஆயினும் அம்மன்னவன் மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும், கூர்மதியமைச்சராகிய குலச்சிறையாரும் ஆங்குச் சைவராகவே இருந்தனர்.

அவர்கள் ஆலவாய்ப்பெருமானை யடைந்து, 'சமணப்படுகுழியில் விழுந்த அரசனும் மற்றவரும் சைவராகி உய்யுமாறு தேவரீர் அருள்புரிக' என்று இறைஞ்சினார்கள். ஆங்குச் சுவாமி தரிசனம் செய்வதற்குச் சீர்காழியிலிருந்து ஓரந்தணர் வந்திருத்தலைக் கண்டு, அவரை, 'சீர்காழியில் என்ன விசேஷம்?' என்று வினவினர். அவ்வேதியர் திருஞான சம்பந்தரின் திரு அவதாரத்தையும், அவர் செய்தருளிய அற்புதங்களையும் முறையாகக்கூறி, 'அவர் விரைவில் மதுரைக்கு வரக்கூடும்' என்று அறிவித்தனர். அதுகேட்ட மங்கையர்க்கரசியாரும், அமைச்சரும் மனமகிழ்ச்சியுடன் திருஞானசம்பந்தருடைய நல்வரவை விரும்பித் திருமுகம் ஒன்று தீட்டி, அதை அம்மறையோர் கையிற் கொடுத்தனுப்பினர். வேதியர் வேதாரண்யம் அடைந்து சம்பந்தரை வணங்கி ஓலையைத் தந்துவிட்டுச் சென்றனர்.

சில தினங்களில், பரசமய கோளரியாகிய சம்பந்தர் கூடலம்பதியை யடைந்து, கோயிலுட் சென்று இறைவனை ஏத்திப் பதிகம் பாடி, அவனருள் பெற்று வெளியே வந்து ஒரு திருமடத்தில் அமுது செய்து அன்றிரவு அங்கேயே தங்கியிருந்தனர். பகைமையும், பொறாமையும் மேற்கொண்ட

சமணர்கள், ஒருவேளை தம்மை அவர் வென்றுவிடுவாரோ என்றஞ்சி அரசன் அனுமதியின்மேல், அவர் எழுந்தருளிய திருமடத்தில் நெருப்பு மூட்டினர். இச்செய்கை அரசனறிய நிகழ்ந்ததென்று நாயனர் உணர்ந்து, ஒரு பதிகம் பாடி அத-னிறுதியில் 'பையவே சென்று பாண்டியற் காகவே' என்-றருளினர். இங்ஙனம் அவர் 'பையவே' என்றது, அரசன் செயற்கையாற் கெட்டவனென்றும், சீர்திருந்தக்கூடியவன் என்றும் அவர் நினைத்ததாலும், இயற்கையில் கருணை நிரம்-பிய மனம் அவருக்கு இருந்ததாலுமே. உடனே அந் நெருப்புப் பாண்டியனுக்கு வெப்பு நோயாய், மெல்லமெல்ல அவனை வருத்தத் தொடங்கியது.

காயலால் வருந்திய காவலன் நிலையை அவனது காத-லியாரும், குலச்சிறையாரும் உணர்ந்து எத்துணையோ மந்-திரங்களையும், மருந்துகளையும் பிரயோகித்தும், நீங்காமை கண்டு ஏங்கினர்கள். நோய் தீர்க்கப்புகுந்த சமணர், தங்கள் மாயமந்திரங்களைப் பிரயோகித்தும், அந்நோய் மாறுமைகண்டு மதிமயங்கினர்கள். மறுநாட்காலை அரசன்கட்டளையைப் பெற்-றுப் பாண்டிமாதேவியாரும், மந்திரியாரும் காழிப்பெரு-மானை வணங்கி அரசற்குற்ற பிணியை நீக்கியருளுமாறு அவரை அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர்.

நாயனரைக் கண்ணுற்றதும், பாண்டியன் சிறிது அறிவு வரப்பெற்று, 'சுவாமி! கடையேனுக் குண்டான இந்நோயைப் போக்கியருள்க' என்றான். அதனைக்கேட்ட அமணர் மதிகலங்கி, 'அரசே! உமது வலப்புறநோயை இவரும், இடப்புறத்து இன்னலை நாங்களும் போக்குதற்கு அனுமதி தரல்வேண்டும்' என்றனர். அரசனும் அதற்கு



பாண்டியன் நோயைச் சம்பந்தர் போக்கியது.

இணங்கினன். சமணர் அருகதேவனை எண்ணி மயிற்பீலியால் தடவி நீர் தெளித்தனர். அது நெருப்பிற் பெய்த நெய்போலாயிற்று; காயல் முன்னிலும் அதிகரிக்கவே, அமணர் செருக்கழிந்து, செய்வது தோன்றாமல் திகைத்து நின்றனர்.

பிறகு திருஞான சம்பந்தர் பாண்டியன் பூசிக்கொள்ளுமாறு கொடுத்தருளத் திருநீற்றை எடுத்தனர். சமணர் இது மாய நீறென்று மறுத்தார்கள். நாயனார் கோயில் மடைப்பள்ளியிலுள்ள நீற்றைக் கொண்டுவரும்படி நியமித்து, திருநீற்றுப்பதிகம் ஓதி, அதனை அரசன் மேனியிற் பூசினார். உடனே அரசனுடைய வலப்புறநோய் முற்றும் நீங்கிற்று. கூடற்காவலன் சம்பந்தரை நோக்கி, 'தேவரீர் எனது இடப்பக்கத்துக் காயலையும் தணித்தருள்க' என்றிறைஞ்சினன். நாயனார் முன்போலவே திருநீற்றையிட்டு அம்மன்னவன் நோயை விரைவிற் போக்கினார். கூன்பாண்டியன் தன் கூன் நிமிரப்பெற்று நெடுமாறனென்று கூறும்படி விளங்கினன். பிறகு அப்பாண்டியன் திருநீறணிந்து அருவினை நீங்கிச் சைவனாகிச் சம்பந்தரிடம் பஞ்சாக்கர உபதேசம் பெற்றுப் பரிசுத்தனாயினன்.

சமணர் மனம் புண்பட்டது. அவர்கள், சம்பந்தரை எதிர்த்து, 'மழலைமொழி நீங்காத நீ, காகதாலி நியாயமாய் உனது இழிந்த சூழ்ச்சி பொருந்திய ஒரு வித்தையால் காவலனது காயலைப் போக்கினாய். அதனால் நீ செருக்குக் கொள்ளாதே. நீ உன் மந்திரத்தை ஓரேட்டில் எழுது. நாங்களும் எங்கள் மந்திரத்தை அங்ஙனமே ஓரேட்டில் எழுதுகிறோம். இரண்டையும் தீயில் இடுவோம். வெந்த ஏட்டுக்குரியோர் தோற்றவர், மற்றவர் வென்றவர் ஆவர்' என்று

சபதமிட்டனர். சம்பந்தர் அதற்கு இசைந்தனர். பிறகு இருவரும் தம் ஏடுகளைத் தீயிலிட்டுச் சமணர் இட்ட ஏடு சாம்பர் ஆயிற்று. சம்பந்தர்போட்ட ஏடு பசும் பொன்னிறத்துடன் பொலிந்தது.

இம்முறையும் தோற்ற சமணர், திரும்பவும் சம்பந்தரை எதிர்த்து, இருவர் பாசுரமும் தீட்டிய ஏட்டை வைகை யாற்றில் விடுகிறதென்றும், எதிர்சென்ற ஏட்டுக்கு உரியோர் வென்றவர் என்றும், தோற்றவர் கழுவேற வேண்டுமென்றும் கூறினர். பிள்ளையார் இதற்கும் இணங்கினர். சமணர் ஏட்டைப் போட்டவுடன், வேகவதி வேகமுடன் கீழ்ப்பக்கம் அதை இழுத்துச் சென்றது. சம்பந்தர் ஏடோ நீரை யெதிர்த்து விரைந்தது. இங்ஙனம் கனல் வாதத்திலும், புனல் வாதத்திலும் தோற்ற சமணர் பலர், தங்கள் சபதப்படி கழுவேறிக் காலனூரை அடைந்தனர். சிலர் சைவராகி உயிர் பிழைத்தனர். அன்றுமுதல் பாண்டியநாடு முழுவதும் எப்பொழுதும்போல் சைவசமயத்தைக் கொண்டொழுகியது.

ஒரு சமயம் பௌத்தர்கள் இருக்கிற போதிமங்கைக்குச் சமீபத்திற் செல்லும்போது; 'பரசமய கோளரியார் வந்தார்' என்று விருதுகூறி முத்துச்சின்னமூதிப் பிள்ளையாருடைய அடியவர்கள் ஆரவாரித்தனர். இதனையறிந்த பௌத்தாசிரியராகிய புத்தநந்தி, அநேக பௌத்தர்களுடனே சம்பந்தர் விருது முதலியவற்றைத் தடுத்து, 'எங்களோடு மதவாதம் செய்யவேண்டும்' என்றான். நாயனாரும் அதற்கிணங்கினர். அஃதறிந்த சம்பந்த சரணாலயர் என்பவர், பௌத்தர் நாயனார்க்கிழைத்த அபசாரம் பொறாதவராய்த் தேவாரப்பாசுரத்தில் ஒன்றை ஓதி, 'இப்புத்தனது தலை உருளுமாறு இடி

இடித்து விழக் கடவது' என்று சபிக்க, உடனே இடி இடித்துப் புத்தநந்திமேல் விழுந்து, அவனை யமலோகத்துக் கனுப்பியது. அதன் பின்னர் எதிர்வாதம் செய்த சாரிபுத்தனை அச் சம்பந்த சரணாலயரே வாதில் வென்றனர். பிறகு சாரிபுத்தனைச் சார்ந்த யாவரும் சைவர் ஆயினர். இது நிற்க.

திருமயிலாப்பூரில் வைசியர் குலத்தில் சிவபக்தியும், அடியாரிடத்து அன்பும் மிகுந்த செல்வமுமுடைய சிவநேசர் என்பவர், ஆளுடைப்பிள்ளையார் ஞானப்பால் அருந்தியது முதலிய அற்புதங்களைக் கேள்வியுற்று அறிந்தனர். மகப்பேறின்றி மிகக்கவலை யடைந்த அவர் சிவபூசை, மகேசுரபூசைகள் செய்து, ஒரு பெண்குழந்தையைப் பெற்று, அக்குழந்தை பூமகள்போல் பொலிவுற்றிருந்தமையின், அவளுக்குப் பூம்பாவை என்ற பெயரை இட்டிருந்தனர். அவளுக்கு மணப்பருவம் வந்தவுடன், அவளுடைய குணாதிசயங்களைக் கண்டு வியந்து, அவளைத் திருஞான சம்பந்தருக்கே திருமணம் செய்துகொடுப்பதாகத் தமது பந்துக்களறியக் கூறி மகிழ்ந்தனர்.

ஒருநாள், அப்பூம்பாவை கன்னிமாடத்தை யடுத்த பூஞ்சோலையிற் சென்று பூக்கொய்யும் பொழுது, ஒரு பாம்பு மல்லிகைப் பந்தலில் மறைந்திருந்து, அவள் விரலில் விஷப்பற்கள் நான்கும் அழுந்தக் கடித்துச் சென்றது. பூம்பாவை புந்தி சோர்ந்து பூமியில் வீழ்ந்தாள். சேடியர் கன்னிமாடத்துக்கு அவளை மெல்லத்தாங்கிச் சென்றனர். மணிமந்திர ஔடதங்களால் எவ்வளவோ சிகிச்சை செய்தும், பயன் படாது பூம்பாவை உயிர்துறந்தாள். ஆளுடைப்பிள்ளையார் மனைவியாராகவே அவள் கருதப்பட்டவள் ஆகையால், அவ-

ளுடலைத் தகனம்செய்து அங்கத்தை அவரிடமே ஒப்புவிக்க வேண்டுமென்று சிவநேசர் கூறி, அதனை ஒரு குடத்திலிட்டுக் கன்னிமாடத்தில் வைத்திருந்தனர். கொஞ்சகாலத்தில் திருஞான சம்பந்தர் திருவொற்றியூருக்கு எழுந்தருளிய செய்தியைச் செவியுற்று, அவரைச் சிவநேசர் மகிழ்ச்சியோடு எதிர்கொள்ள, சம்பந்தர் திருமயிலைக்கு வந்து சுவாமி தரிசனம் செய்து, பூம்பாவை செய்தியை அறிந்து, அவள் அங்கம் தங்கிய குடத்தை வருவித்து ஒரு பதிகம் பாடினர். உடனே பூம்பாவை உயிர்த்தெழுந்தாள். அவளை மணக்குமாறு சம்பந்தரைச் சிவநேசர் வேண்ட, நாயனர் 'நாம் அவளை உய்வித்த தன்மையால், அவளுக்குத் தந்தைமுறை யாதலால், மணத்தல் தகாது' என்று கூறி மறுத்துவிட்டனர்.

அவர் சீர்காழிக்கு மீண்டபின்னர், சிவபாதவிருதயரும், சுற்றத்தாரும் திருநல்லூரிலே நம்பியாண்டார் நம்பி என்பவரின் நன்மகளை ஞானசம்பந்தருக்கு, அவரது பதினாறுவது வயதில் திருமணம் செய்வித்தனர். அப்போது நாயனர் மனைவியாருடன் அவ்வூர்ச் சிவாலயத்துட்சென்று ஒரு பதிகம் பாடியருளவே, சிவபெருமான் சோதிப் பிழம்பாய்த் தோன்றினர். உடனே தம்பதிகளும், அவர் சுற்றத்தாரும், நண்பரும் அந்தச் சோதியிற் புகுந்து வைகாசி மூல நக்ஷத்திரமாகிய தினத்திற் சிவசாயுச்சிய பதவியை அடைந்தனர்.

இவர் இற்றைக்கு 1200 வருடங்களுக்குமுன் வாழ்ந்தனரெனச் சரித்திர நூல் வல்லாரும், நாலாயிரம் ஆண்டுகளுக்குமுன் இருந்தவரெனப் புராண நூலாரும் கூறுவர். இவர் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருப்பதிகங்கள்

சற்றேறக்குறைய 4000 பாடல்கள் அடங்கிய 384திருப்பதிகங்கள். அவை தேவாரத் திருமுறை என்னும் நூலில், முதல் மூன்று திருமுறைகளாக அமைந்துள்ளன.

---

## 5. நெருப்புக்கோழி.

உலகத்திலுள்ள பறவைகளிற் பெரியது நெருப்புக்கோழி என்ற தீப்பறவை. அது அரேபியாவிலும், ஆப்பிரிக்காவிலுமுள்ள பாலை வனங்களிற் காணப்படுகிறது. நெருப்பையே சிலசமயங்களில் விழுங்குவதாலும், கோழிபோல் உருவடைந்திருப்பதாலும் இதற்கிப் பெயர் உண்டாயிற்று. இது உணவின்றிச் சின்னாள்வரை உயிருடன் ஜீவித்திருக்கக்கூடுமாதலாலும், கழுத்துநீண்டிருப்பதாலும் இதற்கு ஒட்டகப்பட்சி என்ற மற்றொரு பெயருமுண்டு. அதன் உயரம் மனிதன் உயரத்தினும் இரண்டொரு அடி அதிகமானது. அது பட்சியாயினும், பெரிய சிறகுகளைக் கொள்ளாமையாலும், உடல் கனத்திருப்-



பதாலும், அதனாற் பறந்துசெல்ல முடியாது. ஆனால் அது விரைந்து ஓடும். பரிமாவும் அதன் பெருவேகத்தை எளிதில் மேற்கொள்ள முடியாது.

தீப்பறவையின் உருவினைப் பக்கத்திலுள்ள படத்திற் பாருங்கள். அதன் கழுத்து எவ்வளவு நீண்டுள்ளது! உடலை நோக்க அதன்தலை எவ்வளவு சிறிது! கழுத்தில் இங்கொன்று அங்கொன்றாக உரோமம் முளைத்துள்ளது. தொடைகளில் இறகுகளில்லை. அதன்கால்கள் வன்மையாயும், செதில்களோடும் அமைந்துள்ளன. பாதங்களில் இரண்டே விரல்கள் அதற்கு உண்டு. தீப்பறவை ஓடும்போது, அவ்விரல்கள் மணலையும் கற்களையும் பிற்புறத்தில் எற்றிவிடுகின்றன.

இப்பறவைக்குப் புல், பூண்டு முதலிய தாவரங்களே ஆகாரம். அது உட்கொண்ட ஆகாரம் எளிதில் மசிவதற்காகக் கற்கள், கண்ணாடித் துண்டுகள் முதலியவற்றைப் பிறந்த இரண்டொரு தினங்களுக்குப் பிறகு உட்கொள்ளுகிறது. தாய்ப்பறவை முட்டையிடுகிறகாலத்திற் பளிங்கு ஆணி முதலிய எதையும் விழுங்கிவிடுவதால்' சிலசமயம் அதற்கு மரணம் வருதலுமுண்டு. இவ்வினப் பெட்டைப் பறவைகள் இரண்டு மூன்று ஒருங்கு சேர்ந்து, மணலைப் பறித்துப் பள்ளமாக்கி அதில் முட்டையிடுவதுண்டு. ஒவ்வொரு முட்டையும் பெரிய இளநீர் அளவுள்ளதாக இருக்கும். முட்டைகள் பொரிவதற்குச் சூரிய வெப்பம் போதுமானதாயினும், அம்முட்டைகளுக்கு இராக்காலங்களில் தீங்குண்டாகாமல், ஆண் பறவையும் பெண்பறவையும் முறையாக மாறிமாறி அடைகாத்துப்பாதுகாக்கும். அதற்கு மோப்பமறியும் தன்மையுண்டாதலால், யாராவது முட்டைகளைத் தொட்டால், அதனை

மோப்பத்தால் அறிந்து, பிற முட்டைகளையும் உடைத்துப் பாழாக்கிவிடும். ஆதலால் முட்டைகளை எடுக்கவேண்டிய தவசியமான காலத்தில், அரேபியர்கள் அவற்றைக் கரத்தாற் பரிசியாமல் நீண்ட மரக்கொம்பால் வெளிப்படுத்தி எடுத்துக் கொள்ளுவார்கள்.

நெருப்புக் கோழியை வேட்டையாடிப்பிடிப்பது அதிகக் கஷ்டமானது. அரேபியர்கள் அதிக வேகமாக ஓடும் குதிரைகளின் மேலேறி அதனைத் தொடருவார்கள். அப்பறவை எப்போதும் விரைந்தே ஓடுமாதலால், வேட்டைக்காரர்கள் மாற்றுக் குதிரைகளையும், மனிதரையும் வைத்துக் குறுவழியிற் போய் நாலைந்து தினங்கள் அதைத் தொடர்ந்து செல்லுவார்கள். வேடர்களுக்குப் பயந்தோடும் அப்பறவை, தீனியின்றிச் சோர்வடையும். தானினித் தப்பியோட முடியாதென்று தோன்றும்பொழுது, அது தன்னுடைய தலையை மணலிலேனும், புதரிலேனும் மறைத்துக்கொள்ளும். அங்ஙனம் தான் அவர்களைப் பாராவிட்டால், அவர்களும் தன்னைக் காணார் என்பது அதன் கருத்துப்போலும்.

இப்பறவை மனிதருக்கு அதிக உபயோகமானது. அதை எளிதிற் பழக்கலாம். பழக்கப்பட்ட அப்பறவை இரண்டு மனிதரைச் சுமந்துகொண்டு விரைந்து செல்லும். அதன் இறகிலும், தோகையிலுமுள்ள இறகுகள் நீண்டும், பளபளப்பாயும், மெதுவாயும், தூய வெண்மையாயுமிருக்கும். மேனாட்டு மாதர்கள் அவ்விறகுகளை அதிக விலைகொடுத்து வாங்கித் தலையில் ஆபரணமாகத் தரித்துக் கொள்ளுவார்கள். கறுப்பு நிறமுள்ள இறகுகள் விலை உயர்ந்தவை அல்ல.

வடஆப்பரிக்காவிலும், தென்னாப்பிரிக்காவில் கேப் காலனி மாகாணத்திலும் அநேகர் அப்பறவைகளின் இறகு-களுக்காகவே அவற்றைப் பழக்கி வளர்க்கிறார்கள். காட்டிற் கூட்டம் கூட்டமாகச் சஞ்சரித்த காலத்தில் ஒத்துவாழும் இவைதோட்டத்தில் வளர்க்கப்படின் அடிக்கடி சண்டையிட்-டுக்கொள்ளும். ஆதலால் ஒன்றன் குடும்பத்துக்கும், மற்றதற்-கும் மத்தியில் வேலி கோலிவிடுவது வழக்கம்.




நமதிளவரசர் இங்குள்ள படத்திற் காணப்படுவதுபோல் மூன்றிறகுகள் செருகிய தலைமுடியை அணிந்து கொண்டிருக்கிறார். அதில் ஜெர்மன் பாஷையில் இருமொழிகள் அமைந்து-உள்ளன. அவற்றின் பொருள், 'நான் உழைக்கிறேன்' என்பதே. கிரெஸீ போருக்குப்பிறகு ஆங்கில இளவரசர் ஒருவர், இவ் வணியை அணிந்தார் என்றும், அவ்வழக்கத்தையே ஏனைய இங்கிலாந்து இளவரசரும் பின்பற்றினர் என்றும் சொல்லப்-படுகிறது.

வருஷத்திற்கு இருமுறை அவற்றின் இறகுகள் தாமா கவே உதிர்ந்து புதியவை முளைக்கும். இயற்கையில் உதிர்வன நிலத்தில் விழுவதால், நிறமும் அழகும் குறைந்து விடுமாத லால், அங்ஙனம் உதிருவதற்குச் சிலநாட்களின் முன்னரே தோட்டக்காரர் அவற்றைக் கத்தரித்தெடுத்துக் கொள்ளு-வார்கள். ஒருமுறை ஒரு பறவையில் எடுக்கப்படும் இறகு-களின் விலை எழுபது ரூபாவுக்கு அதிகமாம்.

இதன் இறைச்சியும், முட்டையுள்ளிருக்கும் ஊனும் சிலர்க்கு உணவாம். ஊன்கழிந்த ஓட்டைச் சிலர் ஜலபாத்திரமாகவும், சிலர் அவ்வோட்டை உடைத்து வில்லைகளாகத் தரித்துக் கயிற்றில் நெருக்கமாகக் கோத்து மேகலையாகவும் அணிந்துகொள்ளுகிறார்கள்.

---

## 6. மனுச்சோழன்.

சோழநாடு எக்காலமும் நீர் நில வளங்கள் கொண்டது; புலவர்களால் பலவாறு புகழப்பெற்றது; பூமிதேவிக்கு முகம்போல் விளங்குவது. அதற்குத் திலகமென விளங்குவது திருவாரூர் என்னும் அதன் ராஜதானி.

முன்பொரு காலத்தில் அந்த நகரில் தருமத்துக்கு உறைவிடமானவனும், சூரியகுல மன்னவனுமான மனுச்சோழன் தன் குடிகளுக்கு ஐவகைத் துன்பமும் உண்டாகா வண்ணம் செங்கோல் ஓச்சினன். அவன் மனுநீதி வழுவாது ஆட்சி புரிந்தவன் ஆதலின், மனுச்சோழன் என்ற பெயர் அவனுக்கு வழங்கலாயிற்று. இம்மன்னனுக்குப் பிள்ளையில்லாக் குறை பெருங் குறையாய் இருந்தது. தனக்கு ஒரு மகவு அளித்திடுமாறு அவன் பரமசிவனை வேண்ட, கருணையங் கடலாகிய ஈசன் ஓர் ஆண் மகவு பிறக்குமாறு அருளினர். இரத்தினமாலை யென்னும் அரசியினிடம் அப்பாலகன் பிறந்தான். அப்பொழுது மனுச்சோழன் அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை.

அக்குழந்தைக்கு ஆரூர்ப் பெருமான் திருநாமமாகிய வீதிவிடங்கன் என்று பெயரிட்டுக் கண்மணி போன்று மன்னன் பேணி வந்தனன். வீதிவிடங்கன் மாரிகாலத்து

வாழைக் குருத்தேபோல் நாளொருமேனியும், பொழு-தொரு பொலிவுமாக வளர்ந்து வருவானாயினன். தக்க பருவம் அடைந்ததும், சாஸ்திரப் பயிற்சியிலும்; ஞானம், ஈகை, தயை, இரக்கம், பொறை முதலிய நற்குணங்களிலும் அவன் சிறந்தவனானன். மற்றும் அரசர்க்குரிய வில்வித்தை, வாள்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம் முதலிய-வற்றை முறைபெறக் கற்று, யாவராலும் புகழப்பெற்று வந்தனன். அவன் ஒருநாள் தன் தந்தையைப் பணிந்து தியாகராசப் பெருமான் கோவிலுக்குச் செல்ல விடைகேட்-டான். மன்னன் தன் மகனுடைய பக்தியைக்கண்டு மகிழ்ச்சி-யடைந்து விடை கொடுத்தான்.

தன்னைப்போன்ற அரசகுமாரர்களும், சேனைகளும் சூழ, வீதிவிடங்கன் தேரேறிச் சுவாமி தரிசனத்துக்குப் புறப்பட்டான். அப்போது வந்தியர், மாகதர், சூதர் முதலியோர்களின் ஆரவாரமும், முரசு, சங்கு ஆதிய வாத்-திய ஒலியும் வீதிகளில் முழங்கின. சிறிது தூரம் சென்-றதும், ஒரு ஆன்கன்று துள்ளிக்குதித்து அண்டையிலிருந்-தோர்க்குத் தப்பி அத்தேர்ச் சக்கரங்களின் ஊடே பாய்ந்-தது. உடனே தேர்ச் சக்கரத்தால் அதன் உடல் சின்ன பின்னமாயிற்று.

அதனைக் கண்ட தாய், ஓடிவந்து ஓலமிட்டு அழுது துடி-துடித்துச் சோர்ந்து விழுந்து, சோகத்தால் பெருமூச்-செறிந்து நின்றது. தேரின்மேலிருந்த வீதிவிடங்கன் இப்-பாதகத்தைக் கண்டு தீயிலிட்ட மெழுகுபோல் மனமுருகிப் பதைத்து, இரதத்தினின்று கீழே விழுந்தான். பின்னர் அவன் சற்றுத் தெளிவுற்று, 'எனது உணர்வென்னும் பெரு-

மையைக் கொள்ளை கொள்ள வந்ததோ இப்பெற்றம்? அன்றித் தெய்வத்தின் சோதனையால் நடந்ததோ?' எனப் பலவாறு வாய்விட்டலறிக் கண்ணீர் தாரை தாரையாகச் சொரிந்தான். பின்பு எழுந்து, 'குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளுதல் போல, எம்பெருமானைத் தரிசிக்கச் சென்று, இத்தகைய மகாபாதகம் செய்தேனே! வாயில்லா இந்தப்பசு வெளியிட முடியாமல் மனதில் என்னென்ன நினைத்து வருந்துகின்றதோ! ஐயோ தியாகேசா! இப்பாவத்தை எங்குத் தொலைப்பேன்? மனுவெனும் கீர்த்திபெற்ற என் தந்தைக்கு நிந்தை வருவிக்கவோ பாவியேன் உலகிற் பிறந்தேன்? குலப்பெருமை முழுதும் என்னால் குலைந்ததே.' என்று பலவாறு பிரலாபித்தான். அப்பொழுது அருகிலிருந்த பலர், 'ராஜபுத்திர! ஏன் இவ்வாறு வருந்துகின்றனை! நீ விரும்பிச் செய்ததன்றே இது! தெய்வ சங்கற்பத்தால் நிகழ்ந்தது. இதற்கு வேதியர் கூறும் பிராயச்சித்தம் செய்துமுடித்து வருந்துதலை ஒழி' என்று தேற்றினர். தன் தந்தையறியுமுன், இப்பாவம் நீங்கக் கூடிய பரிகாரம் செய்ய எண்ணி, வீதிவிடங்கன் வேதியரிடம் சென்றான்.

இஃதிவ்வாறாக, கன்றின் பக்கத்தே கதறிக்கொண்டிருந்த தாய்ப்பசு துக்கத்தைச் சகிக்கமுடியாமல், தனக்கு நேரிட்ட வருத்தத்தை மனுச்சோழனிடம் குறையிரப்பதே முறையெனஎண்ணித் தனது சேங்கன்றை அங்கேதானே பசுந்தழைகளால் மூடிவைத்துவிட்டு அரண்மனை வாயிலையடைந்து, ஆங்குக் கட்டியிருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அசைத்து அடித்தது.

அப்போது ஏற்பட்ட ஒலியானது மனுச்சோழப்பெருமான் செவியிற்புகுந்தது. புகலும், அவன் துணுக்குற்று

எழுந்து எனது தேசுற்ற குலத்துக்கு என்னால் ஒரு மாசுற்றதே? யாது நிகழ்ந்ததோ இம்மணியதிர?' என அரண்மனை வாயிலை அடைந்தான். வாயிற்காப்போர் மன்னனுக்கு எதிரேவந்து அஞ்சலித்தவண்ணமாக, 'எம்பெருமானே! என்ன ஆச்சரியம்! இன்று ஒரு தலையிற்றுப்பசு நமது அரண்மனை வாயிலிற் கட்டியிருக்கும் ஆராய்ச்சி மணியைத் தன் கொம்புகளால் அசைத்ததோடு ஆறாத் துயர்கொண்டு ஆங்கு நிற்கின்றது' என்றார்கள். அரசன் உடல் நடுங்கிப் பதைபதைத்துக் கண்ணீர் விட்டு நிற்கும் பசுவைப் பார்த்து, 'ஐயோ! வாயில்லா இப் பிராணி வருந்துதற்குக் காரணம் என்னோ? இதன் குறை தீர்க்கும் வகை அறிகிலேனே' என ஏங்கிப் பெருமூச்சு விட்டான். பின்பு தன்னருகே நின்ற அமைச்சரை நோக்கி, 'இப்பசு இவ்வாறு ஏங்குவதற்கு ஏதோ காரணம் ஏற்பட்டிருக்கவேண்டும். அது உங்கள் அசாக்கிரதையால் நேர்ந்திருக்கவேண்டுமேயன்றிப் பிறிதில்லை' என்று கடிந்துகொண்டனன்.

அப்போது, அமைச்சருள் கல்வியறிவு கேள்வித்திறமைகளில் வல்லவனான ஒருவன் மன்னனை வணங்கி, 'மன்னர் மன்ன! நினது மதிமிக்க அரசிளங்குமரன் இன்றுப் பொன்னணிகளால் அலங்கரிக்கப்பட்டதோர் தேர்மீதேறிப் பல இளவரசர் சூழ்ந்துவர அரசவீதியிலே தேர் செலுத்திய போது, இளம்பசுங் கன்றொன்று, திடுக்கெனத் துள்ளி எவர் கண்ணுக்கும் தோன்றாது தேரின் முன் குதித்தோடியது. அத்தேர்ச் சக்கரங்கள் அக்கன்றை நசுக்கிக் கொன்றன. அதுகண்ட இத்தாய்ப்பசு வாய்விட்டலறி வருத்தம் மேலிட்டுத் தன் கொம்பினால் ஆராய்ச்சிமணியை அசைத்திருக்கிறது' என்றான்.

அச்சொற்கள் அரசன் செவியிற் புகவே, அவன் வெந்தழலில் இட்ட செந்தளிர்போல் வாடினன்; விடங்கொண்ட மீன்போல் துடித்தான்; பித்தம் தலைக்கேறினவன்போல் பிதற்றினன்; ஏங்கினன். 'என்னுட்சியின் மாட்சி நன்று, நன்று!" எனத் தன்னைத்தானே இகழ்ந்து கொண்டான். கன்றிழந்த பசுவேபோல் அவனது மனம் உருகினது; மேனி கருகினது.

இவற்றையெல்லாம் கண்ணுற்ற அமைச்சர் யாவரும் அரசனைப் பணிந்து, 'எம் இறைவனே! தாங்கள் இவ்வாறு துயர் உறுவதால் பயன் யாது? பசுக்கன்றைக் கொன்ற உமது புத்திரசிகாமணிக்கு வேதவிதிப்படி பிராயச்சித்தம் செய்வதே நீதியான அறமாம். அதனைச் செய்வதன்றி வீணே வருந்துதல் பயனற்றதே யாகும்' என்றனர்.

அம்மொழிகேட்ட வேந்தன், 'நீங்கள் அறைந்தவாறே செய்யின், ஆவியிழந்து கிடக்குமிந்த ஆன்கன்றின் தாயின் வருத்தம் நீங்கும் மருந்தாமோ? இன்று என் மகனைக் கொல்லாது விட்டால் தருமம் சலிக்கும். நான் மக்களுட்பதடியாவேன். குடிகளுக்கு நேரும் துன்பத்தை நீக்குவதுபோக, அவர்களுக்கு வருத்தத்தைவருவிப்பதோ என் ஆட்சிக்கழகு? ஆன்கன்றைக் கொன்றவர்க்குக் கொலைத் தண்டம் விதித்தலே நேர். என் மகனுக்கு அத்தண்டம் விதியாமல் பிராயச்சித்தம் செய்தால்; மனுமுறையை மனுச்சோழன் அழித்து விட்டான் என்னும் பழிச்சொல்லுக்கு ஆளாவேன். உங்கள் யோசனை நன்று நன்று.' என இகழ்ந்து உரைக்கலானன். அப்போது மதியமைச்சர், 'வேந்தே! இதுவரை அறிந்தறிந்து பசு முதலிய பிராணிகளை வதைத்தோர்க்கும் பிராயச்சித்தம் நடந்து வந்-

திருக்கிறது. அன்றியும் உமது மகனும் ஆன்கன்றைக் கொல்ல வேண்டுமெனக் கொலே புரியவில்லே. ஏதோ தற்செயலாய் உண்டானதற்குத் தேவரீர் இவ்வரும் குமாரனேக் கொலேபுரி-தல் சற்றும் பொருந்தாது.' என்றனர்.

இதைக் கேட்ட மனுச்சோழன் மனம் வாடி, 'நீங்கள் சற்றும் யோசனே யற்றவர்கள். பிற பசுக்களேப் பற்றி ஏன் பேசுகிறீர்கள்? எக்காலத்தில் எப்பசு இப்பசுவேபோலத் தன் கன்றிழந்ததற்காகக் கதறி ஓலமிட்டு இவ்வாறு நின்றது? இதனுல், இது பசுஉடம்பு எடுத்த உயர்தரப் பிராணியல்லவா? கன்று இழந்து கதறும் இப்பசுப் போலே, நானும் என் மகனே யிழந்து மனமுடைவதே முறைமை. நீங்கள் கூறும் பிராயச்சித்தம் தரும முறையாகாது' என்ருன். அரசன் அவ்வாறு உறுதியாகக் கூறிய மொழியைக் கேட்ட அமைச்சர் ஆதியோர் அவ்விடம் விட்டு அகல்வாராயினர்.

அப்போது மன்னன், தன் மந்திரிகளில் முதல்வனுன கலாவல்லவனே நோக்கித் தன் மகனே நடாத்திப்போய் அவன்-மீது தேர்ச்சக்கரங்களே உருட்டி வதைக்குமாறு ஆக்ஞாபித்-துச் சென்ருன். அம்மந்திரியோ யாதும் தெரியானுய் மதி-மயக்கங்கொண்டு, 'பாவம்! அந்தோ! என் செய்வேன்? இவ்-விளேஞனேக் கொல்வதும் பெரும் பாவம். இது செய்யேனுயின் இராஜத்துரோகி யாவேன். இத் தருமசங்கடத்துக்கு என்ன செய்வேன்?' என்று இருதலேக் கொள்ளி எறும்புபோல் திகைத்துச் சிறிது ஏங்கினுன். பிறகு இவற்றில் எதையும் செய்யாது தானே உயிர் நீப்பது மேலெனத் துணிந்து தன் இடையிலிருந்த வாளால் தன் தலேதுணித்து உயிர்விட்-டான். இதையறிந்த சோழன் இன்னுமொருவனேத் தன்

குமாரனைக் கொன்று வருமாறு அனுப்பின், அவனும் இவ்வாறு உயிர் நீத்தல் கூடும். அதனால் பாவம் பல்குமென நினைத்துத் தன்மகனைத் தேர்க்காலிற் படுத்திக் கொல்லத் தானே நேரிற் சென்றான்.

சென்றவன் முன்னர்ப் பசுங்கன்றிறந்த இடத்தை யணுகிக் குமாரனை மண்ணின்மீது கிடத்தி, தேரை அவன்மீது ஊர்ந்தனன். இவனது இச்செயற்கரும் செய்கையை வியந்த சேக்கிழார் சுவாமிகள்,

ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி யரிதோமற் றெளிதோதான்

என்று குறிப்பிட்டுள்ளது எவர் மனத்தை உருக்காது!

ஏகபுத்திரனென்றும் பாராது, கொலைபுரிந்த மன்னன் செய்கையை வியந்து விண்ணோர் யாவரும் வியப்படைந்தார்கள். மானிடர் இம் மன்னன் நீதியின் பெருமையை நினைந்து துணுக்குற்று, இறந்துபோன அரிய வீதிவிடங்கன் பரிவாற்றாது கண்ணீர் ஆறாகக் கரைந்தழுதனர். இது நிற்க.

விண்ணோர்கள், 'புத்திரனிலும் நியாயம் மேலெனக் கொண்ட நீயே நீதி மன்னன்; நீ வாழ்க' என வாழ்த்திக் கற்பகப் பூமாரி பொழிந்தனர். அதிவிரைவில், உமையொருபாகனான சிவபெருமான் யாவருக்கும் தரிசனம் தந்தருளினர். உயிர் துறந்துகிடந்த ஆன்கன்றும், அரசனது தனிக்கன்றான வீதிவிடங்கனும், அரசகுமாரனைக் கொல்ல அஞ்சி உயிர்விட்ட மந்திரியும் தூங்கியவர்போல் எழுந்தார்கள். அப்போது வீதிவிடங்கன் தனது அண்டையில் நின்ற அரு-

மைப் பிதாவின் பொற் கமலபாதங்களைத் தழுவித் தெண்டனிட்டான். பிதாவும் மைந்தனை எடுத்து மார்போடணைத்துக் கொண்டான். அவ்வாறே ஆவின் கன்றும் ஆனந்தங்கொண்டு தாயண்டை வந்து துள்ளிற்று. பழவரசாது நீதிக்கு இலக்கான மனுச்சோழன் தன் பெயருக்கேற்ற நீதியுடன் வெகுகாலம் சந்தோஷமாய்ச் செங்கோல் செலுத்திவந்தான்.

---

## 7. 'பிளேக்' என்னும் பெருவாரிநோய்.

இவ்வுலகத்தில் மனிதப் பிறப்பெடுத்த நாம் எவ்வித நோயு மற்றிருப்போமானல், அதுவே நமக்குப் போதிய செல்வமாம். ஆயினும் நாம் தேகசௌக்கியத்தைப்பற்றிக் கவனமாக இராததால் பலவித பிணிகளாலும் வருந்துகின்றேம். அநேக தொத்து வியாதிகள் விஷக்கிருமிகள் மூலமாக நமக்கு உண்டாகின்றன. அவற்றுட் சில நாமுட்கொள்ளும் வாயுவின்மூலமாயும், தண்ணீரின் மூலமாயும் நம்மைப் பீடிக்கின்றன. க்ஷயம், அம்மை என்பவற்றை விளைவிக்கும் கிருமிகள் சுவாசத்தின் மூலமாயும், விஷபேதியை விளைவிப்பவை, தண்ணீர் உணவு முதலியவற்ரேடு கலந்துட்சென்றும் கடும்பிணியை உடன்வரச் செய்யுமென்று முன் வகுப்பில் படித்தீர்கள் அல்லவா?

பிளேக் என்பது, வெளியிலிருந்து மனித இரத்தத்திற் கலக்கும் ஒருவகைக் கிருமியால் உண்டாகிறது. இந்த வியாதி எந்த நகரிலாவது உண்டானல், அங்குள்ளோர் அல்லோல கல்லோலப்பட்டு வருந்துவர். இந்த வியாதி கடுஞ்சுரத்தோடு ஆரம்பிக்கிறது, அக்காய்ச்சல் வரும்போது சிலர்க்குத் தற்போ

தம் இருக்கும்; சிலர்க்கு இராது. காய்ச்சல் இரண்டொரு நாள் அடித்தபிறகு பேரும்பாலும் உடலின் பொருத்துக்களில் கொப்புளங்கள் அல்லது கட்டிகள் கிளம்பிச் சட்டென மரணத்தை விளைக்கும். இக்கட்டிகள் புறப்படுமுன் மாள்வோரும் பலர் உண்டு.

இப்பிணி உண்டாகிறதற்குக் காரணம் யாதென அறிவோம். இந்த வியாதி கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய கிருமிகளால் முதல் முதலில் எலிகளின் இரத்தத்திற் கலந்து, ஒன்று பலவாகப் பெருகிப் பிராணிக்கு மரணத்தைத் தருகின்றன. எலிகள் அடிக்கடி ஒரு ஊரில் இறந்து விழுந்து கொண்டிருத்தல், அங்கு இப்பெருவாரிநோய் வந்ததற்கேற்ற அறிகுறியாகும். நமது தலைப்பேனைப்போல எலியின் சரீரமுழுவதும் ஒருவகைப் பேன்கள் அல்லது தெள்ளுப் பூச்சிகள் அதனிரத்தத்தைக் குடித்துக்கொண்டு பிழைத்திருக்கின்றன. பிளேக் வியாதி பீடித்த எலியின் இரத்தத்தை உட்கொள்ளும் தெள்ளுப்பூச்சிகளுடைய இரத்தத்தில் பிளேக் கிருமிகள் செல்லுகின்றன. ஆயினும் தெள்ளுப் பூச்சியைக் கொல்லத்தக்க ஆற்றல் பிளேக் கிருமிகளுக்கு இல்லை.



எலியின் இரத்தத்தால் உயிர் வாழ்ந்த தெள்ளுப்பூச்சி எலி இறந்தவுடனே, தனக்கு உணவு கிடைக்கக்கூடிய இடத்தை நோக்கிச் செல்லுகிறது. வேறு எலிகள் கிடைக்காவிட்டால், அது மனிதனை அடைந்து அவர்கள் உதிரத்தை உறிஞ்சி உட்கொள்ளும். அப்போது அதனிடத்துள்ள பிளேக் கிருமிகள் மனித இரத்தத்திற் கலந்து ஒன்று பலவாகப் பல்கி இரத்தம் முழுவதையும் கெடுத்து விடுகின்றன. அங்ஙனம் கெடுத்த-

வுடன் அச்சிறு கிருமிகள் மனிதருடலிற் காணும் கொப்புளங்களின்மூலம் வெளிச்செல்லும். அக்கட்டியிலிருந்து வரும் அசுத்தங்களைப் பிறர் தொட்டால், அவர்களுக்கும் அவ்வியாதி வந்துவிடும்.

இந்தப் பெருப்பிணி வராமல் செய்தற்கேற்ற வழிகள் இருக்குமானால் நாமவற்றைக் கைப்பற்றலாமன்றோ? பிளேக் வந்த ஊரிலுள்ள எல்லா எலிகளையும் பொறிகள்வைத்தேனும், நஞ்சிட்டேனும் போக்கிவிட்டால், அங்கு இந்நோய் பரவாது. இந்நோய் இல்லாத காலத்திலும் வீட்டிலுள்ள எலிகளைத் தொலைத்துவிட்டால், தின்பண்டங்களும் தானியங்களும் வீணாகமாட்டா. எலிகளுக்கேற்ற இருட்டான இடமும், குப்பை முதலியனவும், கவலையின்றித் திறந்துபோட்டிருக்கும் பொருள்களும் இல்லாவிட்டால், எலிக்கு வீடுகளில் என்னவேலை? இரும்படிக்கு மிடத்தில் ஈக்கென்ன காரியம்?

எலிகளைக் கொல்லுதலோடு வேறுபாயத்தாலும் இக்கொடிய பிணியைத் தடுத்துவிடலாம். அதாவது 'இன்னாக்குலேஷன்' பண்ணிக்கொண்டால் இந்தநோய் அணுகாது. சென்ற வகுப்பில் விஷபேதிக் கிருமிகள் இருந்த ஜலத்தில் பெர்மேங்னீஸ் பொட்டேஷ் என்ற பொடியைக் கலந்தால், அக்கிருமிகள் அதில் ஜீவிக்கமுடியாமல் சாகின்றன என்றறிந்தீர்கள் அல்லவா? அதுபோலவே மனிதர் இரத்தத்தில் இந்தப் பெருவாரி நோய்க்கிருமிகள் வாழமுடியாமல் மாளுமாறு தக்க மருந்தைச் செலுத்திவிட்டால் போதும். இங்ஙனம் செய்வதே இன்னாக்குலேஷன்.

இந்த வியாதி முன்வந்த பலவிடங்களிற் சோதித்துப் பார்த்து இன்னாக்குலேஷன் செய்துகொண்டவர்களுக்கு இவ்-

வியாதி வந்தால் நூற்றுக்குப் பத்தே பேரும், செய்து கொள்ளாதவர்களில் அறுபது பேரும் இறந்த செய்தியைச் சோதித்துப் பார்த்தவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

இன்னாக்குலேஷன் பண்ணிக்கொண்ட உடலின் உறுப்பு இரண்டொரு நாட்களுக்குச் சிறிது வலியையுண்டாக்கும். ஆயினும் அதற்காக யோசிக்கவேகூடாது. கசக்குமொரு மருந்தைப் புசித்தாற்றான் ஒருவருக்குவந்த நோய் நீங்கும் என்னில் அதைப்புசித்தே தீரவேண்டுமல்லவா? இன்னாக்குலேஷனால் வரும் அற்ப வலியைச் சற்றே பொறுக்க விரும்பாதவர் அம்மம்ம! அநியாயமாய் அருமையான தங்கள் உயிர்களை இப்பெரிய வியாதிக்கு ஒப்புக்கொடுத்துவிடுவது எவ்வளவு பரிதாபம்!

இன்னாக்குலேஷனால் ஒருவகை மருந்து நமது இரத்தத்திற் சேர்க்கப்படுகின்றதென்றோம். வைசூரி குத்துவதுபோல் ஒருபிராணியின் சரீரத்தில் பிளேக் ஜீவாணுக்களைச் செலுத்தினால், அதனுடலில் கொப்புளம் உண்டாகும். அதிலுண்டாகும் சாரத்தைப் பக்குவப்படுத்தி நமது தேகத்திற் குத்தினால், நமது இரத்தத்திற்கு ஒருவிதக் கேடும் நேரிட விடாமலும், பிளேக் கிருமி அதில் வாழ முடியாமலும் செய்துவிடுகின்றது. இது எவ்வளவு சிறந்த மருந்து!

ஓரூரில் பிளேக் நடக்கும்போது அங்குள்ள எலிகள் இவ்வியாதியால் பீடிக்கப்பட்டு இறந்து விழுமென்று சொன்னோமல்லவா? அப்படி விழும் எலிகளின்மேல் கிரோசனாயிலை உடனே விட்டுச் சுட்டெரித்து விடவேண்டும். எலிகளைக் கையால் தொட்டெறிந்துவிட்டால், அவற்றிலுள்ள தெள்ளுப் பூச்சிகள் தொட்டவர்களைத் தொடர்ந்து இந்த நோயை அவர்-

களுக்கு வருவிக்கும். எரிக்காவிடின் செத்த எலிமேலுள்ள தெள்ளுகள் அவை எறியப்பட்ட இடத்திற்பாவி தீமையை உண்டாக்கும்.

பிளேக் எலிகள் ஒரு வீட்டில் இறந்து விழுந்தால், இன்னுக்குலேஷன் செய்துகொள்ளாதவர்கள், உடனே வெளிச்சென்று ஊர்ப் புறத்திலுள்ள புலங்களிலேனும் மைதானங்களிலேனும் பலநாள் வசிக்க வேண்டும். பன்னுட் கழித்து முன்னிருந்த வீட்டிற்குச் செல்லுமுன், அவ்வீட்டின் தரை முதலியவற்றைச் சுட்டெரித்துவிடுதல் வேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால், இவ்வியாதி ஒருவிதக் கிருமி இரத்தத்திற் கலத்தலால் உண்டாகிறதென்றும், அது முதல் முதலில் எலிகளைத் தொத்துமென்றும், அந்த எலிகள் இறந்தால் அவற்றின் மேலுள்ள தெள்ளுகள் உணவு கிடையாததால் செத்த எலிகளைவிட்டு மனிதரைப் பற்றிக் கடித்து அவர்கள் இரத்தத்தைக் கெடுத்து மரணத்தை உண்டாக்குகின்றன வென்றும், இந்த வியாதி பரவுதற்கு எலிகளே காரணமாதலால் அவற்றைப் போக்கிவிடவேண்டுமென்றும், இன்னுக்குலேஷன் செய்துகொண்டாரை இந்நோய் பெரும்பாலும் அடுப்பதில்லையென்றும் கூறினேம்.

இந்நோயைத் தடுக்க இன்னுக்குலேஷன் செய்துகொள்ளாதவர்கள் தங்களுக்கு மட்டுமன்றித் தம்மைச் சேர்ந்தவர்களுக்கும் தீமையைத் தேடிவைப்பவரே ஆதலால், அவசியம் யாவரும் அம்மை குத்திக்கொண்டு நன்மை அடைவார்களாக.



## 8. கோபாலகிருஷ்ண கோகலே.

நமது இந்தியாவின் முன்னேற்றத்துக்காகத் தமது ஆயுள் நாளை அர்ப்பணம் செய்தவர்களில் ஒருவர் கனம் கோபாலகிருஷ்ண கோகலே இவர் பம்பாய் ராஜதானியில் கோலாப்பூரில், மகாராஷ்டிரப் பிராமண குலத்தில், எளிய குடும்பத்தில் கி.பி. 1866-ல் பிறந்தவர். இவர் கோலாப்பூரிலே கல்விகற்கத் தொடங்கி எப். ஏ. பரீக்ஷை தேறி 1884-ல் பம்பாய் நகரை அவர் அடைந்தார். அங்கே எல்பின்ஸ்டன் கல்லூரியே மிகச்சிறந்து திகழ்ந்ததால், கோகலே அதிற் பயின்று பி. ஏ. பரீக்ஷை தேர்ந்தனர். அதனினு மேலான கல்வியைப் பயிலவேண்டும் என்ற அவா அவருக்கு ஏற்படவில்லை.

பிறகு எத்தகைய தொழிலைச்செய்தால் நமது தேயத்துக்கு நன்மையைச் செய்யமுடியும் என்று அவர் சில நாள் சிந்தித்தனர். சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்து அவர்களை நன்னெறியில் முன்னுறச்செய்வதே சிறந்த தொழிலென்றும், அதனையே தாம் முதலிற் செய்யவேண்டுமென்றும் நிச்சயித்தனர். உபாத்திமைத்தொழிலை உத்தம ஊழியமென்று அவர் தேர்ந்தனர். அத்தொழிலில் அதிக வருவாய் இல்லை என்பதும், சாதாரணமாக மனிதர் கருதும் கௌரவம் அதற்கு இக்காலத்தில் இல்லை யென்பதும், உத்தம உபாத்திமைத் தொழில் இயற்றுவோரைத் தாழ்ந்தவராக மதிப்பாருமுளர் என்பதும் கோகலேக்கு நன்கு தெரியும். ஆயினும் இப்போதுள்ள சிறியோரே, பிற்காலத்தில் பெரியவராய்ப் பல நற்பதவிகளைப் பெறுபவர்கள் ஆதலின், அவர்களை நற்குண நற்செய்கைகளில் மேம்படச்செய்யவேண்டுமென்ற நன்னோக்கத்தாலேயே இவர் உபாத்திமைத் தொழிலை உயர்ந்ததெனை ஆராய்ந்து அதைப் பெற விருப்புற்றனர்.

இச்சமயத்தில் தக்ஷிண கல்விச் சங்கம் என்ற ஒரு சங்கம் பல்வேறு வகைகளிற்செய்யும் சிறந்த காரியங்களைக்கண்டு, அவர் அதில் ஓர் அங்கத்தினர் ஆயினர். சிறிது காலத்திற்கெல்லாம் புனு நகரிலுள்ள பர்கூஸன் கலாசாலையில் சரித்திரம் பொருள்நூல் முதலியன கற்பிக்கும் ஆசிரியர் நிலைமை பெற்றார். இப்பாடங்களை பிறவிடங்களிற் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் சாதாரணமாகப் பெறும் சம்பளம் மிக அதிகமாயினும், அவர் தமது உத்தியோகத்துக்கு எழுபது ரூபா சம்பளம் போதுமென்றார். இத்தொழிலை இருபது

வருஷகாலம் செய்வதாக அவர் முதலில் உறுதியும் கொண்டார். அவர் ஆசிரியரான கொஞ்சகாலத்துக்குள் அக்கலாசாலையின் தலைமை ஆசிரியர் பதவி அவருக்குக் கிடைத்தது. அவரிடம் கல்விகற்ற தக்கோர் பலர் இப்போது பெரியஉத்தியோகஸ்தர்களாக இருக்கிறார்கள். விஷயங்களை எளிதில் எடுத்துரைத்து மாணவர் மனதிற் பதியவைக்கும் தன்மையும், அடங்காப் பிடாரிகளையும் தமது நித்தியஉபதேசத்தால் உத்தம மாணுக்கராக ஆக்கும் அருந்திறலும் அவரிடம் அமைந்திருந்தன.

எதனையும் ஆராய்ந்து உரைக்குமாறும், சொன்ன சொல் மாறுதிருக்குமாறும், தமதாசிரியர் கற்பித்த கட்டளைகளைக் கோகலே மேற்கொண்டொழுகும் நலம் அடைந்தவராதலின், தமது மாணவர்க்கும் அடிக்கடி அவற்றைப்போதித்து வந்தனர். அவர் தமது நேர முழுதையும் மாணுக்கரின் முன்னேற்றத்துக்காகவே செலவழித்த உத்தம ஆசிரியராய் இருந்தனர். அக்காலத்தில் அவர் பத்திரிகைகளுக்கு எழுதியதுமில்லை; மேடைகளின் மேனின்று பிரசங்கம் புரிந்ததுமில்லை.

பர்கூஸன் கலாசாலையிற் போதகராக இருந்தபொழுது, அவர் தம் தேசத்தின் நிலையைப்பற்றி யோசித்தனர். இந்தியாவின் வறுமைக்கு உண்மையான காரணம் இன்னதென அறியுமாறு துரைத்தன அறிக்கைகளையும் பத்திரிகைகளையும் நூல்களையும் கற்றுத்தெளிந்து அவற்றிற்கூறிய விஷயங்களை முற்று மாராய்ந்து வந்தனர். இதற்குக் காரணமாக இருந்தவர் அவரது ஆசிரியர் கோவிந்தமாதவ ரானடே என்னும் பெரியோரே. குருவுக்கு இவர் 12

ஆண்டு உண்மை மாணவராக இருந்தனர். ஆசிரியரைக் கண்டவிடத்து மாசற்ற மனமுடையார்போல் நடித்து, கா்ணுதவிடத்து இழித்துரைக்குங் கடைமாணவர் போலாது, கோகலே 'ஆசானை எவ்விடத்தும் அப்படியே' என்பதற்கேற்ப ஒழுகியவர். கோகலேயின் இத்தகைய குணத்திலும் செயலிலும் ஜனங்களுக்கு நம்பிக்கையும் நன் மதிப்பும் உண்டாகவே, அவர்கள் அவரைத் தமது தலைவரெனக் கொண்டனர்.

அப்போது பம்பாய் ராஜதானியில் அவரைத் தம் மாகாணக் காரியதரிசியாக இருக்க வேண்டுமென்று வேண்ட, அவரும் அதனையேற்று நான்கு வருஷகாலம் வகித்துவந்தனர். 1895-ல் புனவில் இந்திய நாஷனல் காங்கிரஸ் கூடிய காலத்தில், அவரே அதற்குக் காரியதரிசியாகவிருந்து எக்காரியத்தையும் தக்கவாறு நடத்தினர். இக்காரணத்தாலும், அவர் மதிநுட்பம் உடையவர் ஆதலாலும் அவரைத் தக்ஷிண உதய தாரகை என்று யாவரும் அழைத்தனர். 1897-ல் இந்தியாவின் வரவு செலவுக் கணக்கை ஆராய்வதற்காக இங்கிலாந்தில் வேல்பி கமிஷன் ஏற்பட்டது. அதற்குத் தின்ஷா எடுல்ஜி வாச்சா என்பவர் தெரிந்தெடுக்கப்பட்டனர். அவரோடு கோகலேயும் அதே காரியத்திற்கு ஜனங்களால் அனுப்பப்பட்டு இங்கிலாந்துபோய் வெல்பி கமிஷனில் வாக்குமூலம் கொடுத்தனர். அப்போது இந்தியாவில் ஆங்கிலேய துரைத்தனத்தார் செய்யவேண்டிய சீர்திருத்தங்களைக் கேட்போர் மனதிற்படும்படி எடுத்துரைத்தனர். வேறு பல பிரசங்கங்களும் அவர் செய்தனர்.

பிறகு பம்பாய் சட்ட நிரூபணசபை அங்கத்தினராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1902-ல் பர்கூஸன் கலாசாலைத் தலைவராக இருந்த சம்பந்தத்தை முற்றும் விட்டு, மாதம் 25 ரூபாய் உபகாரச் சம்பளம் அவர் பெற்றார். அக்காலத்தில் ராஜப்பிரதிநிதியின் சட்டநிரூபண சபையின் அங்கத்திலிருந்த ஸர் பிரோஜிஷா மேதா வியாதியடைந்ததால், கோகலே அந்த வேலையையும் ஏற்றுக்கொள்ள வேண்டியவர் ஆயினர். அதுமுதல் ஒவ்வொரு முறையும் அச்சபைக்கு அவர் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். அச்சபையில் இருந்தகாலத்தில் அவர் நமக்குச்செய்த நன்மைகள் மிகப்பல. கல்லுமுருகுமாறு சொல்லும் அவருடைய நயமொழியைப் புகழாதார் ஒருவருமிலர். துரைத்தனத்தாரிடம் குறைகளிருப்பின், அவற்றை இதமானவழியில் எடுத்துரைக்கவும், ஜனங்களின் நன்மைக்கு ஏற்ற காரியங்களைத் துணிந்துரைக்கவும் அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் மெச்சத் தக்கன. அவர் ஜனங்களுக்காகத் துரைத்தனத்தாரிடம் வற்புறுத்திவேண்டிய சில விஷயங்களைக் கூறுவோம்: இந்திய சிறுவர்களுக்குப் பிரைமெரி முடிய இலவசப்படிப்பு கற்பிக்கப்பட வேண்டுமென்றும், அதுவும் கட்டாயப் படிப்பாய் இருத்தல் வேண்டுமென்றும், உப்பு வரியை முற்றும் நீக்கிவிட வேண்டுமென்றும், நீர்ப்பாசனத்துக்கும், தொழிற்கும், கல்விக்கும் முன்னிலும் அதிகப்பணம் செலவழித்தல் மிக்க அவசியமென்றும் மன்றாடிக் கேட்டுக்கொண்டார். கொஞ்சகாலத்திற்கு முன், உப்புவரி குறைதற்கு அவரது முயற்சியே காரணமென்றாலும், அவர்செய்த வேலைக்குத் தகுந்த கூலி அப்போது கிடைக்கவில்லை.

பொதுவாக அவர் எழுதிய வியாசங்களையும், செய்த உபந்யாசங்களையும் இந்தியர்மட்டுமேயன்றி ஆங்கிலோ-இந்தியரும் விசேஷமாகக் கூறிப் புகழ்ந்திருக்கின்றனர். நமது ராஜப் பிரதிநிதியாக இருந்த லார்ட் கர்ஸன் எத்தனையோ தடவை கோகலேயின் புத்தி நுட்பத்தையும், சொற்றிறமையையும், முன்னறிக்கை கொடாத காலத்தும் எவ்விஷயத்தையும் சட்டெனப் பேசும் சாதுரியத்தையும் மெச்சி, அவரோடு சபைகளில் வாது செய்வது தமக்கு மகிழ்ச்சியைத் தருகிறதென்றும், தாம் கௌரவிக்கும் இந்தியர்களில் கோகலேயே சிறந்தவரென்றும் கூறியிருக்கிறார். அன்றியும், அவருக்கு ஸி. ஐ. இ. என்ற உயர்ந்த கௌரவப் பட்டத்தையும் அவர் வாங்கிக் கொடுத்தனர். ஆயினும் கோகலே பெறுதற்கரிய இப்பட்டம் தமக்குத் தேவையில்லையென்றும், தாம் சாதாரண பிரஜைகளில் ஒருவரென இருப்பதே தமக்குப் பெருமையென்றும் கூறி அதனை மரியாதையுடன் மறுத்துவிட்டனர். பெருமையை விரும்பா இவரது பெருந்தகைமைதான் என்னே!

இந்திய நாஷனல் காங்கிரஸில் இவர் பெரிதும் ஆர்வமுடையவர். 1904-ல் பம்பாயில் காங்கிரஸ் நடந்தபோது, கோகலேயின் ஆராய்ச்சி மிகுந்த பிரசங்கத்தைக் கேட்ட ஸர். ஹென்றி காட்டன் அவரை மெச்சினார்.

1905-ல் இந்தியாவின் அப்போதைய ராஜரீக முறையை ஆங்கிலேயருக்கு எடுத்துரைக்கப் பம்பாய் வாசிகள் அவரை இங்கிலாந்துக்கு அனுப்பினர். அவரும் அங்ஙனமே சென்று ஆங்கிலப் பிரமுகர் முன்பாக, இந்தியரின் வறுமை முதலியவற்றைப் பசுமரத்தறைந்த ஆணிபோற்

கேட்போர் மனதிற் பதியும்படி 45 பிரசங்கங்களுக்கதிக-மாகச் செய்தனர். அவரது பிரசங்கமாரியில் மூழ்கிய அனைவரும், அவரது அற்புத ஆராய்ச்சியையும், சொல்திற-னையும் இந்தியாவின் உண்மை நிலையையும் நன்கு உணர்ந்து நம் நாட்டார்க்கு இரங்கினர். இங்கிலாந்திலிருந்து வந்ததும், காசியம்பதியில் நடந்த 'காங்கிரஸ் சபை'க்கு அவரே அக்-கிராசனம் வகித்து வெகு விமரிசையாக நடத்தினார். அது முடிந்ததும், மீண்டும் இங்கிலாந்து சென்றார். அப்போது அங்கே இந்தியதேச மந்திரியாக இருந்த ஜான் மார்லியைக் கண்டு, நமது தேச சம்பந்தமான பல விஷயங்களைப் பேசினார்.

கோகலே செய்த காரியங்களில் இந்தியசேவகச் சங்கம் ஏற்படுத்தியது ஒன்றாகும். 50,000 ரூபாய் இதற்கென்று அவர் செலவில் 22 ஏக்கர் நிலம் வாங்கி அதிலொரு கட்டி-டமும் இதற்கென்று கட்டினார். இச்சங்கத்தார் சுய நலம் பாராட்டாமல் இந்தியாவின் முன்னேற்றத்தையே கருதிப் பொதுநலத்தைச் செய்ய முயன்று வருபவர். இவர்கள் இந்தியாவின் பல மாகாணங்களிலிருந்தும் தெரிந்-தெடுக்கப்பட்டவர்கள். இவர்கள் தன்னலந்தவிர்தல், தேச ஊழியம், பிற ஜாதியரிடம் வெறுப்பின்மை, தருமசிந்தை முதலியவற்றைக் கைக்கொள்ளுவதாக முதலில் உறுதி-கூறவேண்டும். இவர்களில் ஒவ்வொருவர் குடும்பச் செல-வுக்கு மாதம் ஐம்பது ரூபாவும், இறந்தபிறகு 3000 ரூபா-வும் அச்சங்கத்திலிருந்து கொடுபடும். இச்சபையிற் சேரு-பவர் இவ்வளவு படித்திருக்க வேண்டுமென்ற விதியும் உண்டு. இவர்கள் இந்தியப் பெண்களின் கல்வி, கீழ்ச்சா-

திப்படிப்பு, தொழிற்கல்வி முதலியவற்றை விருத்திக்குக் கொண்டு வருவதோடு இந்தியாவின் முன்னேற்றத்திற்கானவன செய்யக் கடமைப் பட்டவர்களாக இருக்கவேண்டும்.

ஆசார சீர்திருத்தத்தையும் கோகலே அவசியமான அளவு போதித்து வந்தார். விதவாவிவாகம், கடற்பிரயாணம் என்பவற்றை ஆதரித்து வந்தார். இவரது ஆசார சீர்திருத்தக் கோட்பாடுகள் பிரகாசம் என்ற மகாராஷ்டிர தினசரிப் பத்திரிகையில் வெளிவந்துள்ளன. உள்ளதை உள்ளவாறே உபதேசிக்கும் உத்தமகுணமும், பிரம சமாஜத்தாரின் மதக்கொள்கையும், இரக்கக் குணமும் இவரிடம் எப்போதும் குடிகொண்டன மாசற்ற தேசாபிமானமே அவரிடம் எக்காலமும் சிறந்திருந்தது. தென் ஆப்ரிக்காவில் நமது இந்திய சகோதரர்கள் பட்ட கஷ்டநிஷ்டூரங்களைத் தீர்த்த தயாபரர் இவர் என்றால், அதிகம் சொல்வானேன்? இந்தியர் பல்லோர்க்குழைத்த இந்நல்லோர் 1917-ல் இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகை அடைந்தனர். 'முதுமையடையுமுன் இறைவன் விரும்பிய சில்லோர் இளமையிலேயே இகம் நீப்பர்' என்பதற்கு இவர் இலக்காயினர். இவர் பிரிவாற்றாது இரங்காதவர் எவருமே இலரென்றால், இவரது நலங்களைப் பற்றிப் பல கூறவும் வேண்டுமோ?

## 9. பவளம்.

பவளம் என்பது, கடலில் வாழும் ஒருவகைப் பூச்சிகள் பலகோடி ஒன்றுகூடி, தாம் வசிக்கும் சமுத்திர அலைகள் தம்மைத் தாக்கித் துன்புறுத்தாமல் தற்காத்துக்கொள்ளற்கு உண்டாக்கும் ஒருவகைப் பொருளால் ஆகியது. அப்பொருள்

தூரப் பார்வைக்குத் தண்டு, கிளை, அரும்பு, மலர் முதலிய உறுப்புகளோடு சேர்ந்த செடிபோல் தோன்றும். ஆயினும்



அது இப்பூச்சியால் ஆகியதே-யன்றி தாவரமே அன்று.

இப்பூச்சிகள் நாம்காணும் நற்-பவளத்தின் செந்நிறமே பெரும்-பாலும் கொண்டன. இருவகைச் சருமங்களால் இவற்றின் சரீரம் இணைக்கப்பட்டுள்ளது. அவற்-றின் மீத்தோல் மிகுந்த கூச்சத்-தைக் கொடுப்பது. உட்டோலில் வாய், ஆகாரக்குழாய், இரைப்பை முதலிய அவயவங்கள் உள்ளன. உடலின் நடுப்பாகத்தில் அதன் வாய் உள்ளது. வாயைநோக்கி எப்போதும் ஆடி அசைந்து கொண்டிருக்கும் கரங்கள் அதற்குண்டு.

இப்பூச்சிகள் பலகோடி ஒத்து, ஒன்றுசேர்ந்து வாழ்-கின்றன. அவையாவும் ஒருவகைச் சதைப்பற்றால் சேர்க்கப்-பட்டிருத்தலின், ஒன்றுட்கொள்ளும் ஆகாரத்தின் சத்து மற்றவற்றிற்கும் சமமாகப்போய்ச் சாருகிறது. ஆதலின் ஒரு பூச்சி ஆகாரம் பெற முடியாமல் பட்டினி கிடந்தாலும் மற்ற பூச்சிகள் உட்கொள்ளும் உணவு அதற்கும் சமமாகக் கிடைக்கிறது.

உலகத்தில் எவ்வுயிர்ப் பிராணிக்கும் பலவிரோதிகள் உளவன்றோ? அங்ஙனமே பவளப் பூச்சிக்கும் பகைவர் உண்டு. தன் விரோதிகளை அடர்த்தற்கும், தகர்த்தற்கும்

ஏற்ற உறுப்புகள் இயற்கையில் அதற்கமைந்துள்ளன. அதன் மீத்தோலிலுள்ள பல அறைகளில் ஒவ்வொன்றும் விஷ சம்பந்தமான ஒரு நூற்சுருளைக்கொண்டது. புறத்தோல் கூசும் தன்மையை உடையதாதலால், அதன்மேல் ஏதேனும் உட்கார்ந்தால் அது உடனே அறிந்துகொள்ளும். அக்கணமே தன்னுடல் அறையிலுள்ள நச்சுநூற்சுருளால் மேல் உட்கார்ந்த சந்துவின் சரீரத்தில் ஆழத் தைத்து, ஒருவகைப் பொருளையும் அதனுடலில் உய்த்துவிடும். வந்தவை அதனிலும் சிறு சந்துக்களாயின் இறந்துபடும். பெரும் பூச்சிகளாயின் உண்டான துன்பத்தால் ஆங்குத் திரும்பிவாரா.

அவற்றினும் பன்மடங்கு பெரிய நத்தை முதலிய ஜலசரங்களும் சமுத்திரத்துள்ளனவன்றோ? அவைகளாலும், அலைகளாலும் அழிவு பெறாதவாறு ஒருவகைப் பாதுகாப்புப் பொருளை அப்பூச்சிகள் உண்டாக்கிக் கொள்ளுகின்றன.

அவற்றின் இருவகைத்தோல்களுக்கிடையே ஒருவகைக்கடின பதார்த்தம் உற்பத்தியாகின்றது. அதுவே அதற்கு எலும்பாகவும், பாதுகாக்கும்படையாகவும் இருக்கிறது. இங்ஙனம் அப்பொருள் ஒருசமயம் பாதுகாக்கும் படையாக உதவினும் மற்றொரு சமயம் அப்பூச்சிகள் அழிதற்குக் காரணமாகிறது. அப்பொருள் வன்மையும், வனப்பும், வண்ணமும் வாய்ந்திருத்தலால், மனிதர் அப்பூச்சிகளைக்கொன்று அதைக்கைப்பற்றுகின்றனர். இப்பொருளே பவளம்.

பவளத்தீவுகள் இந்து மஹாசமுத்திரத்திலும், பஸிபிக் மஹாசமுத்திரத்திலும் பல உண்டு. அவை ஒவ்வொன்றும் ஐந்நூறு மைல் நீளத்துக்கும், ஐம்பது மைல் அகலத்துக்கும்

84635



மேற்பட்டவை. மத்தியதரைக்கடலிலும் அக்குன்றுகள் பல உண்டு. அங்குள்ளோர் அவற்றை எடுத்து வேலை செய்து பிழைக்கிறார்கள். முத்துக்குளிப்போர்போலப் பலர் படகுகளில் ஏறிக்கொண்டு பவளமிருக்கும் இடங்களிற் கடலிற் குதித்துப் பவளத்தை எடுத்துக்கொண்டு வருவார்கள். அங்ஙனம் எடுத்துவந்த பவளம் சின்னாள் தரையிற்கிடந்து அழுகினால் ஈரப்பொருள் முழுதும் உலர, முற்கூறிய எலும்பு போன்ற பவளமாகிய கெட்டிப்பொருளே மிச்சப்படும்.

நேப்பில்ஸ், ரோம், ஜினேவா என்னும் நகர்களிலுள்ள தொழிலாளர் அப்பவளத்தைச் செதுக்கி மெருகிட்டுப் பளபளப்பாகவும், சிறுமணிகளாகவும் நறுக்கித் துவாரமிடுகிறார்.

கள். பிறகு அவை வர்த்தகப் பொருளாகப் பிறவிடங்களுக்கு அனுப்பப்படும். மணிகளின் திண்மையையும், நிறத்தையும், பருமனையும் பொறுத்தே, அதன் உயர்வு தாழ்வுகள் கருதப்படுகின்றன. நன்னிறமுள்ள செந்நிறப்பவள மல்லன கேவலம் கிளிஞ்சல்போல் சுண்ணும்பு செய்தற்கே உபயோகமாகும். இந்தியர்களும், உரோமர்களும் நீண்டகாலமாக அதை உபயோகித்து வருகிறார்கள்.

இந்தியர்கள் பவளமணிகளைக் கம்பிகளிற் கோத்துக்கட்டி மாலைகளாக அணிந்துகொள்ளுகிறார்கள். பவளத்தில் செந்நிறம் சேர்ந்து இருப்பதாலேயே, அது அணிகலனாக கொள்ளப்படுகிறது. பவளமாலைகளை அணிவதால் பாவம் நீங்கிப் புண்ணிய முண்டாகுமென்று நம்மவரிற் சிலர் நம்புகிறார்கள். பவளத்தைப் புடத்திலிட்டுப் பஸ்பமாக்கி நாம் மருந்தாக அருந்துகிறோம். அதனால் உடல்வெப்பும், இருமல் முதலிய பிணிகளும் தீருகின்றன. உரோமர்களும் இப்பவளத்தைப் பல உரோகங்களைப் போக்கும் ஔடதமாக உபயோகிக்கிறார்கள். இன்னும் கண்ணேறு கழிதற்கும், மலட்டுநோய் அழிதற்கும் உரோமர் பவளத் துண்டுகளை மாலைகளாகக் கோத்துத் தரித்துக் கொள்ளுகிறார்கள். அற்பமும், அற்புதமும் வாய்ந்த பவளப்பூச்சிகள் எவ்வளவு உயர்ந்த பொருளை உண்டாக்குகின்றன பாருங்கள்!

# 10. ஆண்டாள்.

மின்னார் தடமதில்சூழ் வில்லிபுத்தூர் என்றொருக்கால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம்

கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதி மணிமாடந் தோன்றுமூர்—நீதியாய்
நல்லபத்தர் வாழுமூர் நான்மறைகள் ஓதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோன் ஊர்

என, எத்திசையோரும் மெத்தவும் வியக்கும் சிறப்பினையுடையது ஸ்ரீவில்லிபுத்தூர். மல்லி என்னும் மாநகர் உறையும் வில்லி என்னும் வேடர் வேந்தன், ஒரு கொடுவரிப்புலியைக் கொல்லுதற்கு எண்ணி ஒரு காட்டிடைச் சென்று கண்துயில்காலையில், ஓங்கி உலகளந்த உத்தமன் அவனது கனவிற்றோன்றி கட்டளையிட்டருளியவாறே அவனால் உண்டாக்கப்பட்டது இந்நகர் என்பர். பாகீரதியும், சரஸ்வதியும், பொன்னியும் ஆகிய மூன்று புனிதநதிகளும் ஐக்கியப்பட்டுள்ள திருமுக்குளம் என்னும் வாவியைத் தன்னிடம் இது அமையப்பெற்றது.

இந்நகரில் எழுந்தருளிய வடபெருங்கோயில் உடையானைப் பெரியாழ்வார் என்னும் ஒரு பெரியவர் வழிபட்டு வந்தனர். அவருக்கு விஷ்ணுசித்தர், வில்லிபுத்தூர் ஆழ்வார் என்ற பிறதிருநாமங்களும் உண்டு. அவருக்குத் திருமாலிடத்துப் பக்தி மிகுதி. அவருக்குத் திருப்பணி இயற்ற எண்ணி பூப்பாத்திகள் அமைத்து நீர் பாய்ச்சி அவர் வருவாராயினர்.

அவருக்கு ஒரு பெண்குழந்தை இருந்தது. அதற்குப் பெரியாழ்வார் கோதை எனத் திருநாமம் சூட்டினர். நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக அந்த நாச்—

சியாரை நன்கு வளர்த்து வந்தனர். அப்பெண் பெரியாள், பாலியத்தில் பரமனிடத்திலேயே பக்தி மிகக்கொண்டு, அவரை மணம்புரிய எண்ணியிருந்தனர். எம்பெருமானை மணக்கத் தாம் தகுதியோ என்றுணருமாறு தம்மை ஆடையாலும் அணிகலனாலும், திருமாலுக்கென்று வைத்திருந்த திருமாலைகளாலும் நாடோறும் நன்கு அலங்கரித்து, அவ்வொப்பனையைக் கண்ணாடியிலே கண்டு மகிழ்ந்து திருப்தியுற்றுத் தந்தை வருமுன், தரித்தவற்றைக் களைந்து அப்புறப்படுத்தி விடுவார். மற்றைய யாவும் முற்றிலும் உணர்ந்த பெரியாழ்வார், இதனைமட்டும் சற்றுமுணராது, எம்பெருமான் சந்நிதானத்தைக் குறுகி, மகள் அணிந்து களைந்தெறிந்த மாலையாதியவற்றைச் சுவாமிக்குச் சாத்துவார்.



இங்ஙனம் பன்னாட்கள் கழிந்தன. வெளியிற் போய்த் தற்செயலாய் வீட்டினுள் நுழைந்த ஆழ்வார், ஒருநாள் கோதைசெய்யும் காரியமே கண்டு கோபமும், சோகமும் அடைந்து, அவரைக் கடிந்து, அன்று கடவுள் வழிபாட்டுக்கு இடர் வந்ததென்று எண்ணி ஏங்கியிருந்தார். இஃதறிந்து வடபத்திரசாயி ஆழ்வாரது கனவில் தோன்றி, 'நாச்சியார் சூடிய மாலையே நமக்கு நறுந்தொடையல்' என்று நவின்று மறைந்தனர். ஆழ்வார் அடைந்த ஆனந்தத்திற் களவில்லை.

நாட்கள் செல்லச் செல்ல, நாச்சியாருக்குத் திருமாலின்மீதிருந்த அன்பு வளரலாயிற்று. அவரைப் பிரிய அரைக்கணமும் பொறாத தமது நிலைமையை அவர் தாம்பாடிய 'திருப்பாவை, நாச்சியார் திருமொழி' என்னும் பிரபந்தங்கள் வாயிலாகப் பிரசித்தம் செய்துளார். அங்ஙனமிருக்க, அவருக்குக் கடிமணம் புரியும்காலம் வந்தது. ஆழ்வார் அவர் திருமணத்திற்கு ஏற்பாடுகள் செய்ய, அவர், 'நான் மானிடனை என்றும் மணம்புரிந்து கொள்ளேன். பெருமாளுக்கு என்னைத் திருமணம் செய்தால், அவருடன் வாழ்வேன்' என்றனள். ஆழ்வார், 'நல்லது, எம்பெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய இடம் பலவே. அவற்றுள் எங்கெழுந்தருளிய எம்பெருமானை நீ மணக்க விரும்புகிறாய்?' என்று கேட்க, 'அரங்கநாதனையே' என்று ஒரே பிடிவாதமாகக் கூறினர் அப்பூமகள் போன்றார். இவ்வருஞ் செய்கை கைகூடுமோ என, எண்ணாது எண்ணி ஏங்கினர் பெரியாழ்வார். அவருடைய துயிலில் அரங்கனார் தோன்றி, 'நம்மகளை எமது திருமுன் அழைத்துவரின் யாம் அவளை அங்கீகரிக்கத்

தடையில்லை' என்று கூறினர். பின்னர் அவர் ஒரு தானீகர் கனவில் தோன்றி, 'ஆண்டாளை ஒரு பல்லக்கில் அழைத்து வருக' என ஆஞ்ஞாபித்தார்.

ஒருநாள் பெரியாழ்வாரும் திருமணத்துக்குப் பிரயாணமாயினர். இதை உணர்ந்த வல்லபதேவன் என்ற பாண்டியன், உடனே ஸ்ரீவில்லிபுத்தூருக்கும், ஸ்ரீரங்கத்துக்குமிடையே தன்னால் இயன்றபணிசெய்ய எண்ணித்திருப்பந்தலிட்டு, தோரணங்கள் கட்டி, வாழைநாட்டி, பேரிகள் ஆர்ப்ப, சங்கமுழங்கத் தானும் திருவரங்கம் அடைந்தனன். ஆண்டாள் அரங்கநாதனை அணுகி ஆனந்தத்தோடு அவரது திருமேனியில் இரண்டறக் கலந்து ஆங்கிருந்தனர். பின்னர் அரங்கர் ஆழ்வாரை அணுகிப் பிரசாதம் முதலியவற்றைப் பிரசாதித்து அனுப்ப, அவரும் ஆயுள்நாள் முழுதும் அப்பெருமானுக்குத் தொண்டுசெய்து, பின்னர் பரமபதம் அடைந்தார்.

எல்லாரையும் ஆளுகின்ற மலர்மகளாதலால் ஆண்டாள் எனவும், மாலையைத் தான் முதலில்சூடிப் பின்னர் கண்ணனுக்களித்தபடியால், சூடிக்கொடுத்த நாச்சியார் எனவும் இவருக்கு வேறு திருநாமங்கள் உண்டு.

இந்நல்லிசைப் புலமை மெல்லியலார் இற்றைக்குச் சற்றேறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பிறந்தனர் என வைணவ சமய நூல்கள் கூறும். ஆயினும் தற்காலத்துச் சரித்திர ஆராய்ச்சியில் வல்லவர், ஓராயிரம் ஆண்டுகட்கு முன்புதான் இவர் இருந்தனர் என்று துணிந்து கூறுகின்றனர்.

## 11. புகழேந்திப் புலவர்.

'வெண்பாவிற் புகழேந்தி' எனத் தமிழர் வியக்கும் சிறப்பைப் பெற்ற இப்புலவர்பெருமான் தோன்றுமாறு தவமியற்றிய நன்னாடு தொண்டை நன்னாடாம். தற்போது செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள பொன்விளைந்த களத்தூரே அவர் பிறந்த ஊர்.

இப்பெரியார் துளுவவேளாள மரபினர். இளமையிலேயே அரும்பெரும் தமிழிலக்கிய இலக்கண நூல்களையைந்திரிபற ஓதியுணர்ந்தார். தக்கபருவம் வரவே தொண்டைநாட்டைவிட்டுப் பாண்டிய நன்னாட்டின் தலைநகரமாகிய மாமதுரை வந்தடைந்து, அச்சமயம் பாண்டிய நாட்டைப் பரிபாலித்துவந்த வரகுணபாண்டியனைக் குறுகி, அவனது அவையில் ஆஸ்தான வித்துவானாகி அமர்ந்து சிறப்புற்றனர்.

இச்சமயத்தில் சோழநாட்டில் விக்கிரமசோழனது மகனான குமாரகுலோத்துங்கன் அரசாண்டான். அவன் தனக்குப் பாண்டியனது புதல்வியை மணம்பேசி வருமாறு, தன் சமஸ்தான வித்துவானும் ஆசிரியருமான ஒட்டக்கூத்தரையனுப்ப, அவர் மதுரையம்பதிக்குச் சென்று மன்னவன்றன் பேர் அவைக்களம் சேர்ந்து தான் வந்த காரியம் இன்னதெனக் கூறினர். பாண்டியன் ஒட்டக்கூத்தரை விழித்து, 'ஐயா! நும் அரசன் என் செல்வியை மணக்கத் தக்கவனோ?' எனவினவ, கூத்தர் தமது காவலன் பெருமையைக்காட்டுமாறு,

கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானே!
கூறுவதுங் காவிரிக்கு வையையோ அம்மானே!
ஆருக்கு வேம்புநிகர் ஆகுமோ அம்மானே!
ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானே!

வீரர்க்குள் வீரனொரு மீனவனே அம்மானே!
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானே!
ஊருக் குறந்தைநிகர் கொற்கையோ அம்மானே!
யொக்குமோ சோணாட்டுக்குப் பாண்டிநா டம்மானே!

எனப்பாடிக் குலோத்துங்கனையும், அவன் குலநல முதலியவற்றின் சிறப்பையும் விளக்கினர். அதுகண்ட புகழேந்தியார், பாண்டியன் பெருமை தோன்றுமாறு,

ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளித்த தம்மானே!
ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ அம்மானே!
திருநெடுமால் அவதாரம் சிறுபுலியோ அம்மானே!
சிவன்முடியில் ஏறுவதுஞ் செங்கதிரோ அம்மானே!
கரைஎதிரே டேறியது காவிரியோ அம்மானே!
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானே!
பரவைபணிந் ததும்சோழன் பதந்தனையோ அம்மானே!
பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதே யம்மானே!

எனப்பாடிக் கூத்தர் கூறியதைக் கூசாது மறுத்தனர். பின்னர் ஒருகால் கூத்தர் பொன்னி நாடனைப் புகழ எண்ணி,

வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்று முதுகிற் கிடான்கவசம்—துன்றும்

என்று கூறிப் பாடியதை முடிக்கவியலாது காலந்தாழ்த்தியபோது புகழேந்திப் புலவர்,

வெறியார் தொடைகமழும் மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கி னென்று

எனப்பாடி முடித்துப் பஞ்சவன் கீர்த்தியைப் பகர்ந்தனர். ஆகவே கூத்தருக்குப் புகழேந்தியாரின்மீது தீராச் சினமுண்டாயது. பின்னர் பாண்டியன் தன்மகளைக் குலோத்-

துங்கனுக்கு மணம்புரிவிக்க இசைந்தனன். குலோத்துங்கன் பாண்டியன்றன் அருமருந்தன்ன மகளை மணம்புரிந்து, சோணாட்டிற்கு மீளுங்கால், பாண்டியன் தன் மகளுக்கு எண்ணிலாக் கோடிப்பொன், வண்ணவருங்கலன் முதலியவற்றைச் சீதனமாக ஈந்ததுமன்றித் தக்க அமயங்களில் தன் புதல்விக்குப் புத்தி புகட்டுமாறு புகழேந்தியாரையும் அனுப்பினன்.

அப்பாண்டியன் கூறியபடி சோணாடு அடைந்த புலவர் பெருமானாகிய புகழேந்தியாரின் புகழ் பொலிவுற்று விளங்குமாறு, அரசனிடம் சென்று கூத்தர், 'இப்புகழேந்தியே என் கூற்றை இழிவுறுத்தி, நுமக்குப் பாண்டியன் புதல்வியைப் பாணிக்கிரகணம் செய்விக்க இயலாது போகும்படி, பாண்டியனெதிரில் உமது குலமுதலியவற்றைப் பழித்துரைத்தோன்' என்றுகூறி, அரசனைச் சினமூட்டுவித்துப் புகழேந்தியாரைக் காவற்கூடம் சேர்ப்பித்தனர். அவரும் இது விதியின் பயனென மதித்துச் சிறையிலிருந்து, ஆங்குற்ற பணியாளரைத் தம் வயப்படுத்தி, நீர்கொணரச்செல்லும் நங்கையரைக்கண்டு அம்மகளிர்க்குத் தாம் செய்த அல்லியரசாணி மாலை, பவளக்கொடிமாலை முதலியவற்றை இனிய எளிய செந்தமிழிற் செப்பி, அன்னோர் மனக்களிப்புற்றுச் சாளரவழியாய்த் தந்த பல பண்டங்களைக்கொண்டு சோறுசமைத்து உண்டு நாட்கழித்தனர். இவ்வாறு இருக்க, ஒருநாள் அரசன் புலவர் சிறையிருந்த வீதிவழியாகக் கூத்தருடன் வருங்கால், புகழேந்தியாரைக் காணநேரிடலும், ஒட்டக்கூத்தரை நோக்கி, 'இவர் ஒரு பெருந்தமிழ்ப் புலவர் அன்றோ!' எனக் கேட்க, கூத்தர் புகழேந்தியார் தம்மினுமிழிந்தவர் என அரசனுக்கு அறிவிப்பதற்கு எண்ணி,

மானிற்கு மோவந்த வாளரி வேங்கைமுன் வற்றிச்செத்த
கானிற்கு மோஅவ் வெரியுந் தழன்முன் கனைகடலின்
மீனிற்கு மோவந்த வெங்கட் சுறவின்முன் வீசுபனி
தானிற்கு மோவக் கதிரோ னுதயத்தில் தார்மன்னனே

எனப் பாடினர். அதைச் செவியுற்ற புகழேந்தியார் மன்னவனைப் பார்த்து, 'யான் இப்பாடலை ஒட்டிப்பாடவோ, வெட்டிப்பாடவோ?' எனக் கேட்க, அரசன் கூத்தரிடங் கொண்ட அன்பால் 'அவர் பாடியதை ஒட்டியே பாடுக' எனப் புகழேந்தியார்,

மான் அவன் நானந்த வாளரி வேங்கையும் வற்றிச்செத்த
கான் அவன் நானவ் வெரியுந் தழலுங் கனைகடலின்
மீன் அவன் நானவ் வெங்கட் சுறவமும் வீசுபனி
தான் அவன் நானக் கதிரோ னுதயமுந் தார்மன்னனே

என்று தம்மைச் சிறப்பித்துப் பாடித் தமது பெருமையை விளக்கினர். சோழன் அப்புலவரிடம் மதிப்புக்கொண்டவனாயினும், ஒட்டக்கூத்தர் மேலிருந்த பிரியத்தால் யாதொன்றும் செய்ய வியலாதவனாய் அப்புகழேந்தியாரைச் சிறையிலே விட்டுப்போயினன்.

இது இவ்வாறிருக்க, சோழனிடம் பாட்டுகள் பலபாடிப் பரிசுபெற வேண்டுமென்னும் விருப்பத்தினால் பலர் அரசசபையை அடைய, கூத்தர் அன்னோரிடம் பல கடுங் கேள்விகளைக் கேட்டு, விடைகொடுக்க இயலாதிருந்தோரைச் சிறைசேர்த்து, நவராத்திரியில் அவர்களை ஒவ்வொருவராக அழைப்பித்துக் காளிதேவிக்குப் பலியாக்கிவரும் வழக்கைக் கைக்கொண்டிருந்தனர். இதனை

இரண்டொன்றாய் முடிந்ததலை இறங்கப்போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை

என்பதாலறியலாம் என்ப. இத்தகைய கூத்தர், புகழேந்தியார் சிறையிலிருந்த விடத்திலேயே, கவிபாடும் சக்தியில்லாத பலரைச் சிறையிற் செலுத்தினர். புகழேந்தியார், அவர்களில் அறிவு படைத்த அம்பட்டன், வண்ணான், கொல்லன், வேளாளன், குயவன் முதலியோரைத் தேர்ந்தெடுத்து, அவர்கட்கு இலக்கியம் பயிற்றுவித்து, வித்துவான்களாக்கி நவராத்திரி காலத்தில் அவர்களைக் கூத்தரிடம் அனுப்பினர். முதலில் குயவன் கூத்தருக்கு ஏற்ற மரியாதை யின்றி அவரிடம் போய் நின்றான். அதைக் கண்ணுற்ற ஒட்டக்கூத்தர்,

மோனை முத்தமிழ் மும்மத மும்பொழி
யானை முன்வந் தெதிர்த்தவன் யாரடா

என்று கேட்டலும், குயவன்,

கூனை யுங்குட முங்குண்டு சட்டியும்
பானையும் பண்ணு மங்குசப் பையல்யான்

என்றான். தாம் பாடியதைக் குயவன் முடிப்பதைக்கண்ட கூத்தர், அவனையோர் பக்கத்திலிருத்தி, மற்றொருவனை யழைத்தலும், அம்பட்டன் வந்துநிற்க,

விண்பட்ட கொக்குவல் லூறுகண் டென்ன விலவிலக்கப்
புண்பட்ட நெஞ்சொடு மிங்குநின் றாய்பொட்டை யாய்புகலாய்'

என்றார். அந்நாவிதன்,

கண்பொட்டை யாயினும் அம்பட்ட னன்கவி வாணர்முன்னே
பண்பட்ட செந்தமிழ் நீயுந் திடுக்கிடப் பாடுவனே

என முடிக்கக் கேட்ட கூத்தர் கோபித்தனர் ஆயினும், யாதொன்றும் செய்யவியலாது அவனையு மோர்புறம் இருக்-

கச் சொல்லிவிட்டு, மற்றொருவனை யழைப்பித்து, 'நீ எங்கி-ருந்து வந்தனை, உன் நாமதேயம் யாது?' என்று வினவக் கேட்டு நின்ற கொல்லன்,

செல்வன் புதல்வன் திருவேங் கடவன் செகத்குருவாம்
கொல்லன் கவியைக் குறைசொல்லு வோரைக் குறடுகொண்டு
பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டிப் பகைவர்முன்னே
அல்லும் பகலு மடிப்பேன் கவியிருப் பாணிகொண்டே

எனப்பாடி மறுமொழி இயம்பினன், பின்னர் முன்னின்ற வேளாளனை யழைப்பித்து 'என் முன் நீயுமொருபுலவனென நின்றது சரியேயோ?' எனக் கேட்க அவனும்,

கோக்கண்டு மன்னர் குரைகடல் புக்கிலர் கோகனகப்
பூக்கண்டு கொட்டியும் பூவா தொழிந்தில பூதலமேழ்
காக்கின்ற மன்ன கவியொட்டக் கூத்தனும் கட்டுரையாம்
பாக்கண் டொளிப்பர்க ளோதமிழ் பாடிய பாவலரே

என்றுபாடி ஏற்றவாறு விடையிறுத்தனன். இங்ஙனம் அன்னோர் பற்பலவாறு கூறித் தம்மை இழித்துரைக்கக் கண்ட கூத்தர், 'இவை யாவும் புகழேந்தியார் செயல்!' என நிச்சயித்து, அவர் தவிர மற்ற யாரையுஞ் சிறையி-னின்றும் விடுவித்துப்போயினர். இதனாற் கூத்தருக்குப் புகழேந்தியார் மீதுள்ள பகை வளர்பிறைச் சந்திரன் என்-னும்படி வளர்ந்தது.

புகழேந்தியாரின் அச்சமய நிலைமையையும், கூத்தரின் பகையையும் சோழன் மனைவி யறியலாயினள். தன் தந்தை-யினிடமிருந்த புலவருடைய துன்பங்கண்டு, மனம் விண்டு சினங்கொண்டனள். தன் நாயகன் பள்ளியறை புகும் சமயம் அறையின் கதவைத் தாழிட்டு, உள்ளிருந்த-

னள். கதவு திறக்கும்படி அரசன் சொன்ன நல்வார்த்தை-
கள் பயனிலவாயின. அவளது கோபத்தைப் போக்கக் கரு-
திய மன்னன், அக்கால வழக்கப்படி கூத்தரையனுப்ப அவர்
சென்று,

நானே யினியுன்னை வேண்டுவ தில்லை நளினமலர்த்
தேனே கபாடந் திறந்திடு வாய்திற வாவிடிலோ
வானே றனைய இரவி குலாதிபன் வாயில்வந்தால்
தானே திறக்கும்நின் கைத்தல மாகிய தாமரையே

என்றுபாடக்கேட்ட அரசி, மிகவும் வெகுண்டு, 'ஒட்டக்
கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' எனக்கூறி,
மற்றொரு தாழையும் சடக்கென இட்டனள். அரசன் அது
கண்டு இவை யாவும் புகழேந்தியார் சிறையிருத்தலினால்
நேர்ந்ததெனத் தேர்ந்து, அவரை விடுவித்துத் தேவியின்
சினத்தைத் தணிக்குமாறு வேண்டவே அப்புலவரும்,

இழையொன் றிரண்டு வகிர்செய்த நுண்ணிடை யேந்தியபொற்
குழையொன் றிரண்டு விழியணங் கேகொண்ட கோபந்தணி
மழையொன் றிரண்டுகை மானா பரணனின் வாயில்வந்தால்
பிழையொன் றிரண்டு பொறாரோ குடியிற் பிறந்தவரே

எனப்பாடினர். அரசியும் உள்ளம் பூரித்து ஊடல் தணிந்து,
அரசனை யழைப்பதற்குத் தாழைத் திறந்தனள். அற்றை-
நாள் தொடங்கிப் புகழேந்தியார் அரசனது அன்பிற்குப்
பாத்திரராயினர். எனினும் ஒட்டக்கூத்தருக்கும், தமக்கும்
ஒற்றுமை வாரா தென்றெண்ணி அவர் சோழனது அனுமதி
பெற்று மள்ளுவ நாட்டுக் கோமான் சந்திரன்சுவர்க்கி வாழும்
முரணையம்பதி யடைந்து நன்கு போற்றப்பட்டு அங்கு ஆஸ்
தான வித்துவானாய் அமர்ந்திருந்தனர்.

அச்சமயத்தில் சந்திரன் சுவர்க்கியின் சபையில் வடமொழி வல்லார் நள சரிதத்தைப் பிரசங்கிக்க, அதுகண்ட அரசன் புகழேந்தியாரை நோக்கி, 'நீவிர் இக்காப்பியத்தைத் தமிழிலியற்றித் தருக' எனக் கேட்டனன். அதற்குப் புலவர் இணங்கி நளன் சரிதையைப் பல்லோரும் வியக்குமாறு வெண்பாவிற் பாடி யரங்கேற்ற, அதுகேட்ட சோழனும் குலோத்துங்கன் அவரை யழைத்து மற்றொரு முறை நளவெண்பாவைத் தனது சபையில் பிரசங்கிக்குமாறு வேண்ட, புகழேந்திப் புலவர், அப்படியே யாவரும் புகழப் பிரசங்கிக்குங்கால், சுயம்வர காண்டத்தில் சூரியாஸ்தமனத்தை யறிவிப்பதற்கு,

மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப—முல்லைமலர்
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது

எனப்பாடவும், புலவர் கூட்டத்தினுள் இருந்த ஒட்டக்கூத்தர், 'ஐய! இங்கு மல்லிகை மலரைச் சங்காகவும், வண்டானது ஊதுபவனாகவும் வருணித்திருப்பதில், உவமை பொருந்தத்தக்கதோ! இல்லை இல்லை. ஏனென வினவின், சங்கூதுவானொருவன், அச்சங்கினதடியில் வாய்வைத்து ஊதுவான். பொன் வண்டுகளோ மலரினது நுனியன்றோபற்றி ஊதுவன' என்றார். புகழேந்தியார் சமயோசிதமாக, 'ஐயன்மீர்! மது உண்பானுக்கு இதுமேற்புறமென்றும், இது கீழென்றும் அறியத்தக்கதோர் ஆற்றலுமுண்டோ? அவர்கள் புத்தி மாறுபட்டமுற்றுச் செய்வதின்னதென அறியாது நிற்பாராதலின், அவ்வண்டுகளும் மலரின் மேற்புறத்தைப் பற்றி யூதின' என்றார். ஆங்குற்றோர் யாவரும், 'ஆஹா!

நன்று! நன்று!!' என ஆர்ப்பரித்தனர். இதுபோலெழுந்த பல வினாக்களுக்கும் தக்கவாறு விடை கூறினர். கம்பர் முதலிய கவிகளும் கவிமதங்கொண்ட களிறனைய புகழேந்தியாரின் சார்பிலிருந்தனர்.

இவ்வாறு இருக்க, புகழேந்தியாருக்குக் கூத்தர்மேல் இருந்த கோபம் பொங்கியது. அவரை அடியோடழித்தலே ஏற்றதாமென அவர் கருதினார். ஒரு நள்ளிரவில் இருளும் மருளும் இணையாய்த் தோன்றும் அகாலவேளையில், நற்றவப் புகழேந்தியார் வாளொடுகூத்தர் வீட்டுவாயிலில் நின்று ஏற்ற சமயத்தை எதிர்பார்த்திருந்தனர். கூத்தர் மனைவி அவ்வமயம் பள்ளியறையி னுள்ளிருந்த தன் பதியைச் சாப்பிடுதற்குக் கூப்பிட்டனள். அதற்கு அவர், 'புகழேந்தியாரின் அமுதமென்னும் பாக்களைச் செவிமடுத்த என்னால், இனி நீ தேவாமிர்தம் கொடுத்தாலும் கொள்ளவியலுமா?' எனக்கூறினார். இதைச் செவியுற்ற புகழேந்தியார் உட்சென்று கூத்தரது அடியில் வீழ்ந்து தம்மை மன்னிக்குமாறு வேண்டி, தாம் செய்ய இருந்த செயலையும் எடுத்துக்கூறினர். அன்று முதல் அவர்கள் இருவரும் அன்பாய் வாழ்ந்தனர். குலோத்துங்கசோழன் இச்செய்தியைச் செவியுற்று மகிழ்ந்தான்.

ஒருநாள் ஒட்டக்கூத்தரும், புகழேந்தியாரும் சோழன் அவையிற் கூடியிருக்கையில், ஒற்றனொருவன் ஓடிவந்து பட்டத்து யானை சங்கிலியை முறித்துக்கொண்டு ஓடுகின்றதென்றுரைக்கக் கேட்ட கூத்தர்,

இன்னங் கலிங்கத் திகல்வேந்தர் உண்டென்றோ
தென்னன் தமிழ்நாட்டைச் சீறியோ—சென்னி
அகளங்கா! உன்றன் அயிராவ தத்தின்
நிகளங்கால் விட்ட நினைவு

என்றொரு வெண்பாவைப் பாடினார். இது கேட்டுப் பொருத புகழேந்தியார்,

தென்னவன் தென்னர் பெருமான் திறல்மதுரை
மன்னவன் கோக்களிற்றின் வல்லிக்கும்—பொன்னிநா
டாவிக்கும் வேந்தாம் அபய குலமகளிர்
தாலிக்கும் ஒன்றே தளை

என்றொரு வெண்பாவை ஓதினர். அன்று முதல் குலோத்துங்கன் இருபுலவர் ஆதனங்களையும் பக்க மாற்றிவிட்டனன்.

இவர் விஷ்ணுவையும், சிவனையும் துதித்திருப்பினும், விஷ்ணுவையே முதலில் துதித்திருப்பதுபற்றியும், கதையின் நடுவில் திருமாலை இவர் பாடியிருப்பது பற்றியும் "மாலார் களந்தைப் புகழேந்தி" என இவரைக் கூறப்படுவது பற்றியும், இவர் சிவத்துவேஷமில்லாத வைணவரெனக் கூறுதலே சாலச் சிறப்புடையதாம்.

மேற்கூறிய விடயங்களோர்புறமிருப்ப, இவரது நன்றி மறவாத குணம் என்றும் வியக்கத்தக்கதே. தம்மை உபசரித்த முரணையம்பதியின் அரசனான சந்திரன் சுவர்க்கியை இவர் தமது நளவெண்பாவில், பலவிடங்களிற் சிறப்பித்துப் பாடியிருக்கிறார்.

வண்டார் வளவயல்சூழ் மன்னுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி—கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்றே
காவலன்பால் நின்ற கவி

என்பது அப்பாடல்களிலொன்று. இங்ஙனம் பலவிடங்களில்,

அவனது புகழைப்பாடியிருத்தல் அவனிடம் கொண்ட நன்றி பற்றியேயாம். 'நன்றிமறப்பது நன்றன்று' என்பதை முற்று முணர்ந்த நீதிநெறியால், தாம் பாடிய நூலில் அரசனையும் பாடி, அப்பெயரைக் கன்மேலெழுத்தென மண்ணுலகில் நிலைத்தோங்குமாறு செய்த இப்புலவரது வியக்கத்தக்க செய்கை பாராட்டத்தக்கதே யாகும் என்பதை அறிஞர் நன்குணர்வர்.

மேலும் இப்புலவர்பெருமானுக்குத் தமிழிலும், தமிழ் நாட்டிலும், தமிழ் வல்லுநரிடத்திலும், ஆர்வமிக்குண்டென்பதை, இவர் நளவெண்பாவில் 'வண்டமிழ் வாணர்ப் பிழைத்த வான் குடிபோல் தீத்தழல்வீ மண்டு கொடுஞ்சுரத்து' என்று கூறிச் சுட்டினர். செஞ்சிக்கலம்பகம், இரத்தினச்சுருக்கம், அல்லியரசாணிமாலை, புனந்திரன்களவுமாலை முதலியன இவர் செய்த வேறு நூல்களாம். இவரது மகிமையை, 'வெண்பாவிற் புகழேந்தி' என்பதனாலும், 'கேட்டாலு மின்பங் கிடைக்குங் கண்டீர், பாட்டாலுயர்ந்த புகழேந்தி சொன்னபடி' எனப் படிக்காசுப்புலவர் பாடியதாலும் அறியலாம்.

## 12. நரம்பு மண்டலம்.




நம் உடலானது தசை, இரத்தம், எலும்பு முதலியவற்றால் ஆக்கப்பட்டிருக்கின்றது. மேற்கூறிய உறுப்புக்களை இணைக்குமாறு நரம்புகள் உள்ளன. இந்த நரம்புகள் உடலிலுள்ள எல்லாவித உறுப்புக்களிலும் அதிகமுக்கியமானவை. மற்ற உறுப்புக்கள் அவ்வவற்றின் தொழில்களைச் செய்துவர, நரம்புகளே முக்கியசாதனங்களாகும். ஆகையினால் இவைகளைப்பற்றிய எல்லா விவரங்களையும்படிப்படியாக அறிந்துகொள்ளுவோம்.

முதலில் நீங்கள் நரம்பு மண்டலத்தைக் குறிக்கும் படத்தைப் பாருங்கள். ஒரு மனிதனை இப்படத்தில் நிறுத்தி, அவனது நரம்புகள் தென்படும் அத்தன்மையில் அது இருக்கின்றது. முதுகின் நடுவில் பலமான நீண்ட ஒரு நரம்பும், அதன் இருபக்கங்களிலும் பலவித நரம்புகளும் உள்ளன. அவ்விடமிருந்து கால் முதலியு

அவயவங்களுக்கு நரம்புகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்நரம்பு மண்டலங்களின் முக்கிய ஸ்தானம் மூளையாகும். இதைப்பற்றிப் பின் விவரிப்போம்.

நரம்புகள் மூன்று முக்கிய பிரிவுகளை உடையன. அவை மூளையிலும் தலையிலுமுள்ள நரம்புகள், முள்ளந்தண்டுக்கொடியும், அதைச்சேர்ந்த நரம்புகள், அனுதாப நரம்புகள் என்பன ஆம். மூளையினுடைய வேலையை ஒரு தந்திச்சாலைக்கு ஒப்பிடுவோம். அங்கிருந்து செல்லும் பல நரம்புகளையும் பல தந்திக் கம்பிகளாகப் பாவிப்போம். இந்நரம்புகளில் சில மூளையினது உத்தரவை மற்ற அவயவங்களுக்கு அறிவிக்கவும், வேறு சில, மூளைக்கு மற்றவிடங்களிலிருந்து விஷயங்களைக் கொண்டு போகவும் உபயோகமாகின்றன நரம்பின் அதிர்ச்சியானது ஒரு விநாடிக்கு 10 அடி செல்லுகின்றதென ஆராய்ச்சிசெய்த அறிஞர் கூறுவர். நாம் ஏதாயினுமோர் காரியத்தைச்செய்து கொண்டிருக்குங்கால், தவறி நம் உடலிற் கத்திபாய்ந்துவிடுகின்றதென்று வைத்துக்கொள்வோம் உடனே பரிச நரம்பானது அதிவேகமாக மூளைக்கு இவ்விஷயத்தை யறிவிக்கின்றது. பின்னர், சலன நரம்பின் வழியாய் மூளையானது கத்தியை அப்புறப்படுத்தி வேண்டியபரிகாரம் செய்யச்சொல்லுகிறது.

மேன்கூறிய முள்ளந்தண்டுக்கொடியைமூளைக்கு அடுத்ததாகச் சொல்லலாம். மூளையைத் தலைமைத் தந்திச்சாலைக்கும், மற்றதை (ப் பிரிவு) கிளைச்சாலைக்கும் ஒப்பிடலாம். எல்லாவிதமான விஷயங்களுக்கும் மூளையே விடையளிப்பதைக் காட்டிலும், முள்ளந்தண்டுக்கொடியும் தக்க சமயங்களில் அவ்வவ் விஷயங்களில் மூளையின் வேலையைச் செய்யுமானால், அது

மூளைக்கு ஒரு உதவியல்லவா? ஆகவே முள்ளந்தண்டுக்கொடி-யே சிலவிடங்களில் மூளைகளின் வேலைகளைச் செய்யும். நாம் முதலில் யாதாயினுமொரு காரியத்தைச் செய்வதென்றால், மூளையின் உத்தரவுடன் செய்யலாம். பின்னர் முள்ளந்தண்டுக்-கொடியால் நாம் சாதாரணமாக ஒருவித உணர்ச்சியுமின்றியே நடக்கலாம். இனி மூளை யாதென ஆராய்வோம். அது தலை-யின் நடுவிலுள்ள ஒரு குழைந்த உறுப்பாகும். இது நெற்றி முதல் புறங்கழுத்துவரை செல்லும். மூளை, பெரிய மூளை யெனவும், அதன் பக்கலில் தலையின் பின்புறம் உள்ளது துணைமூளை எனவும் கூறப்படும். நன்கு வளர்ந்த ஒரு மனிதனது மூளை சற்றேறக்குறைய ஒரு வீசை எடை யிருக்கலாம். இதுவரை மூளையின் காரியங்களையும், அதன் அமைப்பையும் அறிவித்தோம். இனி மற்றவை எவ்வகை-யன என அறிவாம்.

முள்ளந்தண்டுக்கொடியை முன் கூறியவாறு மூளைக்கு அடுத்ததாகச் சொல்லலாம். மூளையைப் பத்திரமாகச் சில உறுப்புக்கள் பாதுகாப்பனபோல, இதையும் வேறுசில உறுப்-புக்கள் பாதுகாக்கின்றன. இக்கொடியானது மூளையிலிருந்து முள்ளந்தண்டு(முதுகின் நடுவிலுள்ள ஒரு உறுப்பு)முழுதும் செல்லும். இது ஒரு விரற் பருமனுள்ளது. தலையினடியில் இதன் வடிவம் குமிழ்போலுள்ளது. இதைப் பல்ப் என்று கூறுவர். மூளையிலிருந்தும், முள்ளந்தண்டுக்கொடியினின்-றும் நரம்புகள் உடலெங்கும் செல்லுகின்றன.

தலை நரம்புகள் 12 ஜோடிகளாய் அடிமூளையிலிருந்து வலது பக்கத்திற்குக் கிளம்பி முகத்திலுள்ள கண், காது, வாய், மூக்கு முதலிய பல பாகங்களிலும் பரவி, அவை செய்யும் தொழில்களுக்குக் காரணமாயிருக்கின்றன.

முள்ளந்தண்டு நரம்புகள், மேற்குறித்துள்ள முள்ளந்தண்டுக் கொடியினின்றும் கிளம்பி, முப்பத்தொரு ஜோடிகளாய்ப் போகின்றன. இந்த நரம்புகள் ஒவ்வொன்றிலும் மூலங்கள் இரண்டுண்டு. ஒன்றைச் சலனநரம்பு என்றும், மற்றொன்றை உணர்ச்சி நரம்பு என்றும் கூறுவர். இத்தகைய நரம்புகள் உடலெங்கும் வியாபித்து, எப்பொழுதும் உணர்ச்சியையும், சலனத்தையும் கொடுக்கக்கூடிய தன்மையனவாய் இருக்கின்றன. இவற்றின் உதவியானது நமக்கு இல்லாது போகுமானால், வெளி உலகத்தில் 'இன்ன விஷயம் நடந்துகொண் டிருக்கிறது, இன்ன செய்யவேண்டும்' என்னும் உணர்ச்சியே யற்று இருப்போம். தலை நரம்புகளையும், முள்ளந்தண்டு நரம்புகளையும் மனிதனது ஆதீனத்துக்கு உட்பட்டுள்ள நரம்புகள் எனக்கூறலாம். அனுதாப நரம்புகள் கழுத்தின அடிப்பாகத்திலிருந்து இடுப்புவரை முள்ளந் தண்டின் பக்கலில், அதனுடைய இருபக்கங்களிலும் நரம்பு நார்களுடன் காணப்படும். இவை நம்முடைய உடலிலுள்ள எல்லா உறுப்புக்களிலும் பரந்து செல்லும். இவை நாம் விழித்திருப்பினும், துயில் கொள்ளினும் எங்கெந்த அவயவம் எங்கெந்த வேலையைச் செய்யவேண்டுமோ, அந்தந்த வேலையை நமது உணர்ச்சியின்றித் தாமாகவே செய்யுமாறு செய்யக்கூடிய நரம்புகளாகும். இத்தகைய நரம்புகளை மனத்தினது ஆதீனத்திற் குட்படாத நரம்புகளெனக் கூறினும் பொருந்தும். இவைகள் மூளையிலிருந்தும் முள்ளந்தண்டுக் கொடியிலிருந்தும் பரவி நாலுபக்கங்களிலும் செல்லுகிற எல்லா நரம்புகளுடனும் பொருத்தப்பட்டிருக்கின்றன.

நரம்புமண்டலம் பல வேலைகளைச் செய்கின்றன. பெரிய மூளையானது நமது ஞாபக சக்தியையும், அறிவை-

யும் விருத்தியடையும்படியாகச் செய்ய இன்றியமையாதது. துணைமூளையானது நம்மால் உண்டாக்கப்படுகின்ற பலவிதமான அசைவுகளையும் ஓரே நிலையில் வைக்குந் தன்மை வாய்ந்தது. முள்ளந்தண்டுக்கொடியின் ஒரு பாகமாகிய குமிழ், நாம் இடையூறின்றி உண்பதற்கும், நன்கு சுவாசித்தற்கும் உபயோகமாக இருக்கின்றது. முள்ளந் தண்டுக் கொடியோவெனின், மூளைக்கு இரண்டாவதாக மேற்கூறப்பட்டபடி எல்லாவிதமான தொழில்களையும் செய்து வருகின்றது. அனுதாப நரம்புகள் நமது உடலில் இருக்கின்ற எல்லாவிதமான உறுப்புக்களின் தசைநார்களையும், நெஞ்சையும், குடலையும், இரைப்பையையும் தம் ஆதீனத்திற் குள்ளாக்கிக்கொண் டிருக்கின்றன. நரம்பு மண்டலத்தைப் பற்றிய வியாதிகளில் முக்கியமானது தலைவலியாகும்.

நரம்பு மண்டலத்தின் உறுப்புக்கள் யாவற்றினும் மூளையே சிறந்தது. உடலில் எல்லாப் பாகங்களிலுமுள்ள இரத்தத்தில் ஐந்தில் ஒருபாகம் மூளைக்கே செல்லுகின்றது ஆகையினுல் மூளைக்குச் செல்லும் இரத்தமானது, நல்லதாயிருக்கும் பொருட்டு நல்ல பதார்த்தங்களைப் புசிக்கவேண்டும். சரியான உணவு இல்லையெனின், மூளையானது தனது வேலையைச் சரியாகச் செய்யமாட்டாது. தேகமுயற்சியும், மனோவேலையும் நரம்பு மண்டலத்தை நன்கு காக்கும். இளைப்பாறுதலும், வேலை மாற்றுதலும் இனிது கைக்கொள்ளல்வேண்டும். அதிக வேலையும் மனக்கவலையும் ஆகா.



## 13. இந்திய ரப்பர்.

இலேகினியால் நாம் எழுதியதை அழிப்பதற்கு உபயோகப்படுத்தும் பொருள், இந்திய ரப்பர்த் துண்டு. ரப்பர் என்ற பெயருக்கு அதன் வினையே காரணம். ஆங்கிலத்தில் ரப்பர் என்பதற்குத் துடைக்கும் பொருள் என்று அர்த்தம்;

ரப்பர் உற்பத்தியை அறியாதார் சிலர், அது ஒட்டகத்தின் தசை என்று இக்காலத்திலும் கூசாமற் கூறிவிடுகின்றனர்.

ரப்பர் என்பது ஒருவகை மரத்தின் பால். அம்மரம் இந்தியா, பர்மா, ஆப்பிரிக்கா என்னுமிடங்களில் உண்டாகிறது; சாதாரணமாக முப்பத்தைந்து அடிமுதல் ஐம்பது அடிவரை உயர்ந்து வளர்கின்றது. அம்மரத்தின் பாலே மிகவும் பயன்படும் பொருளாதலின், அதைச் சேகரிக்கும் முறையை அறிவோம்.

ரப்பர்மரப் பாலை எடுப்பதற்குக் கோடைகாலமே ஏற்றதாகலின், அப்பொழுது மனிதர்கள் கைக்கோடரியால் மரத்தில் முதல் முதல் ஒரு வரிசையாகப் பல வெட்டுகள் வெட்டுவார்கள். அதிக ஆழம் பதியும்படி, மரத்தை வெட்டினால் நாளடைவில் அது பட்டுப்போகு மாதலால், ஒரு அங்குல ஆழத்துக் கதிகமாக வெட்டமாட்டார்கள். அங்ஙனம் வெட்டிய இடங்களுக்குக்கீழே சிறு தகரக்கிண்ணங்களைக் குழைத்த களிமண்ணால் ஒட்டவைப்பார்கள். வெட்டின இடங்களினின்று வெளிவரும் பால், அத்தகரக் கிண்ணங்களிற் சேரும். அங்ஙனம் வரும்பால் வெளிறின மஞ்சள் நிறமாக இருக்கும். அக்கிண்ணங்களில் விழுந்த பாலை அடிக்கடி வேலையாட்கள் வந்து, வேறு பெரிய பாத்திரத்தில் சேர்த்துக் கொண்டு போவார்கள்.

இங்ஙனமன்றி வேறொரு முறையாகவும் இந்தப் பால் சேகரிக்கப்படும். முதலில் கைக்கெட்டும் தூரத்தில் அம்மரத்தின் பட்டையைச் சீவி ஒழுங்காக்குவார்கள். அடிமரத்தில் இரண்டல்லது மூன்றடி உயரத்துக்குக் களிமண்ணைக் குழைத்துக் கனமாக அப்பிவிடுவார்கள். மரத்தில் உண்-

டாகும் பால் வந்து விழுவதற்கு ஒரு தொட்டியும், மரத்தின் கீழே களிமண் பூசிய பாகத்தை யடுத்து வைக்கப்படும். முன் பட்டையைச் சீவி ஒழுங்காக்கிய இடத்தில் பல வெட்டுக்களால் துவாரங்கள் உண்டாக்குவார்கள். அவற்றினின்று வழியும்பால், ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு வழிந்து வந்து, முடிவில் தொட்டியில் வந்துவிழும்.

முற்கூறியவற்றில் ஏதேனுமொருமுறையில் எடுத்த பாலைப் பெரும் பாத்திரத்தில் ஊற்றி அடுப்பின் மேலிட்டுக் காய்ச்சிச் சிறிது இறுக வைப்பார்கள். அந்நிலையில் களிமண் ஓடுகளை அதில் தோய்த்து வெய்யிலிற் காயவைப்பார்கள். இப்படிப் பலமுறைகள் செய்தால் பாலானது தட்டையாகிய ஓட்டில் படைபடையாக ஒட்டிக்கொள்ளும். பிறகு ஒரு துண்டின் உருவடைந்த ரப்பரின் ஒரு பக்கத்தில் துவாரம் செய்து உள்ளேயிருக்கும் ஓடுகளை உடைத்தெடுத்துவிடுகிறார்கள். இங்ஙனம் கிடைத்த துண்டுகள் வெண்ணிற முள்ளனவாக இருந்தாலும், புகைபடும்படி காய்ச்சிய ரப்பர், அப்புகை நிறமாகவும், வேறு நிறங்கள் சேர்த்துக் காய்ச்சப்பட்ட ரப்பர் அந்தந்த நிறங்களாகவும் இருக்கும்.

எந்தப் பொருளுக்கும் இல்லாத சில குணங்கள் ரப்பருக் குண்டு. காகித எழுத்தை அழிக்கும் தன்மை அதற்குண்டென்று முன்னமேயே உங்களுக்குத் தெரியும். ரப்பரை இழுக்குந்தோறும் அது நெகிழ்ந்து நீளும்; விட்டால் முன்னிருந்த அளவுக்கு வந்துவிடும். எவ்வளவு நேரம் நீரிற் கிடந்தாலும் நீர் உட்சென்று அதைக் குழையச்செய்வதில்லை. உள்ளீடு ஏதுமில்லாத ரப்பரைத் தரையில்

எறிந்தால், அது மேலே கிளம்பும். உஷ்ணத்தாற் இளகிய ரப்பராற் செய்யப்படும் பொருள்கள், சூடாறினவுடன் இறுகி உற்றுதிப்படுகின்றன.

இவ்விதமாகச் சிறந்த பல இயல்புகள் ரப்பருக்கு அமைந்திருப்பதால், அது மனிதருக்குப் பெரும்பயன்களை யளிக்கவல்ல பொருளாயிருக்கின்றது. எழுதிய எழுத்துக்களை வேறு பொருள்களால் துடைத்துவிடலாமாயினும், ரப்பரால் அழிப்பதுபோல் காகிதத்துக்குச் சேடின்றிச் செய்யமுடியாததால், இதனையே அக்காரியத்திற்கு உபயோகிக்கிறோம். நம்மிற் பலர் ரப்பராற் செய்யப்பட்ட அரைக்கச்சைகளை அணிதற்கு, அதன் எத்தகைய இயல்பு இடங்கொடுக்கிறது? ரப்பர் தடவப்பெற்ற துணிகளைத்தைத்துச் சட்டையாகப் போட்டுக்கொண்டால், தேகம் நனைகிறதில்லை. நீங்கள் விளையாட்டுக்கருவிகளாக உபயோகிக்கும் பலவகைப்பந்துகளும் ரப்பராற் செய்யப்பட்டனவன்றோ? பலவிதப் பதுமைகள் வகுத்தற்கு அது அதிகமாக உதவுகிறது. காலாற்றள்ளும் துவிச்சக்கர வண்டியின் சக்கரங்களையும், மோட்டார்களின் சக்கரங்களையும், செல்வர்களின் சாதாரண வண்டிகளின் உருளைகளையும், சத்தமின்றியும், உள்ளிருப்போர்க்குத் துன்பமின்றியும் செல்ல விடுப்பது, ரப்பர் மேற்கட்டன்றோ? இது உபயோகப்படும் எல்லாவிதங்களையும் எடுத்துரைக்க யாரால் ஆகும்!

---



# 14. 'கொக்கோ' என்னும் செடி.

காப்பிக்கொட்டை, தேயிலை என்பவற்றாற் செய்யப்படும் பானத்தை உங்களிற் பலர் பருகியிருப்பீர்கள். அதுபோல் கோக்கோ என்னும் பானத்தையும் இக்காலத்திற் சிலர் பருகுகிறார்கள். கொக்கோ என்ற மொழியைக் கேட்டவுடன் 'கோக்கநட்' என்று ஆங்கிலத்தில் வழங்கும் தேங்காயின் நினைவு உங்களுக்கு உண்டாகலாம் ஆயினும் இது தென்னையையும், அதன் இனத்தையும் சேர்ந்த தாவரமன்று. இங்கிலாந்தில் உண்டாகும் சேறி என்ற செடியைப்போன்றது.

ஆதியில் கொக்கோ அமெரிக்காக் கண்டத்தில் உண்டானது. தற்போது அது அங்குமட்டுமென்றி ஆசியா, ஆப்பிரிக்கா என்னும் கண்டங்களின் உஷ்ணமான பிரதேசங்களில் விசேஷமாகப் பயிராக்கப்படுகிறது.

நன்கு வளர்ந்த இத்தாவரத்தின் இயற்கையான உயரம் முப்பதடியாம். இதனைப் பயிராக்குபவர் சாதாரணமாகப் பத்துப் பதினைந்து அடி உயரத்திற்கு அதிகமாக வளர விடாமல் கத்திரித்து விடுகிறார்கள். அவர்கள் அதன் பழங்களை எட்டிப் பறிப்பதற்கும், மரம் படர்ந்து வளர விடுதற்கும் அங்ஙனம் செய்கிறார்கள். கொக்கோவின் மெல்லிய இலைகள் பார்ப்பதற்குப் பச்சைப் பசேலென்று மிக்க அழகாக இருக்கும். அதன் மலர்கள், கிளைகளில் மட்டுமன்றி அடிமரத்திலும் அடர்ந்து மொய்த்திருக்கும். அதன் முற்றிய காய்கள் சற்றேறக்குறைய எட்டங்குல நீளமும், நான்கு அங்குல அகலமும் அமைந்தன. காய் பழமாகும்பொழுது, முதலில் மஞ்சள் நிறமாகவும், பிறகு சிவப்பு நிறமாகவும் ஆகும். அதன் அடி பருத்தும், நுனி சிறுத்துக் கூர்மையாயும் காணப்படும்.

கொக்கோ முதல் முதல் காய்ப்பதற்கு ஆறு அல்லது ஏழு வருஷங்கள் செல்லும். அச்செடியில் அதன் பழமே சிறந்த பாகம். அதற்குள் அமைந்த அறைகள் ஒவ்வொன்றிலும் இருபதுமுதல் நாற்பது விதைகள்வரை உண்டு. அவ்விதைகளை எடுத்து இரண்டு மூன்று நாட்கள் பூமியிற் புதைத்துவைத்து, அப்பாலெடுத்து வெயிலிற் காயவைத்து வறுத்துச் சிறு துண்டுகளாக்கி வர்த்தகப் பொருளாகச் செய்கிறார்கள்.

சாதாரணமாக, நமது தேசத்தில் உபயோகப்படும் கொக்கோ என்னும் பொடி, முற்கூறிய வித்துக்களை வறுத்திடித்த வஸ்துவேயாகும். அதனைப் பாலொடு கலந்து சிறிது சர்க்கரையைச் சேர்த்துப் பருகினால் அதிக உருசி-

யாயும், நறுமணமாயும் இருக்கும். காப்பி, தேயிலைப் பானங்களின் எல்லாத் தன்மைகளும் இதற்குண்டு. அன்றியும், இரத்தத்தைச் சுத்திசெய்து, மாமிசத்தை விருத்தியாக்கும் இயற்கையும் இதற்குள்ள தென்கிறார்கள். கொக்கோ விதைகளைப் பானமாக உபயோகிப்பதோடு உணவாகவும் பலர் உட்கொள்ளுகிறார்கள்.

---

## 15. தாவரங்களைத் தாக்கும் பூச்சிநோய்.

கிருஷிகரின் வேளாண்மை குறைவுபடுதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் அதிக விசேஷமானது பூச்சி நோயே. செடியைச் சேதம் செய்யும் எல்லாச் சிறு பிராணிகளும் கேடுதரும் பூச்சிகள் ஆகா. ஆயினும் அவற்றை யெல்லாம் நாம் பூச்சியென்றே சொன்னாலும், அது தவறு.

பூச்சி என்ற வார்த்தை மூன்று எழுத்துக்களால் ஆனது போல, பூச்சியின் சரீரமும் மூன்று பிரிவாக அமைந்துள்ளது. அவை தலை, மார்பு, உடம்பு என்பன ஆம். அதன் தலையில் இரண்டு உணர்ச்சிக் கருவிகளும், இரண்டு கண்களுமுண்டு. மார்பின் மேற்புறத்தில் இரண்டு சோடி இறகுகள் உண்டு. மார்பின அடிப்பாகத்தில் பக்கத்துக்கு மூன்றாக இருபக்கங்களிலும் மூன்று இணைக்கால்கள் உண்டு. அதன் கால்கள் பல பொருத்துக்களால் ஆனவை; உடம்பு பல வளையங்களால் பொருத்தப்பட்டிருக்கும். அவ்வளையங்கள் ஏறக்குறைய பத்து இருக்கும். இவ்வுடற் பாகந்தான் அதன் உறுப்புக்களிற் பெரியது. இந்த இலக்கணங்களோடு கூடியதுவே பூச்சியெனப்படுவது.

ஈக்கு இரண்டு சோடி இறகுகளே உள்ளன. இதுவும் பூச்சி இனத்தைச் சேர்ந்தது. எறும்பு, இராவணன் பூச்சி முதலியவைகளுக்குச் சிறகுகள் இன்றேனும், மற்ற உறுப்புக்களில் வித்தியாசப்படுவதில்லை. ஆகையால் இவைகளும் பூச்சிகளே. ஒரு வண்ணாத்திப்பூச்சியைப் பிடித்துப் பார்ப்போம். அதில் ஒரு பூச்சிக்குரிய எல்லாப் பாகங்களையும் நன்கு காணலாம். ஒரு சிலந்திப் பூச்சியைப் பாருங்கள். அதன் சரீரம் மூன்று பாகங்களாகப் பிரிக்கப் படவில்லை. அதன் தலையும், மார்பின் பாகமும் சேர்ந்துள்ளன. அதற்குக் கால்கள் நான்கு சோடிகள் உள்ளன; சிறகுகளோ கிடையா. ஆதலால் இது பூச்சி இனத்தைச் சேர்ந்ததன்று.

பூச்சிகளுக்கும், மற்றச் சாதிப்பிராணிகளுக்கும் அதிக பேதமுண்டு. சரீர அமைப்பிலும், தோற்றத்திலும், பிறப்பு முதல் சரியான பருவம் அடையும் வரையிற் பார்த்தாலும், இவ்வேறுபாடு புலனும். ஆகையால் இவ்விநோதமான பூச்சியின் ஜீவிய சரித்திரத்தை யறிந்துகொள்வது அவசியம். பூச்சி தன் முட்டைகளைப் பூவிலேனும், தண்ணீரிலேனும், இலையின் அடிப்புறத்திலேனும், இலையைச் சுருட்டி அதற்குள்ளேனும், தண்டைத்துளைத்து அதற்குள்ளேனும் இடும். அந்த முட்டைகள் பொரிந்தவுடன், அவற்றினின்று புழுக்கள் உண்டாகும். இப்புழுப் பருவத்திற்றான், அவை பயிர் பச்சைகளைத் தின்று மிகுந்த நாசத்தை உண்டுபண்ணுகின்றன. இங்ஙனம் புழுவாயிருக்கும் நிலைமை மாறி, தன்வாயினின்று உண்டாகும் மெல்லிய நூலாற் கூடுசெய்து, அக்கூட்டில், சில நாட்களுக்கு உணவு கொள்ளாமலும், வெளியேறாமலும் செயலற்றது போலிருக்கும். அங்ஙனம் இருக்-

கும்போது, அதற்குப் பூரண பூச்சிபாதற்குரிய கால்கள், தலை, கண்கள், பரிச கருவிகள், சிறகுகள் முதலியன உண்டாகின்றன. இவ்வுறுப்புக்கள் உண்டானவுடன், அது பூரண பருவமடைந்து, கூட்டை உடைத்துக்கொண்டு வெளியேறிவிடும். வெளிவரும்போது சில சாதிகள் வண்ணாத்திப் பூச்சி இனமாகவும், சில வண்டு இனமாகவும் இருக்கின்றன. சில வகைப் பூச்சிகள் முட்டையிலிருந்து வெளிவந்தவுடன், தாய்ப்பூச்சியைப் போலவே, எல்லா உருவத்திலும் ஒத்திருக்கும். ஆனாற் பருமனில் மாத்திரம் தாயினும் சிறிதாகக் காணப்படும்.

இப்பூச்சிகள் இருவகுப்புள் அடங்கும். சில சாகபக்ஷணிகளாகவும், சில மாமிச பக்ஷணிகளாகவும் இருக்கின்றன. இவைகளிற் சாகபக்ஷணிகளே பயிர் பச்சைகளுக்கு அதிகத் தீங்கை விளைவிக்கக்கூடியன. மற்றவை, அப்பூச்சிகளை அழித்துக் கிருஷிகர்களுக்கு அனுகூலம் செய்வன. தாவரங்களுக்குக் கேட்டைக் கூட்டுவிக்கும் சிலவகைப் பூச்சிகளைப் பற்றி இப்பாடத்தில் அறிவோம்.

பயிர்களுக்குத் தீமை உண்டாக்கும் பூச்சிகள் பல உள்ளன. சில, பயிர்பச்சைகளை இரம்பம்போன்ற தமது தாடைகளால் வெட்டிக்கடித்துத் தின்றுவிடுகின்றன. சில, செடியின் தண்டு, காய் முதலியவைகளைத் துளைத்துச் செடிக்குச் சாரம் போகாதபடி செய்கின்றன. இவற்றால் காயின் உருசியையும், காயிலுள்ள விதைகளையும், பருத்திச் செடியிலுள்ள மிருதுவான பஞ்சையும் கெடுத்துவிடுகின்றன. வேறுசில, தாவரத்தின் மெல்லிய பாகங்களிலுள்ள சாற்றை உறிஞ்சி விடுகின்றன. வெட்டுக்கிளி, வண்டு முதலியன கடித்துத்தின்-



A
B
C
K. S. Naidu

## படத்தின் குறிப்பு.

### A பருத்தி.

1 பருத்திச் செடியைத் தாக்கும் புழுவின் முட்டை.
2-a புழுவின் சிறு உருவம்.
2-b வளர்ந்த புழு.
2-c புழு பருத்திச் சுளையைக் கெடுப்பதைக்காட்டும் படம்.
2-d புழு பருத்திவிதையைத் துளைத்திருப்பதைக் காட்டும் படம்.
3 கூட்டுப்புழு.
4 கூட்டினின்று வெளிவந்த பூச்சி.
4-a அந்தப் பூச்சி பறக்கும் மாதிரி.

### B கத்தரியும், பூஞ்செடி இலைகளும்.

1-a முட்டைகள்.
1-b புழு (எரிபூச்சியின் இனம்)
1-c கூட்டுப் புழு.
1-d வண்டு.
2-a புழு குருத்தை வெட்டும் மாதிரி.
2-b இப்புழு காயைத் துளைத்தல்.
2-c கூட்டுப்புழு (உறைப்புழு.)
2-d வண்ணாத்திப்பூச்சி(moth)
3 பூஞ்செடி இலையும், அசுவணிப் பூச்சிகளும்.
4 பூஞ்செடி இலையும், செடிப்பேனும்.
5 செடிப்பேனின் பூர்ண உருவம்.

இதில் வெவ்வேறான மூன்று வகைப் பூச்சிகள் இருப்பதைக் கவனிக்க.

### C நெற்பயிர்.

1-a இளவிட்டிற் பூச்சி.
1-b நடுத்தர விட்டிற் பூச்சி.
1-c பெரிய விட்டிற் பூச்சி.
2-a முட்டைகள்.
2-b புழுவும், பாதுகாப்புக் கூடும்.
2-c கூட்டுப்புழு.
2-d பறக்கும் பூச்சி (moth.)
3-a முட்டை.
3-b சேனை (படை) ப்புழு. (படைப்படையாய்வரும் புழு சிறிதும் பெரிதும்)
3 c பூமியில் இருக்கும் கூட்டுப் புழு.
3-d ஒருவகை வண்ணாத்திப் பூச்சி (இரவிற் காணப்படும்.)

னும் வகுப்பைச் சேர்ந்தவை. வெட்டுக்கிளி சிறிய சோளப் பயிர், நெற்பயிர், அவரை, பீர்க்கு முதலியன சிறு செடிகளாய் இருக்கும் பருவத்தில், அவற்றின் தண்டுகளையும், இலைகளையும் வெட்டிக் கடித்து விழுங்கிவிடுகின்றன. இவை கூட்டம் கூட்டமாக வந்து, எதிர்ப்படும் பயிர்களில் விழுந்து அவற்றை அழித்துக்கொண்டே செல்லும்.

சிலவகைச் செடிப் பேன்கள், அவரை, மொச்சைக் கொடிகளையும், தோட்டத்திலுள்ள கத்தரி, சீமைத்தக்காளிப் பயிர்களையும், பூஞ்செடிகளையும்பற்றி, அவற்றிலுள்ள சாரத்தை உறிஞ்சிக் கெடுத்துவிடுகின்றன. அசுவணி என்ற பூச்சிகளும் முற்கூறிய தாவரங்களை அடிக்கடி கெடுப்பதுண்டு. விபூதிபோன்ற ஒருவித வெண்ணிறப் பூச்சால் அப்பூச்சிகள் மூடப்பட்டிருக்கும். ஆதலால் அவற்றை எளிதில் கண்டுகொள்ளலாம்.

கத்தரி போன்ற தோட்டப்பயிர்களில் இவ்விரண்டைத் தவிர வேறுவகைப் பூச்சிநோயும் உண்டாகும். கத்தரியில் இருவகைப் பூச்சிகள் விழுவது உண்டு. அவற்றில் ஒரு வகை, கத்தரியின் குருத்துகளையும், காய்களையும் துளைத்துத் தின்று கெடுத்துவிட்டுக் கூட்டுப்புழுவாய் இரவில் வெளிவரும் ஒருவகை வண்ணாத்திப்பூச்சி ஆகிவிடும். மற்றொரு வகைப்புழு எரிபூச்சி என்னப்படும். இது புழுவாயிருக்கும்போதும், பூரண வண்டாயிருக்கும்போதும் இலையிலுள்ள பச்சையைச் சுரண்டி உட்கொள்ளும்; அதனாற் செடிகள் கெட்டுப்போம்.

நெற்பயிரைத் தாக்கும் பூச்சிநோய் பலவகைப்படும். அந்த நோயை உண்டாக்கும் பூச்சிகள் பொதுவாக முட்டை,

புழு, கூட்டுப்புழு, பறக்குப்பூச்சி என்ற நான்கு நிலைகளை-யடைந்தாலும், அவற்றில் ஒவ்வொன்றின் இனமும், உருவ-மும், அவை புழுவாயிருக்கும்போது செய்யும் கேடுகளும் வித்தியாசப் படுகின்றன. அவற்றில் பிட்டில்களால் உண்-டாகும் தீமையை முன்னமே கூறினோம். இரண்டாவது நோய் உறைப்புழுவால் உண்டாகின்றது. இது பச்சை நிறமுள்ள புழு. இது புழுவாயிருக்கும்போது நெற்றாளைத் துண்டுதுண்டாகக் கத்தரித்து ஆபத்துக்காலத்தில் தான் ஒளிந்துகொள்வதற்கு நெற்றாளின் மேற்பாகத்தில் உறை செய்துகொண்டு அதனுள் வசிக்கும். பயிரின் ஒரு பாகத்தி-லிருந்து மற்றொன்றுக்குக் கூட்டோடு நகர்ந்து சென்று தாள்-களைக் கத்தரித்துத் தின்றுவிடும். அப்பாற் கூட்டுப் புழுவாக-வும், பறக்கும் பூச்சியாகவும் ஆகும். மூன்றாவதுவகை நோய், சேனைப்புழு அல்லது படைப்புழுவால் உண்டாகிறது. புழுப் பருவத்தில் பலஒன்றுசேர்ந்து கூட்டங் கூட்டமாக வருவதால், இவற்றைச் சேனைப்புழுக்கள் என்பர். இவை சிறு புழுவாய் இருக்கும்போது, பச்சைநிறமுள்ளன. நாற்றங்கால்களி-லேயே பயிரைக்கெடுத்து, அதை வெளிறும்படி செய்துவிடும். இவை பச்சைநிறமாய் இருப்பதால், இவற்றிற்கும், பயிருக்-கும் வித்தியாசம் தெரிவதில்லை. இவை உஷ்ணமான பகல் நேரத்தில் விசேஷமாக வெளிப்படுவதில்லை. ஆனால் மந்தார-மான பகலிலும், இரவிலும் வெளிப்படும். இவை கூட்டுப்-புழுவாய் இருக்கையில், தரையின்கீழ் இருக்கும். அந்நிலை விட்டதும் இது வண்ணாத்திப்பூச்சி ஆகிவிடும்.

## 16. தாவரப் பூச்சிநோயைத் தடுக்கும் விதம்.

பூச்சிகளால் தாவரங்களுக்கு நோய் வந்தணுகாமல் தடுக்கும் முறைகளை அறிதல் அவசியமல்லவா? பூச்சிகள் வாராதவாறும், தாவரங்களைக் கெடாதவாறும் தடுப்பதற்குப் பல முறைகள் உள்ளன. அவற்றில் முக்கியமான சிலவற்றை இங்கு அறிவோம்.

சுத்தமாக நிலத்தைப் பண்படுத்தி அதைக் களையின்றி எப்போதும் வைத்திருக்கவேண்டும். வாய்க்கால் வரப்புகளிலுள்ள புல், பருஞ்செடிகள் முதலியவற்றை வேரோடு பறித்து எறியவேண்டும். இங்ஙனம் செய்வதனால் பூச்சிகள் தங்குதற்கும், தின்று பிழைப்பதற்கும் இடமின்றிப் போய்விடும். ஒரே இனத்தைச் சேர்ந்த பயிர்களை, ஒரே நிலத்தில் வருஷா வருஷம் சாகுபடி செய்யாமல், பயிர்களை மாற்றிச் சாகுபடி செய்யவேண்டும். இவ்வாறு செய்துவந்தால், ஒரு விளைச்சலைப்பற்றி வருத்தும் பூச்சிகள், மற்றொரு பயிரை வருத்தா. உதாரணமாக, சோளத்தில் விழும் கம்பளிப்பூச்சி பருத்திச்செடியைச் சேதப்படுத்துவதில்லை. பருத்தியைக் கெடுக்கும் செம்புழு, சோளப்பயிரைப் பற்றுவதில்லை. ஆகையாற் பயிர்களை மாற்றிவந்தால், நிலத்தில் ஒருவாறு பூச்சிகள் பல்காதே தடுக்கலாம்.

கோடைக்காலத்தில் நிலத்தை உழுது மண்கட்டிகளை நன்றாகப் புரட்டிவிட்டால், பூமிக்குள் இட்டிருக்கும் பூச்சியின் முட்டைகளும், பூச்சிக் கூடுகளும் மேலே கொண்டுவரப்படும். இவைகள் சூரிய உஷ்ணத்தாலும், பட்சிகளாலும் நாசமடைகின்றன. புற்களும் அந்நிலத்தில் இல்லாதவாறு எடுபடும். மேலும், பயிர் இல்லாத காலங்களில் பூச்சிகளுக்கு ஆகாரம் இல்லாத தன்மை ஏற்பட்டுவிடுகிறது.

நிலத்துக்கு அதிக உரமிட்டால், பயிர்கள் நன்கு செழித்து வளருமென்று முன் புத்தகத்திற் படித்திருக்கிறீர்கள் அல்லவா? அங்ஙனம் வளரும் பயிர்களைத் தாக்கினாலும், பூச்சிகள் அவற்றுக்கு விளைக்கும் கேடுகள் பயன்படா.

உறைப்புழுக்களைத் தடுப்பதற்கு, வயலில் தண்ணீர் நிரம்பத் தேக்கி (கட்டி) வரவேண்டும். தண்ணீர் நிரம்பியிருக்கும்போது, அப் பூச்சிகள் வெளியேறி வருகின்றன. அவற்றை நாம் நேரிற் பார்க்கலாம். இங்ஙனம் வெளியேறும் பூச்சிகளைக் காகம், மைனா, பருந்து முதலிய புள்ளினங்கள் பற்றித் தின்பதை நாம் கண்கூடாகப் பார்க்கலாம். ஆதலால், அடிக்கடி நீரை வயலிற் கட்டிவைத்தால், பூச்சிகள் பல்க இடமின்றிப்போம். அவை தரையிலேயே முட்டையிட்டுப் புழுக்களை உண்டாக்கவும் வழியிராது.

விசேஷமாகக் கம்பு, நெற்பயிர் இவற்றில் விழும் பூச்சிகளை விளக்குப் பொறியால் அழித்துவிடலாம். ஒரு பெரிய பாத்திரத்திற் கிரஸனும், தண்ணீரும் கலந்துவைத்து, அதன்மேல் ஒரு வெளிச்சத்தை வைத்தால், அந்த வெளிச்சத்தாற் கவரப்படும் பூச்சிகள் விளக்கிற் பாய்ந்து கீழேயுள்ள நீரில் விழுந்து நாசமடையும்.

விதைக்கும் காலத்தையும், பயிர்களைப் பெயர்த்துநடும் காலத்தையும் சிறிதுமுன்பின்னாக மாற்றிவந்தால், பூச்சிகளாலுண்டாகும் சேதத்தை ஒருவாறு நிறுத்தலாம். உதாரணமாக, வருஷத்தில் ஒரு குறித்த பருவத்தில் மாத்திரம் வெளிப்படும் பூச்சிநோய் பிந்தி விதைப்பதால், அந்நோய் தோன்றும் காலத்தில், ஆகாரம் கிடையாமல் மடியும். அல்லது அப்பூச்சிநோய் வெளிப்படுமுன் விதைப்பின், பயிர்-

கள் சரியான வளர்ச்சிக்கு வந்துவிடுமாதலால், அந்நோயின் கடுமையைத் தாங்கிக்கொள்ளும் சக்தி உடையன ஆகின்றன. உதாரணமாக, பொக்களவண்டு *என்ற பூச்சி தானியப் பயிர்களின் புஷ்பங்களைச் சேதப்படுத்தும். அவைகள் வெளிப்படும் காலங்களை அறிந்து, தானியப் பயிர்கள் புஷ்பிக்கும் காலத்தை முந்தும்படியாகவாவது, பிந்தும்படியாகவாவது பயிரிடலாம்.

மாமிசபக்ஷணிகளாகிய சிலபறவைகளை வளர்த்து வயலிலுள்ள பூச்சிகளையும் புழுக்களையும் கொல்லும்படி செய்பலாம். விசேஷமாகக் கோழி, கினிக்கோழி என்பன பூச்சி, புழுக்களைத் தின்று அவற்றைக் குறைக்கும். மைனு, பஞ்சிவெட்டான் முதலிய காட்டுப்பறவைகள், பூச்சி புழுக்களையே பிடித்துத் தின்பதில் தங்கள் காலத்தைக் கழிப்பன. ஆகையால் அவ்வகைப் பறவைகள் தங்குவதற்கு நீண்ட குச்சிகளை வயலின் மத்தியில் நட்டால், அவைகள் அவற்றில் உட்கார்ந்து வயலில் அங்குமிங்கும் அசைந்தும், பறந்தும் திரியும் பூச்சிகளை ஆராய்ந்து பிடிக்கும்.

நிலத்தைச்சுற்றி நாற்றங்கால் செய்வதுபோல் வாய்க்காலைத்தோண்டி, அதன் மேலெல்லாம் புழுதியாக்கிவைத்தால், அதில் ஊர்ந்துசெல்லும் புழுக்கள் அதனைத் தாண்ட முடியாமல் அங்கேயே விழுந்தொழியும்.

விலையுயர்ந்த காய்கனிகளைச் சாக்கால் அல்லது சிறு ஓலைப்பெட்டிகளால் மூடிக்கட்டிவிட்டால், பூச்சி புழுக்களேயன்றி அணில், கிளி, வௌவால் முதலியனவும் எளிதிற் சேதப்படுத்தமாட்டா.

பூச்சிநோய் தாவரங்களை நன்கு பற்றியபின், அவைகளைக் குறைப்பதற்கும், விலக்குவதற்கு முரிய சில உபாயங்-

* Blister beetle.

களை இனிக் கூறுவோம். கம்பளிப்பூச்சி, பச்சைவண்டு, கத்தரிச்செடியில் விழும் எரிபூச்சி முதலியவற்றைக் கையிற் பிடித்து நசுக்கி அழித்துவிடலாம். அவை மிதமிஞ்சியிருந்தால், கைவலை அல்லது பெரிய வலையைப் பயிர்மேற் பாசிக்கொண்டே போனால்; எல்லாப் பூச்சிகளும் வலைக்குட்சிக்கும். எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து அப்புறப்படுத்தலாம்; அல்லது ஓர் இடத்தில் அழித்துவிடலாம்.

சாதாரணமாகப் பயிர்க்குழி புஷ்பச்செடிகள் என்பவற்றைத் தாக்கும் பூச்சி புழுக்களைப் புகையிலைக் கஷாயத்தால் அழிக்கலாம். புகையிலையை அரைமணிநேரம் தண்ணீரில் ஊறவைத்த பிறகு, அதைக் கொதிக்கவைத்து அந்த நீரை சோப்கலந்த நீரிற் கலந்து, அங்ஙனம் சேர்ந்த கஷாயத்தோடு, அதைப்போல் பத்துப் பங்கு தண்ணீரைக் கலந்து, பீச்சும் குழாயால் அதை எடுத்துக்கொண்டு, அசுணி முதலிய பூச்சிகளின்மேல் நன்றாய்ப் பீச்சினால், அவை அழிந்துபோம். பூச்சிகளை யழிக்கும் நப்தலீன் என்ற மருந்தைப்பொடிசெய்து அதனோடு இருமடங்கு சாம்பலைக் கலந்து இங்குக்கூறிய தாவரங்கள்மேல் தூவினாலும் பூச்சிகள் அழியும்.

அரை இராத்தல் மீன் சோப்பை மூன்றுபடி தண்ணீரிற் கலந்து, அதனோடு ஆறுபடி கிரஸன் சேர்த்துக் கவலையோடு கொதிக்கவைத்து, பிறகு அதைத் தயிர்கடைவதுபோல மத்தாற் கால்மணிநேரம் கடையவேண்டும். பின் இந்த மிசிரத்தைப் பூச்சிகள் தங்கிய செடிகள்மீது குழாயாற் பீச்சினாலும் பூச்சிகள் அழிந்துபோம்.

காய்ந்த சுண்ணாம்புத்தூளைச் செடிகளில் தூவினாலும் சில பூச்சிகள் அழிந்துபோம். விசேஷமாகக் கீரை, காய்கறிச்-

செடிகள்மீது இத்தூளைத் தூவுவது நலம். இப்பொடியின் காரத்தைப் பொறுக்கமுடியாமல் வேறு இடங்களுக்குப் பூச்சிகள் அகன்றுவிடும். கனிவர்க்கத் தாவரங்களின் தூரிலும், கிளைகளிலும் வெள்ளையடித்தால், துளைக்கும் வண்டுகள் அவற்றை அணுகா.

சுண்ணும்பு கலந்த மயில் துத்தமும் பூச்சிகளைப் போக்கத்தக்கது. ஒரு இராத்தல் மயில் துத்தத்தையும், ஒருஇராத்தல் சுண்ணும்பையும் தனித்தனியே தண்ணீரில் நன்ருய்க் கலந்து, இரண்டையும் மூன்ருவது பாத்திரத்தில் ஊற்றி வடிகட்டவேண்டும். இந்த நீரைப் பீச்சும் குழாயில் எடுத்து நோய்பிடித்த தாவரங்கள்மேல் தெளித்தால், நோய் நீங்கிவிடும்.

கரும்பில் அதிக தித்திப்பான பொருள் இருப்பதால், நட்டவுடன் கறையான் முதலிய சிலபூச்சிகள் அதைத்தின்று விடும். அதைத்தடுப்பதற்கு ஒரு முறையைக் கையாடலாம். தனி மயில் துத்தம் கலந்து காய்ச்சி ஆற்றிய நீரிற் கரும்புத் துண்டுகளைத்தோய்த்து நட்டால், அவற்றை தளிர் இலை முதலிய வளரும்வரை, வெளியிலுள்ள பூச்சிகள் அணுகமாட்டா. அவற்றில் இருக்கும் நோயும் அற்றுப்போகும். கரும்பை நட்டவுடன், பூச்சிகள் அணுகுதற்குக் காரணமாயிருந்த சர்க்கரைப்பொருள், அது கிளைத்துவளர ஆரம்பித்தவுடன் குன்றிவிடுமாதலால், அதை அவ்வளவாகப் பிடிக்கமாட்டா.

தாவரங்களுக்கு உண்டாகும் பூச்சிநோய்க்குப் பல மருந்துகளை நாம் அறிந்திருந்தாலும், அந்த நோய்வரு முன்னமே வாராதவாறு காத்துக்கொள்ளுதலே சிறந்தவழி. வந்தபின் காத்தல், வெள்ளம் பெருகியபின் அணைகட்டுதற்கு

நோகும். ஆயினும் நோய்வந்துவிட்டால், முற்கூறிய முறைகளைக் கையாளவேண்டும். அவை நன்கு பலியாவிட்டால், விவசாய சாத்திரம் கற்றறிந்தவர்களின் உதவியால் நோயை உடனே நீக்கி, நல்ல விளைவுப்பயனை அடையவேண்டும்.

---

## 17. அதிவீரராம பாண்டியன்.

பாண்டியர் என்னும் பட்டம் வகித்த அரசர், ஆயிரக்கணக்கான வருஷங்கள் கொற்கை, மதுரைமுதலிய நகர்களைத் தலைநகர்களாகக்கொண்டு, பாண்டியநாட்டைப் பரிபாலித்தனர். பதினாறுவது நூற்றாண்டில் அவர்கள் நாட்டைப் பகைவர் கைப்பற்றிக்கொண்டனர். ஆதலால், அப் பாண்டியமன்னர் பல பிரிவினராகப் பிரிந்து சிற்றரசராகவே செங்கோல் செலுத்தினர்.

அவர்களில் அதிவீரராமபாண்டியன் ஒருவன். அவன், இற்றைக்கு 360- ஆண்டுகளுக்குமுன், தென்காசியில் ஆட்சி புரிந்தவன். அவன் தந்தை நெல்வேலிப்பாண்டியன் என்ற குலசேகரன். அவன் பெரியப்பன் மகனான வரதுங்கராமபாண்டியன், கரிவலம்வந்தநல்லூரில் காவலனாக இருந்தவன். இவ்விரு சகோதரரும், செந்தமிழ்ச் செய்யுள்நூல்கள் பல இயற்றியிருக்கின்றனர்.

'தந்தையினும் சதமடங்கு தனயன்' என்ற பழமொழிக்கேற்ப, குலசேகரனென்ற திருநெல்வேலிப் பாண்டியனைப்போலவே, அவன் குமாரனான அதிவீரராமபாண்டியனும் கல்வி கேள்விகளில் மேம்பட்டவன்.

இவன் சிறுவயது முதலே சங்க இலக்கிய இலக்கணங்களையும், இதிகாச புராணங்களையும் ஐயந்திரிபற ஓதி

உணர்ந்தான். தக்க பருவம் அடையவும் அவன் கற்றறிந்ததன்றி, செம்பாகமான கவிகளைச் செந்தமிழிற் செப்பும் சிறப்பும் வாய்ந்தான். இக்காவலன் தன்மையறிந்த பாவலர் பலர், எக்காலமும் அவன்பால் வந்தனர். வந்தவரில் பரணி பாடுவோர்க்குத் தரணியும், மும்மணிக்கோவை மொழிவார்க்கு மும்மணிக்கோவையும், நான்மணிமாலை சொல்வார்க்கு நான்மணிமாலையும் பரிசிலாகத் தந்தனன். அருந்தமிழ்ப் புலவரை ஆதரித்தானாதலின், அவன் நாட்டில் கவி பாடத் தெரியாதார் இல்லை. பூமடந்தையர் பாமடந்தையராயினர். புற்கட்டு எடுப்பாரும் சொற்கட்டு எடுத்தனர். கவிகை பிடிப்பாரும் கவி கைபிடித்தனர். காவலரும் பாவலராயினர். சுருங்கச் சொல்லில், அவன் நாடு முழுதும் பாவலரே நிரம்பினர்.

அதிவீரராமனும் கற்றவர்க்கும், நற்றவர்க்கும் இங்ஙனம் பரிசில் ஈந்தனன். அன்றியும் அவன் எப்புலவரிடமாவது தோல்வியுற்றால், அவர் கையால் குட்டுண்டான். தனக்குத்தோற்ற புலவரை அவன் குட்டிவந்தான். இங்ஙனம் பள்ளிப் பிள்ளைகள் விளையாட்டைப் பாரரசன் கைக்கொண்டான் ஆதலின், இவனைப் பலர் பிள்ளைப்பாண்டியன் என்பர். 'குட்டுதற்கோ பிள்ளைப்பாண்டிய னிங்கில்லை' என்றொரு புலவர் இவனைப் பாராட்டியிருப்பதும் காண்க.

இவன் சிங்காரமான சித்திரக்கவிகளைப் பாடும் சிறப்புடையவனாதலின், அத்தன்மைக்கேற்ப ஒரு நூல் எழுதத்துணிந்தான். அவ்வளவில் உயர்வுற்ற குலத்தாலும் அயர்வற்ற பலத்தாலும் மேம்பட்ட நிடதநிருபனான நளன் சரிதையை விருத்தப்பாக்களில் எழுதி வந்தனன். அதனைப்

பார்த்த யாவரும் பெரிதும் பாராட்டினர். சிலர் அதனைப் பஞ்சகாவியத்தினும் மிஞ்சியதென்றும், சிலர் அதனைக் கற்பனைக் களஞ்சியமென்றும், சிலர் இப்புவிராயர் கவிராயர்க்குத் தந்த புத்தமுதமென்றும், வேறுசிலர் இது நைடதம் அன்று, புலவர்க்கு ஔடதமே என்றும் பலவாறு புகழ்ந்துரைத்தனர்.

அந்நூலை முடிக்குமுன் வரதுங்க ராமனிடம் அதைக் காட்ட அவன் நிச்சயித்தனன். உடனே பரிவாரங்கள் சூழப் புறப்பட்டுக் கரிவலம்வந்தநல்லூர் வெளிப்புறச் சோலையில் தங்கினன். பிறகு நைடத ஏடதனை ஒரு புலவர் கைக்கொடுத்து வரதுங்கனிடம் காட்டிவரச் சொன்னான். சென்ற புலவர், முன்னவனான மன்னவனைக்கண்டு, 'அரசே! தங்கள் இளையவரும் தென்காசிக்காவலருமாகிய அதிவீரராம பாண்டியர் இந்நகர்ப் புறத்துள்ள சோலையில் தங்கியுள்ளார். என் கையிலுள்ள இவ்வேடு அவர் அரிதின் இயற்றிய நைடதமாகும். இதைச் சமுகத்தில் தந்து பார்வையிட அனுப்பினர்.' என்று அதனை நீட்டினார்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட சிவபக்தனான வரதுங்கனுக்கு வந்த மனவருத்தம் இவ்வளவவ்வள வன்று. தம்பியின் செயலில் அவனுக்கு வெறுப்புண்டாயிற்று. 'பண்டு தொட்டு வந்த பாண்டிய மரபில் உதித்த என் பின்னவனுக்கு இத்தகைய எண்ணம் ஏனோ எழுந்தது? சங்கப்புலவரும், துங்கக் கடவுளரும் சீராட்டிப் பாராட்டிய தமிழ்ப்பாஷையில் கடவுளைப்பாடும் கருத்திலனாகித் தன்னையொத்த மன்னவனான நளனைப் பாடினனே' என்று தனக்குள் எண்ணினான். பிறகு அங்குவந்த புலவரை நோக்கி 'இந்த ஏடு நன்றாயிருக்கிற-

தென்று என் அநுசனுக்கு அறிவியும்' என்று கூற, அவரும் சென்று தென்காசித் தென்னவனிடம் ஏட்டைத் தந்து நடந்ததை அப்படியே நவின்றனர்.

தமையன் சொல்லைக்கேட்ட பிள்ளைப்பாண்டியன் மனம் சள்ளைப்பட்டது. தான் அனுப்பிய ஏட்டைத் திரும்பிப் பாராமல் அனுப்பிய முன்னோன் பொறுமைக் குணம் வாய்ந்த புல்லன் என்று துணிந்தான். 'பாம்புக்கு விடம் பல்லில், பங் காளிக்கு விடம் பார்வையில்' என்பாராதலின், இவன் என்மேற் பகைமைகொண்டு அவமதித்தான். தமிழில் அறிவற்ற இவன் தலையை இப்போதே துணிப்பேன், என்று சொல்லிக்கொண்டு கையிலேந்திய வாளுடன் வரதுங்கன் தங்கிய கோவிலுட் சென்றான். அங்கே அவன் கண்ணுதற் பெருமானைக் கருத்திலமைத்துப் பூசை செய்தலை அவன் பார்த்தான். பூசை முடிந்தபிறகு, அவனை வெட்டுதலே தகுதி யென்றெண்ணி அதிவீரராமன் ஓங்கிய வாளுடனே அங்கு ஒளித்திருந்தான்.

முன்னவன பூசைசெய்து முடித்துவிட்டு, பிரதிதினமும் காளகண்டன்மேல் கவிபாடும் இயற்கைப்படி ஒரு பாட்டைப் பகர்ந்து நமஸ்கரித்தான். அப்பாடல்,

'சங்கக் குழையனைத் தென்கரு வாபுரித் தாணுவைவான்
கங்கைச் சடையனைப் பாடல்செய்யாத கவிப்புலவீர்!
அங்கச்சுமைகொண் டெழுநான்கு கோடி யழிநரகப்
பங்கத்தில் வீழவன் றேபொன்று வார்தமைப் பாடுவதே

என்பதாம்.

இதனைக் கேட்ட இளையவனுக்கு உண்மை அறிவு உதித்தது. மானிடப் பிறவி எடுத்து மாதேவனைப் பாடாமல் மன்னவ னொருவனைப் பாடிய தன் குற்றம், அப்போதே

அவன் மனதிற் பட்டது. அக்கணமே அவன் வெற்றிவாளை எறிந்துவிட்டு அண்ணன் பாதங்களில் விழுந்து பணிந்தான்; விம்மி விம்மிக் கத்திக் கதறிப் புலம்பித் தேம்பினான். 'மகா பாவியான என்னை மன்னித்தருளவேண்டும்' என்றான்.

வரதுங்கன் இவ்விஷயம் ஒன்றும் தெரியாமல் திகைத்து, 'அன்பார்ந்த தம்பி! உனக்கு என்ன நேர்ந்தது? ஏன் இப்படி இரந்து வருந்துகின்றாய்?' என்றான். காசிகாவலன் கடந்த விஷயங்களை நடந்தபடி எடுத்துரைத்தான். வரதுங்கராமன் தம்பியைஒருவாறுதேற்றி அவனைநோக்கி, 'தம்பி! உன் இஷ்டப்படி இந்நைடதத்தை இயற்றினாய். இதனை முடித்து உன் மதினியாரிடம் படித்துக் காட்டு. அவளும் பிறபுலவரும் ஒப்புக்கொண்டால் அதுவே போதும். இனிப் பதிநூலையன்றிப் பசுநூலைப் பாடாதே. நரபதியாகிய நளனை ஒரு நூலிற் பாடிய குறை தீர, நீ நமக்கு முத்தியளிக்கும் அத்தனாகிய சிவபிரானை, காசிகாண்டம், கூர்மபுராணம் என்னும் இரண்டு நூல்களிற் பாடவேண்டும். அங்ஙனம் பாடுமுன் சாமிதேவராகிய கணபதி பட்டரிடம் சிவதீக்ஷையும், பஞ்சாக்ஷர உபதேசமும் பெறல்வேண்டும்' என்றான்.

அண்ணன் கூறிய வார்த்தை அவனுக்கு அமிர்தப்போற்பட்டது. வரதுங்கன் கூறியபடி நரதுங்கனான நிடதன் சரிதையை அவன் ஒருவாறு பாடிமுடித்தான். முடித்ததும், அந்நூலைப் பார்வையிட வரதுங்கன் மனைவிக்கு அனுப்பினான். அதனைப் பெற்று முற்றும் படித்துப்பார்த்த அம்மங்கை அந்நூலின்நடை வேட்டைநாய் நடைபோலிருக்கிறதென்றாள். அவ்விஷயத்தைத் தூதன் திரும்பிவந்து அதிவீரராமனுக்கு அறிவித்தான். அப்போது அவனுக்குண்டான விசனத்-

துக்குக் கணக்குண்டோ! அவன், 'என் தமையன் இதனை நன்கு பாடவிடாமல் கெடுத்தான். அவன் மனைவி இதனைக் குற்றங்கூறிக் கழித்தாள்' என்று நினைத்துச் சதுரங்க சேனையோடு வரதுங்கனோடு போர்க்கு எழுந்தான்.

அதிவீரராமன் அறிவீனத்தை யறிந்த வரதுங்கன் மனைவி அவனை நல்வழிப்படுத்தலாம் என்று துணிந்தாள். உடனே அவள் ஒரு ஓலையை எடுத்து,

செஞ்சுடரின் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
விரதமே பூண்டிந்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்

என்ற வெண்பாவை எழுதி, தூதன்மூலம் அவனுக்கு அனுப்பினள். அதனைக்கண்ணுற்ற அதிவீரராமனது அகம் மகிழ்ந்தது. சினம் தணிந்தது. அவன் விரைந்துசென்று தன் அண்ணனையும், அவன் மனைவியையும் பணிந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டினன். அவளும் அவனை மன்னித்து, 'மன்னரே! நீரேன் இத்தகைய காரியத்தைக் கோரினீர்'? என்றாள். அப்போது அவன் 'எனது நைடதத்தின் நடை வேட்டை நாய் நடைபோலிருக்கிறதென்று தாங்கள் கூறுதல் தகுமோ? எத்தனையோ புலவர் இதனைக் கரும்புபோல் இருக்கின்றது என்றார்கள்.' என்றான்.

பாண்டியமாதேவி அவனைப்பார்த்து, 'பிறபுலவர் புகன்றதும், யான் கூறிய விஷயமும் ஒன்றேதான். வேட்டைநாய் காட்டுக்குச் செல்லும்போது, உற்சாகத்தோடு விரைந்துபோய், திரும்பிவரும்போது இளைப்பால் ஏங்கிவரும். அதுபோல் உமது நூல் ஆரம்பத்தில் பல அணிகளோடு விரைந்து

நடந்தது. பின்னர் செல்லச் செல்ல வளம் குன்றியது. கரும்பை வேரினின்று தின்றுகொண்டே போனால், முடிவில் அதின் உருசி குறையும். ஆதலால் கரும்பும் உமது நூலுக்குத் தக்க உவமையாகும்' என்றாள். அப்பொழுதே அதிவீரராமன் அப்பெண்மணி கூறிய உண்மையை யறிந்து முன்னிலும் நற்குண முற்றான். பிறகு அவன் தன் தமையன் கூறியபடியே காசிகாண்டம், கூர்மபுராணம், நறுந்தொகையென்ற வெற்றிவேற்கை என்னும் நூல்களையும் பாடிச் சிறப்படைந்தனன்.

## 18. ஐக்கிய நாணய சங்கம்.

ஐக்கிய நாணய சங்கம் அல்லது கூட்டுறவுச் சங்கம் என்பது,பலர் ஒன்றாகக்கூடிச் சமபாத்தியதையோடு தங்களுக்குப் பணவிஷயமாகவேண்டிய வசதியை ஏற்படுத்திக்கொள்வதற்கு அமைத்துக்கொள்ளும் சங்கம் ஆகும்.

ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்களில் நீண்ட காலமாக இவ்விதச் சங்கங்கள் நடைபெற்று வருகின்றன. ஆனால் இந்துதேசத்தில் கிராமங்களிலும், நகரங்களிலும் வறுமைத்துன்பத்தைப் போக்கவேண்டுமென்ற அவாக்கொண்டு, இந்திய துரைத்தனர், 1904 ஆம் வருஷத்தில் ஐக்கிய நாணய சங்கங்களை ஏற்படுத்துவதற்குச் சாதனமாகிய ஒரு சட்டத்தை உண்டாக்கினார்கள். கூட்டுறவு முறைகளை நமக்குப்போதிப்பதற்கும் தகுந்த உத்தியோகஸ்தர்களை நியமித்தார்கள். இக்காரணம் பற்றியே கடந்த இருபது வருஷங்களுக்குள் ஆயிரக்கணக்கான ஐக்கிய நாணய சங்கங்கள் இந்நாட்டிலுள்ள சிறு கிராமங்களிலும், பட்டணங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன.

சங்கம் ஏற்படுத்தும் விதம்—ஒரு கிராமத்தில் ஐக்கிய நாணய சங்கம் ஒன்று அமைக்க அந்தக்கிராமவாசிகள் விரும்பினால், தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கூட்டுறவுச் சங்கத்தின் அதிகாரிகளுக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். அதன்மேல் அச் சங்கத்தின் உத்தியோகஸ்தர்களில் ஒருவர் அந்தக்கிராமத்துக்கு வந்து கூட்டுறவுச் சங்கத்தினால் உண்டாகும் நன்மைகளையும், அதையமைக்கும் முறைகளையும் விளக்கமாக எடுத்துக் கூறுவர். அதன் பிறகு அந்தக்கூட்டத்தில் வந்துள்ளகிராமவாசிகள் அதைப்பற்றி நன்கு யோசித்து அங்கே சங்கம் வைக்கவேண்டும் என்னும் தீர்மானத்துக்கு வருவார்கள். அதன்பின் சங்கத்திற் சேரப் பிரியமுள்ள அனைவரும் அதற்கென்று ஏற்பட்டுள்ள நமூனாவில் கையொப்பமிட்டுக் கூட்டுறவுச்சங்கத்தின் மேலதிகாரிக்கு விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். எந்தக்காலத்திலும் ஒரு சங்கத்தில் பத்து அங்கத்தினர்க்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

வியாபாரச் சங்கங்கள்:— இச்சங்கம் பல பிரிவுகளையுடையது. இதில் † வியாபாரச் சங்கங்களும், ‡ நாணயச் சங்கங்களும் முக்கியமானவை. இச்சங்கங்கள் அங்கத்தினர்களுக்கு வேண்டிய எல்லாப் பண்டங்களையும், சில்லரை வியாபாரிகளிடம் கொள்ளாமல், பெரிய வியாபாரிகளிடமாவது அவற்றை விளைவிப்போரிடமாவது ரொக்க விலைக்கு மொத்தமாக வாங்கிப் பிறகு கடைவிலைக்கு அவர்களுக்குவிற்று இவ்விரண்டு விலைகளுக்குமுள்ள வித்தியாசத்தால் ஏற்படும்

† Co-operative Stores

‡ Co-operative Credit Societies.

தொகையில், சங்கத்து வேலையாட்களுக்கும், சிப்பந்திகளுக்கும் சம்பளம் கொடுத்த பிறகு, §நிகரலாபத்தில் ஒரு பகுதி க்ஷேமதனமாகவும், பொதுப்பணமாகவும் சேர்த்துவைக்கப்படுகிறது. மீத இலாபம் அச்சங்கத்தினர்களுக்கே அவரவர் சாக்குகளை வாங்கிய தொகைக்குத் தக்கபடி பங்கிட்டுக் கொடுத்துவிடப்படுகின்றது.

2. நாணய சங்கங்கள்—வியாபாரச் சங்கங்களை விட நாணய சங்கங்கள் அநேகமாக பல இடங்களில் உண்டாயிருக்கின்றன. பொதுவாக நம்முடைய தேசத்தில் ஜனங்களின் சம்பாத்தியத்தைவிட செலவு அதிகமாக இருக்கிறது. அவரவர்கள் செலவுக்குத் தக்க வருமானம் இல்லை. ஏழைஜனங்கள் விவசாயத்துக்குப் போதுமான பணம் தங்களிடம் இல்லாததால், வட்டிக்குப் பணங்கொடுக்கும் செட்டிகள் முதலியோரிடமிருந்து கடுமையான வட்டிக்குக் கடன்வாங்குகிறார்கள். தங்கள் பூமியிலிருந்து கிடைக்கும் பொருளிலிருந்து, கடனையும் வட்டியையும் கொடுத்துவிட்டால், மீதியிருப்பது தங்கள் குடும்ப சம்ரக்ஷணைக்கே போதாமலிருக்கின்றது. கடைசியாகத் தங்கள் நிலங்களையும் தோற்றுப் பரிதாப நிலைக்குட் படுகிறார்கள். ஐக்கிய நாணய சங்கங்கள் அங்கத்தினர்க்குத் தேவையான விவசாயக்கருவிகள், விதைகள், கால்நடைகள் முதலியவைகளை வாங்கவும், சுபாசுப கருமங்கள் நடத்தவும், பழைய கடனைத் தீர்த்தல்முதலியவை செய்யவும் குறைந்தவட்டிக்குப் பணம் கொடுக்கின்றன. மேலும் அங்கத்தினர்கள் கடனாக வாங்கின பணத்தை தங்கள் சௌகரியப்படி

---

§ Net profit.

சிறிது, சிறிதாகக் கொடுக்கும் வண்ணம் ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். செலுத்தியதுபோக மீதப் பணத்துக்குத்தான் வட்டி. விண்ணப்பம் செய்வோருக்குச் சொந்தமான சொத்தின் மதிப்புத் தொகையில் இரண்டில் ஒருபாகமே சங்கத்தினின்று கடன் கொடுக்கப்படும்.

ஐக்கிய சங்கங்களின் உத்தியோகஸ்தர்கள்—சென்னை மாகாணத்திலுள்ள சங்கங்களுக்குச் சென்னையில் ஒரு ரிஜிஸ்தரார் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஒவ்வொரு ஜில்லாவுக்கு அல்லது இரண்டு ஜில்லாக்களுக்கு ஒரு உதவி ரிஜிஸ்தரார் நியமிக்கப் பட்டிருக்கிறார். அவர்களும் அவர்கள் ஆபீஸில் வேலை செய்யும் குமாஸ்தாக்களும் சர்க்காரால் நியமனம் பெற்றவர்கள். சங்கங்களை மேற்பார்க்கவும் இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களும் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தரே.

சங்கங்கள் பத்து அல்லது பதினைந்து சேர்ந்து ஒருயூனியன் ஆகிறது. ஒவ்வொரு யூனியனுக்கும் ஐந்து டைரக்டர்கள் உண்டு. அவர்களில் ஒருவர் அக்கிராசனாதிபதி, ஒருவர் காரியதரிசி. யூனியனில் அணைக்கப்பட்டிருக்கிற சங்கங்களை மேற்பார்க்க யூனியனால் நியமிக்கப்பட்ட சூப்பர்வைசர் ஒருவர் உண்டு.

கிராமச் சங்கங்களின் உத்தியோகஸ்தர்கள்—ஒவ்வொரு சங்கத்திற்கும் ஐந்துபேர் கூடிய ஒரு நிர்வாக சபை அல்லது பஞ்சாயத்தார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் அக்கிராசனாதிபதி, மற்றொருவர் காரியதரிசி. இவர்கள் மேற்படி சங்கங்களின் அங்கத்தினர் கூடிய மகாசங்கத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.

அங்கத்தினர் சுதந்திரம்—சங்கம் வாங்கும் எல்லாக் கடன்களுக்கும் எல்லா அங்கத்தினரும் மொத்தமாகவும், தனித்தனியாகவும் பொறுப்புள்ளவர்கள். ஆனால் அப்பொறுப்பு அவரவர்கள் எடுத்திருக்கும் பங்குகள் வீதம் ஏற்படும்.

சங்கத்தின் மூலதனம்—இது பங்கு ஒன்றுக்குப் பத்து ரூபாவீதம் எத்தனையோ பங்குகளால் ஏற்பட்டிருக்கும். இந்த ஒவ்வொரு பங்குத்தொகையையும், பங்கு எடுத்துக்கொள்ளும்போதே மொத்தமாகவாவது, பத்துவருஷத் தவணையிலாவது செலுத்தவேண்டும்.

ஒவ்வொரு அங்கத்தினரும் ஒரு பங்காவது கட்டாயம் எடுத்துக்கொள்ளவேண்டும். ஆனால் எந்த அங்கத்தினரும் பத்துப் பங்குக்கு அதிகமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒரு பங்கு என்பது 10 ரூபா. இது பொது விதி. அந்தந்தச் சங்கத்துக்குத் தக்கவாறு இது வேறுபடும். ஒவ்வொரு பங்குக்கும்கால்ரூபாய் பிரவேசக்கட்டணம் செலுத்தவேண்டும்.

எந்த அங்கத்தினரும் தாம் எடுத்த பங்குத்தொகையை அந்தப்பங்கு எடுத்த ஐந்துவருஷத்திற்குள் திரும்பவாங்கிக்கொள்ள அனுமதி கொடுக்கப்படமாட்டாது. ஐந்து வருஷங்களுக்குப்பின் பஞ்சாயத்தார் ஒப்புக்கொண்டால், திருப்பிக்கொடுக்கப்படும். பிரவேசக் கட்டணம் திரும்பக் கொடுக்கப்படமாட்டாது.

கூட்டுறவின் பயன்—அநேகர் ஒன்றுகூடி, தம்குறைகளையும், பொதுக்குறைகளையும் நீக்கிக்கொள்ள முயற்சிக்கும் காலத்துச் சுயநயம்பாராட்டல் முதலிய துற்குணங்கள் நீங்க,

உலகியல் நிலையில் இலாபம் அடைகிறார்கள். அன்றியும் அகப்பொருளாகிய நற்குணங்களும், நல்லொழுக்கமும் வாய்க்கக் காண்கின்றோம். இம்முறையிலும், பொதுநலத்தை நாடும் குணமுடையவர்களுக்கும் பணலாபம் கிடைக்கத்தக்கதாய் இருக்கிறது. இதைப்போல வேறே எந்த முறையிலும், உண்மை முதலிய உயர் குணங்கள் வளர்வதோடு பொருள் இலாபம் கிடைக்கக்கூடியதாக இல்லை. ஒவ்வொருவனும் சங்கத்திலிருக்கும் மற்றொருவனுக்கு உதவி புரிவதால், தானும் அவனுடைய உதவியை வேண்டிய வேளையில் தடையில்லாமற் பெறலாமென்ற நிச்சய மிருப்பதால், பிறருக்குக் கேடுசெய்யவோ, பிறரைக்கொடுத்துத் தான்மேன்மையடைய வேண்டும் என்ற கெட்டநினைவைக் கொள்ளவோ ஒருவருக்கும் எண்ணம் உண்டாவதில்லை. கூட்டுறவே விவசாயத்திற்குப், வியாபாரத்துக்கும், கைத்தொழிலுக்கும் இன்னும் மற்றக் காரியங்களுக்கும் ஏற்றது.

இவ்வியக்கமானது, ஏழை ஜனங்களின் வறுமையை நீக்கி, அவர்கள் மூழ்கியிருக்கும் கடனாகிய கடலிலிருந்து அவர்களைக் கரையேற்றுவதற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதனால் முக்கியமாய் விவசாயிகள் பயனடைகிறார்கள். சகலரும் பயனடையலாம். ஆகவே ஐக்கிய நாணய சங்கங்களை ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்துவது ஜனங்களின் முன்னேற்றத்துக்கு உபயோகமானது.

---

## 19. நல்லொழுக்கம்.

இப்பாடத்திற் பல பொருள்களை யடக்கிக் கூறலாமெனி-னும், எல்லோரும் கைக்கொள்ளத்தக்க ஒழுக்கங்களிற் சிலவே கூறுவோம்.

கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் புண்ணி-யம் செய்வோர்க்கு மோக்ஷமும், பாவம் புரிவோர்க்கு நரக-மும் கொடுக்கிறார் என்றும் நாம் துணியவேண்டும். சூரி-யோதயத்திற்கு முன்னெழுந்து கடவுளைத் துதிக்கவேண்டும். அப்பால் அன்று செய்யவேண்டிய காரியங்களை ஆலோசித்-துத் தொடங்கவேண்டும். இரவிற் படுக்கும்போது தெய்வ வணக்கம் செய்யவேண்டும். இவ்விரு காலங்களுக்கு மிடை-யிற் பகவானை எத்தனை முறையும் துதிக்கலாம்.

அதிகாலையில் எழுந்திருப்பதால் பல நன்மைகளையடை-யலாம். அவற்றை,

புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்கும்
உற்ற நரம்பென்றும் உறுதியுறும்—பித்தொழியும்
தாலவழி வாதபித்தம் தத்தநிலை மன்னும்அதி
காலைவிழிப் பின்குணத்தைக் காண்

என்ற ஆன்றோர் மொழியால் அறிக.

பொய்ம்மொழிதல் குற்றங்களிற் பெரியதொன்றாதலின், எக்காரணத்தாலும் பொய்பேசலாகாது. உடலின் புறத்-தைச் சுத்தப்படுத்துவது நீரே ஆம். அதுபோல அகத்-தைச் சுத்தப்படுத்துவது வாய்மையே ஆம். இதனை,

புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்

என்ற மெய்ப்புலவர் வாக்கானும் துணிக. பொய்பேசாமை அறங்களிற் சிறந்ததாதலின்,

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று

என்று தெய்வப்புலவர் அருளினர்.

பிறர் பொருளை வேம்பு என்றெண்ணி அதை இச்சிக்கவும், கவரவும் நினைத்தல் ஆகாது. பிறர் பொருளைக் கண்டு பொறாமை கொள்ளவும் கூடாது. பிறர் நம்மை வைதாலும் பொறுமையோடு இருத்தலேயன்றி, அவர்களைத் திரும்பவும் திட்டக்கூடாது. நாய் கடித்தால் அதனைத் திரும்பக் கடிப்பவர் இலரன்றே?

நாம் நம்மைப்போலவே அயலாரையும் நேசிக்கவேண்டும். பிறர்க்குத் தீங்கு எண்ணுதலும், செய்தலும் என்றும் ஆகா. பிறர்க்கு வரும் துன்பங்களை நீக்க, நம்மாலான உதவி செய்ய வேண்டும்.

மற்றவர்களைத் தூஷிப்பதும், இகழ்ந்து பேசுவதும் கூடா. பகைவரிடத்தும் இன்சொல்லே வழங்கவேண்டும். பிறரிடம் குற்றங்களுண்டாயின் அவைகளை நேரிற் கூறித் திருத்தவேண்டும். கெட்ட சிநேகத்தால், நல்லோர் ஒழுக்கமும் குன்றிவிடுமாதலின், துஷ்டருடன் சிநேகித்தல் ஆகாது.

தாய் தந்தை குரு இவர்களை வழிபடவேண்டும். பெரியவர்களைக் கண்டால் இருக்கைவிட்டெழுந்து உபசரித்து அவர்கள் வீற்றிருந்த பின், நாமும் வீற்றிருக்கவேண்டும். குடிநீருள்ள குளங்களில் பல் தேய்த்தலும், வேட்டிதோய்த்தலும், குளித்தலும், உமிழ்தலும் கூடா. இப்படிச் செய்ய-

வேண்டிய தவசியமானல் பாத்திரங்களில் தண்ணீர் மொண்டு கொணர்ந்து வெளியே உபயோகித்துக்கொள்ளலாம். நடை-வழிகளிலும், தோட்டம் துரவுகளிலும், நீர்ப்பாகங்களின் பக்கத்திலும் அசுத்தம் செய்யக்கூடாது.

அம்மை, விஷபேதி, பிளேக்கு முதலிய தொத்து வியாதிகள் இருக்கும் இடங்களுக்குச் செல்லக்கூடாது. செல்ல நேரிடின் தகுந்த பாதுகாப்புடன் செல்லவேண்டும். கை கால் முகங்களைச் சுத்தஞ்செய்யாமல் சாப்பிடலாகாது. புழைக்கடைகளிலும், அசுத்தமான இடங்களிலும் சோற்றை வைத்துப்புசிக்கலாகாது. வயிற்றைப் பாதிப்பங்கு உணவாலும், காற்பங்கு நீராலும் நாம் நிரப்பவேண்டும்; மீதியுள்ள காற்-பங்கைக் காற்றுலாவுவதற்காக விட்டுவிடவேண்டும். அகால போசனம் செய்தலும், தூங்காமல் விழித்திருத்தலும் தேக சௌக்கியத்திற்குக் கேட்டைத் தருவன ஆதலால் அவற்றை நீக்கிவிடவேண்டும். ஆகாரம் உட்கொண்டவுடன் குளித்-தால் உண்டவுணவு இலகுவில் சீரண மாகாது.

ஆடையிலுள்ள தூசி பிறர்மேல் படாதவாறு துணியை நாம் உதறவேண்டும். தூங்குபவர்களை ஆபத்துக்காலத்தி-லன்றி எழுப்பக்கூடாது.

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்தே
நீங்குவதே நல்ல நெறி

என்று பெரியோர்கூறியிருப்பதை நாம் மறக்கக்கூடாது. பிறர் இரகசியம் பேசும்போது மறைந்திருந்து கேட்கலாகாது. அன்றியும் இருவர் பேசும்போது அவர் அனுமதியின்றி அச்-சம்பாஷணைகளுக்குச் செவிகொடுத்தல் தவறும்.

நாம் வழிகளிற் செல்லும்போது, சில விதிகளை யனுசரிக்கவேண்டும். நமக்கு முன் செல்பவர்களைக் கைதட்டிக் கூப்பிடலாகாது. ஏனென்றால், நாம் எதிர்பாராத வேறு பலர் திரும்பிப் பார்ப்பார்கள். அதனால் நாம் பலருடைய போக்கைத் தடுக்கிறவர்கள் ஆகிறோம். நமக்கெதிரில் வயதானவர்களும், பெரியோர்களும், சுமைதூக்கி வருபவரும், சிசுக்களும், பசுக்களும் வந்தால் நாம் அவர்கள் செலவுக்கு இடையூறாக இராமல் வழிவிட்டு விலகிச் செல்லவேண்டும்.

இப்படிப்பட்ட நல்லொழுக்கங்களைக் கைக்கொண்டொழுகுவோர் இம்மையிற் புகழும், மறுமையில் நற்கதியும் அடைவார்கள் என்பது நிச்சயம்.

---

## 20. டைமன் என்னும் பிரபு.

மேனாட்டில் ஆதன்ஸ் என்னும் பட்டணத்தில் டைமன் என்னும் பெயருடைய பிரபு ஒருவன் இருந்தான். இவனிடத்தில் எழில்வாய்ந்த பல மாளிகைகளும், ஏராளமான திரவியமும், ஏவலாளருமான சம்பத்தெல்லாம் குறைவின்றி நிரம்பியிருந்தன. எவரிடத்தும் இரக்கம் கொள்ளு மோர் இனிய குணமும் இவனிடத்தில் வாய்ந்திருந்தது. என்றாலும் இயல்பு அறியாத மனிதரிடத்திலும் திடீரென்று சிநேகப்பான்மையை அளவுகடந்து செலுத்துமோர் அற்ப அறிவும் இவனுக்குண்டு. அதனால் அங்குள்ள சில பிரபுக்களும், மற்றுமுள்ள சாமானிய மனிதர்களும், வித்துவான்களும் நேசிக்கவா, இவனும் அவருடன் அளவளாவி அத்தியந்த நேசனாகினன். இப்படி இவனுடன் நட்புற்றவரில், லூகலஸ், லூஸியஸ், ஸெம்பிரோனியஸ் என்றவர்களே நெருங்கிய நண்பர்கள்.

இந்த டைமன் பிரபு இளமைப்பருவத்தில் எண்ணிறந்த செல்வங்கட்கு இறைவனுகிவிட்டபடியால், இன்னபடிதான் நடக்கவேண்டுமென்று அவனுக்குத் தெரியாமற் போய்விட்டது. தன்னை இந்திரனுகவே எண்ணிச் செருக்குற்று இறுமாந்து நடக்கத் தலைப்பட்டான். பனங்கள்ளைக் குடித்தார்க்கு அம்மயக்கந்தீர மருந்துண்டு; பணக்கள்ளைப்பருகினுர்க்கு அம் மயக்கந்தீர மருந்தேது? அவன் தோன்றியபடியெல்லாம் செல்வங்களைச் செலவிடலானுன். அண்டையிலிருக்கும் சிநேகிதரோடு மற்றுமுள்ள நட்பாளரையும் ஆள்விட்டழைத்து மிகச்சுவையுள்ள உணவுப்பொருள்களால் அடிக்கடி விருந்துகள் நடத்தலானுன். விருந்துருசிகண்ட அவர்களும் எங்களுக் கருந்துணையாவான் நீயே என அப்பிரபு நினைக்கும்படி நடித்து, அவனண்டையிலேயே கூடிக்குலாவி அபரிமிதமான முகஸ்துதிகளும் செய்துகொண்டிருந்தார்கள்.

இவ்வண்ணமாக இவர்கள் புகழப்புகழ டைமனும் பணத்தைப் பணமென்று பாராமல், பகல் விருந்தென்றும், நிலாப்போசனமென்றும், காலை மாலை உணவுகளென்றும், துறைச்சாப்பாடென்றும், குளப்படி விருந்தென்றும், குடிவிருந்தென்றும் சொல்லிச் சொல்லி அந்த வஞ்சக நேசர் விலாப்புறம் எல்லாம் பஞ்சுப்பொதிபோல் பருத்துக்கொழுக்க விருந்தளிப்பதில் அளவுகடந்து செலவிடலானுன். இவ்வாறின்றிப் பாடப்பட்டவர்க்கும், படிக்கப்பட்டவர்க்கும், படமெழுதித் தரப்பட்டவர்க்கும், பகடிபேசுவார்க்கும், வேடிக்கை விநோதங்களை விரிப்பாருக்கும் அவர்கள் விருப்பத்தின் மேற்படப் பரிசுகளை வீசிக்கொண்டு வந்தான். அவனுக்குரிய வருவாய் ஊற்றினளவாகச் செலவோ ஆற்றினளவாக

அதிகப்பட்டுக்கொண்டிருந்தது. பாடுபட்டுத் தேடாதார்க்குப் பணத்தினருமை எவ்வாறு தெரியும்? இப்படிச் சிலகாலம் செல்லவே, அப்பிரபுவின் பணப்பெட்டியெல்லாம் வெட்டவெளியாயின. அது தெரிந்த அவனது காரியஸ்தன் டைமனை அடுத்து, 'ஐயா! தாங்கள் வரவறிந்து செலவு செய்யாத காரணத்தால் நம் மாளிகையில் வறுமை வந்து வியாபித்துவிட்டது. உள்ளநிதி யெல்லாம் ஒழிந்தன. ஒருகாசு கூடக்கையிலுமில்லை, பையிலுமில்லை. இனி என்ன செய்வது?' என, டைமன் 'கடன் கொண்டேனும் காரியங்களை நடத்திச்சிநேகிதருடன் கலந்து களித்தே என்காலத்தைக் கழிப்பேன்' என்று சொல்லி ஆயிரக்கணக்கான காசுகளை அநியாய வட்டிக்குக் கடன்வாங்கி முன்போலவே விருந்துக்கும், வேடிக்கைக்கும், குடிக்குமாகப் பகிர்ந்தளித்து வந்தான்.

அப்பால் கடன் கொடுத்தவர் பணத்துக்கு வந்து நெருக்கலாயினர். அதனைக் காரியஸ்தன் பிரபுவுக்கு அறிவிக்க, அவன் அவனைநோக்கி, 'நம்முடன் அநுதினமும் விருந்துண்ட நட்பாளராகிய லூகலஸ் முதலான பிரபுக்கள் பலரிருக்க நமக்கென்ன பணத்துக்குப் பஞ்சமா? நீ இப்பொழுதே அவர்களிடம் சென்று நான் கேட்டதாகச்சொல்லிக் கொஞ்சம் பணம் வாங்கிவா' என்றான். காரியஸ்தன் அடைத்த கடைக்குச் சீட்டுக்கொடுத்தவன் கதையாக முடியும் என்று நினைத்துக்கொண்டு, அவன் சொற்படியே அவர்களிடம் சென்று, டைமன் சொன்னதைத்தெரிவித்தான். அவருள் லூகலஸ் என்பவன், 'ஐயையோ! அரை நாழிகைக்குமுன் வந்தாயில்லையே. ஆயிரக்கணக்கான திரவியம் கொடுத்திருப்பேனே. இருந்த பொருளை இப்பொழுதுதான் ஒருவனுக்குக் கொட்டிக்கொடுத்தேன். அருமையான

பிரபு கேட்டுவிட, இல்லையென்று சொல்லவேண்டியதாகிவிட்டதே! கேளாத பனிதன் கேட்டுங் கொடுக்கமுடியாமற்போனது எனது துரதிர்ஷ்டந்தான்.' என்றான். அப்பால் காரியஸ்தன் லூஸியஸ் என்பவனைக்கண்டு, 'விருந்துண்ட நன்றி மறவாது எனது பிரபு விரும்பியவாறு கொஞ்சம் பணந்தரப் பிரார்த்திக்கிறேன்' என, மற்றவன் 'ஐயா! காரியஸ்தரே! உம்முடைய முதலாளி மிதமிஞ்சின செலவால் இந்தநிலைமைக்கு வந்துவிடுவாரென்று முன்னமே எனக்குத்தெரியும். அவரைத் திருத்தவேண்டியே நான் அங்கு அடிக்கடி வந்துகொண்டிருந்தேனேயன்றி விருந்துச்சோற்றை நம்பிவரவில்லை. அடாதபடி செலவு செய்தால், படாதபாடு படவேண்டியதுதானே! அதற்கு யார் என்ன செய்வார்? காரியஸ்தரே! இன்னும் ஒரு காரியம்; கிட்டவாரும்' என்று சொல்லி, அவன் கையில் ஐந்து பொற்காசுகளைக் கொடுத்து 'இதனை நீரே எடுத்துக்கொண்டு உம்முடைய பிரபுவினிடத்தில் என்னைக் காணவில்லையென்று சொல்லிப்போடும்' என்றான். என்னவே காரியஸ்தனுக்குக் கொடுஞ்சினம் மூண்டுவிட்டது. அவன் அக்காசுகளை எறிந்துவிட்டு, 'அடா நன்றிமறந்த நாற்றப்பிணமே! என்னையும் உன்னைப்போல நினைத்துவிட்டனையே?' எனப்பற்பலவாறு இகழ்ந்துபேசி, ஸெம்பிரோனியஸ் இடத்திற் சென்று பணங்கேட்டான். அவன், 'எனக்குமுன் எல்லாரிடத்திலும் கேட்டுவிட்டுக்கடைசியாய் என்னிடத்தில் வந்தாய். நான் என்ன அவ்வளவு கேவலமானவனு? நல்லதிருக்கட்டும். என்னை நீ எவர்க்கும் கடையனுய்க் கருதியபடியால் ஒருகாசுகூடக் கொடுக்கமாட்டேன். போ போய்விடு.' என்றான்.

காரியஸ்தன் இவையெல்லாம் டைமனிடம் சொல்லவே, அப்பிரபுவுக்குப் பணத்தினருமை அப்பொழுதுதான் தெரியவந்தது. சூழ்ந்திருக்கும் கடன்காரர் அவனைப் புலவிதமாய் இகழ்ந்திடித்து உரைத்தனர். அது பொறுது அவனுள்ளம் துடிதுடித்தது. சர்ப்பத்தின் வாயிற்பட்ட தவளையைப்போல் தனக்குத்தற்காலம் ஏற்பட்டிருக்கும் நிலைமையை எண்ணியெண்ணித் தவிக்கலானான். பொருள்கூடப் புத்தியும் போய்விட்டதென்றும், டைமன் மூளை, களிமண்ணாகிவிட்டதென்றும் ஊரெல்லாம் எடுத்துத் தூற்றலாயின.

ஒருநாள் டைமன் தன்னிடத்தில் வஞ்சகம் பேசி வயிறூரப் புசித்தொழிந்த அந்த மாய நட்பினரை எல்லாம்விருந்தொன்று நடப்பிப்பதாய்ச் சொல்லி வரவழைத்து, அவர்களின் முன் கொதிக்கும் வெந்நீர்வார்த்த கலன்களை மூடியுடன் கொணர்ந்து வைப்பித்து, அவர்களை நோக்கி, 'உண்மைச் சிநேகிதர்களே! உண்ணுங்கள்' என்றான். அவர்கள் மூடியைத்திறந்துபார்க்கையில் கொதிக்கும் நீராய் இருப்பதுகண்டு, திகைத்திருக்கையில் டைமன், 'அடா! நன்றி கெட்ட பன்றிகளே! என்ன விழிக்கிறீர்கள்? இன்னும் இப்பைத்தியகாரன் இனிய உணவு கொடுப்பான் என்று எண்ணி வந்தீர்களோ? உங்கள்வயிற்றை அறுத்து நாய்க்குப்போடுங்கள். உங்களுக்கென்ன வெட்கமில்லையா? உள்ள காலத்தில் என்னுடனிருந்து எவ்வளவோ உதவியைப்பெற்ற நீங்கள், இக்காலத்தில் என்மேல் எவ்வளவும் இரக்கம்கொண்டீர்களில்லையே? உங்களை இனிமேல் எரியிற்போட்டு எரிக்கவேண்டியது தான்' என்று சொல்லி அவரவர் முன்னிருந்த சுடுநீரை அவரவர் முகத்திற் சொரிந்தான். உடனே அவர்கள்

பிரபுவுக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதென்று, ஓட்டமெடுக்க, அவர்களின்மேல் இவன் உண்கலங்களை ஓங்கியெறிந்து விரட்டினான்.

பொருளுமிழந்து புத்தியையும் பறிகொடுத்த டைமன் அப்பால் ஒருகாட்டிற்சென்று காலந்தள்ளுகையில், ஓர் நிதிக் குவியல் நிலத்திலிருந்து அவனுக்குக் கிடைத்தது. அதனைத் தனது உண்மையான காரியஸ்தனை யழைத்து அவன் கையில் கொடுத்து, 'அன்பனே! இதிலிருந்து ஒருகாசுகூட அந்த ஆதன்ஸ் நகரத்தவர்க்குக் கொடுக்காதே. அவர்கள் யாவரும் செய்ந்நன்றி மறந்த தீயர்கள்' என்று பற்பலகூறி அவனை அனுப்பிவிட்டு அக்காட்டிலேயே தனது வாழ்க்கையை முடித்துக்கொண்டனன்.

# செய்யுட் பாடங்கள்.

# I. கடவுள் வணக்கம்.

## விநாயகர் துதி.

செய்யபுகழ் மேனியனைத் தேவர் தொழுந்தேவை
மெய்யருளும் பொய்யா விநாயகனை—வையமெலாம்
காத்தானை யார்க்கும் இளையானைக் கந்தற்கு
மூத்தானை நாவே மொழி. (1)

## கலைமகள் துதி.

படிக நிறமும் பவளச்செவ் வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத மும்துதித்தாற்
கல்லும்சொல் லாதோ கவி. (2)

-கம்பர்.

## திருமால் துதி.

அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம். (3)

-வில்லிபுத்தூர் ஆழ்வார்.

## சிவபெருமான் துதி

ஆதி யானை அமரர் தொழப்படும்
நீதி யானை நியம நெறிகளை
ஓதி யானை உணர்தற் கரியதோர்
சோதி யானைக்கண் டீர்தொழற் பாலதே. (4)

-தேவாரம்.

# II. அரிச்சந்திர புராணம்.

## சூழ்வினைக் காண்டம்.

பார்அளித்தனை புரக்கநின் பதியிடைச் சென்றால்,
ஆர்அளித்தனர் என்பர்நின் அடியவர் எல்லாம்,
ஊர்அளித்திட வுடன்வரத் துணிதியீ தொழியின்,
நீர்அளித்ததே எனக்குமண் நினக்கென மொழிந்தான். ()

நன்று நன்றுநீ நகரியில் எழுந்தருள் நாயேன்
இன்று நின்பிற கெய்துவல், என்றினி தியம்பச்
சென்று கௌசிகன் தேர்மிசை ஏறினன்: திரண்டு
நின்ற மாதவர் கரியினும் பரியினும் நிறைந்தார். (2)

தேரில் ஏறிமா முனிசெலச், சேனைபின் செல்லப்
போரில் வீரனும் தேவியும் புதல்வனும் நடுவே
பாரின் மேல்நடந் தடிபொறா துடல்பதை பதைக்க
வேரி வாவிவிட் டயோத்தியை நோக்கியே விரைந்தார். (3)

இரத மேன்முனி ஏறிய தகிதமோ இதமோ
சரத மோவெனும் ஐயத்தார் வந்தவண் சார்ந்தார்;
விரத மிவ்வகை விளைந்தவா றேதென மெலிந்து
கரத லங்களால் முகத்தறைந் தழுதனர் கதறி. (4)

ஏங்கு வார்இளங் கொடியையும் சேயையும் ஏந்தித்
தாங்கு வார்,செழும் தாளிலே வீழ்ந்துவீழ்ந் தயர்வார்;
ஓங்கி யோங்கியே அறைந்தறைந் தொளிமுகம் கன்றி
வீங்கு வார்,அழு வார்,விழு வார்,உளம் மெலிவார். (5)

மன்ன வற்கும்நம் அன்னைக்கும் மைந்தற்கும் அந்தோ!
என்ன பாவம்வந் தெய்திய என்றிருந் தேங்கப்,
பொன்ன கர்ப்பெரும் புரிசையின் புறத்துவந் தணுகி
இன்னல் செய்தவக் கௌசிகன் இரதம்விட் டிழிந்தான். (6)

கோசி கன்றனை உடன்கொடு கோநகர் புகுந்து
வாசி யுள்ளவும் மதகரி யுள்ளவும் வழங்கி,
காசின் நல்லறை பூசனை அறையெலாம் காட்டித்
தூசின் நல்லறை துயிலறை பாரெனச் சொன்னான். (7)

இந்த ஆதனத் திருந்தருள் எனமுனி இருந்தான்;
அந்த எல்லையின் அரசனும் அவனடி பணிந்தான்
வந்த மன்னரும் அமைச்சரும் மங்கையர் குழாமும்
சுந்த ரக்கழற் சேனையும் அவனடி தொழுதார். (8)

என்னின் மன்னவர் இருபதோ டொருவருண் டந்த
மன்னர் வைத்தசெம் பொன்னறை ஈதென வழங்கி
அன்ன சத்திரம் இவையிவை அடியனேன் வைத்த
பொன்ன றைத்தொகை கொள்கெனக் கொடுத்தனன் புகழோன்.

தொழுதெ ழுந்துதன் சுடர்முடி மன்னனை நோக்கி,
அழுது நின்றவத் தலைவரை, அவன்கையால் அமைத்துப்
பழுதி லாதுநீர் எமக்குமுன் செய்தவப் பரிசே
முழுதும் இந்தமா முனிவர்க்கு முறைசெயும் என்றான். (10)

எவர்க்கும் நல்லவர், திரிபுரம் எரியெழச் சிரித்த
சிவற்கும் நல்லவர், செங்கண்மா லுக்குநான் முகத்தின்
அவற்கும் நல்லவர், அமரர்க்கும் நல்லவர் ஆவர்;
இவற்கு நல்லவர் எனக்குநல் லவரென இசைத்தான். (11)

வையம் ஏழுடை மன்னவன் அவ்வுரை வழங்கச்,
செய்ய வாய்மலர்ச் செங்கையாற் புதைத்தடி வணங்கி,
ஐய! நின்மொழி மறுப்பவர் ஆர்எனு முகத்திற்
கைய றைந்தழக் கண்டவக் கவுசிகன் கருதும். (12)

அறந்தி ரண்டுரு வாகிய அரசனை அவமே
புறம்ப றைந்தனம் புன்மையேம் புந்தி யில்லாமல்
திறந்தெ ரிந்தவர் செயலிதோ எனுக்கவு சிகன்மெய்
மறந்தி ருந்துபின் மற்றுமோர் வாசகம் உரைப்பான். (13)

இந்த வையமும் இருநிதிக் குழுவுமிப் பொருளும்
முந்து நீதர மொழிந்தவப் பொருளும்யான் இழப்பேன்,
எந்தம் மக்களை மணம்புரிந் திங்கர் இருவென்
றந்த ணன்மகிழ்ந் தரசனைக் கைப்பிடித் தமைத்தான். (14)

அப்போது அரசன் முனிவரை வணங்கி,

உமக்கி யான்சொலல் வேண்டுமோ மனுவின்பின் உதித்தே
எமக்கு முன்னர சாண்டபார் வேந்தர்மூ வெழுவர்
தமக்கு முன்னொருத் தருக்குந்தாங் கரும்பெரும் பாரம்
சுமக்க வல்லனோ தவிர்கஇச் சொல்லெனுத் தொழுதான். ()

தொழுத அரசன் 'பொருளைப் பெறுதற்கு என்னுடன் ஒருவரை யனுப்புக' என்று கூற, முனிவர், 'நாளை அனுப்புவேன், இன்றே நீ வெளிச்செல்' என்றான். அரசன் அவரைவணங்கி,

சிறுத்த நாயினேன் செய்தவிப் புன்மைகள் எல்லாம்
பொறுத்தல் வேண்டுமென் றடியிணை இருகரம் பூண்டான்;
கறுத்த சிந்தையன் கௌசிகன் பொறுத்தனன் என்றான்;
மறுத்தும் இன்னுமொன் றுரைத்திடக் கேள்எனு வள்ளல்,

கையி னாற்பிடித் தமைச்சரைக் காட்டிமற் றிவர்கள்
வையி னும்நினை மறுக்கினும் மற்றுமோர் குற்றம்
செய்யி னும்பொறுத் தருள்செய்வாய்; செல்கதி அளித்த
ஐய னே!உன தடைக்கலம் இவர்என அளித்தான். (17)

குடைநி ழற்பொலி கவுசிகன் அடியின்மேற் கொடிநேர்
இடையி னாளையும் மகனையும் இறைஞ்சுவித் தேத்திப்,
படையை நோக்கிநீர் நின்மின்என் றங்கையாற் பணித்து
விடையி தேஎனப் பணிந்தனன் வேந்தர்க்கு வேந்தன். ()

தோலி னோர்களும் தூகதத் தோர்களும் சோதி
வேலி னோர்களும் மாதரும் மிடைந்தமை மாறி
நூலி னோர்களும் நுண்ணிடைக் கவுந்தியர் களுமக்
கோலி னோர்களும் மலிந்தனர் கொடித்தெரு வெல்லாம். ()

புனித மாதவர் சூழ்ந்திடப் புரவலர் போற்றக்
கனிதி ருந்திய செய்யவாய்க் கன்னியர் காண,
நனிதி ருந்திய நவமணி ஆதனத் தேறி
இனிதி ருந்துல காண்டனன் கௌசிகன் இப்பால். (20)

—நல்லூர் வீரகவிராயர்.

---

## III. நீதிநெறி விளக்கம்.

இன்சொல்லன், தாழ்நடையன் ஆயினும்ஒன் றில்லானேல்,
வன்சொல்லின் அல்லது வாய்திறவா—என்சொலினும்
கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் கடல்ஞாலம்
பித்துடைய அல்ல பிற. (1)

கற்றோர்க்குக் கல்வி நலனே கலன் அல்லால்,
மற்றோர் அணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார். (2)

ஆக்கம் பெரியார் சிறியார் இடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப—தூக்கின்
மெலியது மேன்மேல் எழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழும் துலைக்கு. (3)

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீர்எல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல். (4)

கற்பன ஊழற்றார் கல்விக் கழகத்தாங்
கொற்கமின் றாத்தைவாய் ஆங்காத்தல்—மற்றுத்தம்
வல்லுரு அஞ்சன்மின் என்பவே மாபறவை
புல்லுரு அஞ்சுவ போல். (5)

குடிகொன் றிறைகொள்ளும் கோமகற்குக் கற்றா
மடிகொன்று பால்கொளலும் மாண்பே—குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல. (6)

ஏதிலார் யாதும் புகல இறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு—நேர்நின்று
காக்கை வெளிதென்பார் என்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரும் உண்டு. (7)

கண்கூடாப் பட்டது கேடெனினும் கீழ்மக்கட்
குண்டோ உணர்ச்சிமற் றில்லாகும்—மண்டெரி
தான்வாய் மடுப்பினும் மாசுணம் கண்டுயில்வ
பேரா பெருமூச் செறிந்து. (8)

நட்புப் பிரித்தல் பகைநட்டல் ஒற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல்—தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டும் குறி. (9)

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்கும் களிறோ துயர்உறா—ஆங்கதுகொண்
டூரும் எறும்பிங் கொருகோடி உய்யுமால்
ஆரும் கிளையோ டயின்று. (10)

தம்முடை ஆற்றலும் மானமும் தோற்றுத்தம்
இன்னுயிர் ஓம்பினும் ஒப்புக—பின்னர்ச்
சிறுவரை ஆயினும் மன்ற தமக்காங்
கிறுவரை இல்லை எனின். (11)

கைவரும் வேந்தன் நமக்கென்று காதலித்த
செவ்வி தெரியா துரையற்க—ஒவ்வொருகால்
எண்மையன் ஏனும் அரியன் பெரிதம்மா!
கண்ணிலன் உள்வெயர்ப்பி னான். (12)

மன்னர் புறங்கடை காத்து வறிதேயாம்
எந்நலம் காண்டுமென் றெள்ளற்க—பன்னெடுநாள்
காத்தவை எல்லாம் கடைமுறைபோய்க் கைகொடுத்து
வேத்தவையின் மிக்குச் செயும். (13)

உறுதி பயப்பக் கடைபோகா ஏனும்
இறுவரை காறும் முயல்ப—இறும்உயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்றால்; அல்லனபோல்
ஆவனவும் உண்டு சில. (14)

உலையா முயற்சி களைகணா ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலும் கரி. (15)

காலம் அறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூலம் அறிந்து விளைவறிந்து—மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை ஆளப் படும். (16)

மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண்துஞ்சார்;
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்;—செவ்வி
அருமையும் பாரார்; அவமதிப்பும் கொள்ளார்:
கருமமே கண் ஆயி னார். (17)

சிறிய பகையெனினும் ஓம்புதல் தேற்றார்
பெரிதும் பிழைபா டுடையர்—நிறைகயத்
தாழ்நீர் மடுவில் தவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது. (18)

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும்—கழிபெரும்
கண்ணோட்டம் செய்யேல், கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து. (19)

இனியவர் என்சொலினும் இன்சொல்லே, இன்னார்
கனியு மொழியும் கடுவே—அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினும்நோய்தீர்க்கும்மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்தும் கொலும். (20)

பொய்குறளை வன்சொல் பயனிலவென் றிந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காது—மெய்யில்
புலமைந்தும் காத்து மனமா சகற்றும்
நலமன்றே நல்லா றெனல். (21)

நல்லா றொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்தும் தின்னாதாம்
பைங்கட் புனத்தபைங் கூழ். (22)

வள்ளன்மை இல்லாதான் செல்வத்தின், மற்றையோர்
நல்குரவே போலும் நனிநல்ல கொன்னே
அருளிலன் அன்பிலன் கண்ணறையன் என்று
பலரால் இகழப் படான். (23)

சொல்வன்மை உண்டெனிற் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல—வல்லைத்தம்
ஆக்கங் கெடுவ துளதெனினும் அஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர். (24)

—குமரகுருபர சுவாமிகள்.

---

## IV. சுந்தர காண்டம்.

எரிவிழி இலங்கைமா தேவி யுங்கெடக்
கருநிற அரக்கர்தம் கனக மாளிகை
தெரிவையை எங்கணும் தேடிக் காண்கிலான்
அரிமலர்ச் சோலைகண் டாழி காட்டினான். (1)

மானவன் அறிந்தருள் மதுர மாமணி
சானகி அளித்தனள் விடையும் தந்தபின்
யானிவண் வந்துவீண் ஏகல் தீதெனப்
போனமா மாருதி பொழிலை வாட்டினான். (2)

காட்டொரு வானரம் கடிகொள் சோலையை
வாட்டின தென்றுகா வலர்சென் றோதலும்,
கேட்டனன் தசமுகன் கிளர்ந்த சேனையை
மூட்டினன் அவன்எதிர் அநுமன் முன்னினான். (3)

தொக்கரக்க ரைத்துறந்து தோரணத் திருந்துபோர்
அக்கனைத் தரைப்படுத் தரைத்திரத்தம் மிக்கெழத்
தக்கசம்பு மாலியைத் தரைப்படுத்தி வெற்றிசேர்
பக்கநின்ற பஞ்சசேனை மன்னரைப் படுத்தினான். (4)

மேகநாதன் வந்தெதிர்ந்து வேதநான் முகன்தரு
நாகபாசம் வீசிஞான நாதனைக் கொணர்ந்துதம்
ஓகைவாளி ராவணற் குரைத்தலும் உருத்தெழா
வேகவாலின் அங்கியிட் டெரித்திரென் றியம்பினான். (5)

வாலின்வைத்த தீயைமாட மாளிகைக்கண் வைத்தபின்
சாலவந்து சீதையைப் பணிந்துசாக ரந்தனைக்
காலின்ஏகி வந்துதம் கவிக்குலத்து வீராம்
வேலைசூழ வேல்இராமன் விட்டசோலை கிட்டினான். (6)

மன்றலோதி தந்தகோல மணியைநல்கி மாருதி
நின்றுவாச கங்கள்கூற நீடுவேலி ராமனும்
என்றின்மைந்த! இப்பதாதி எழுகவென் றெழுந்தபின்,
தென்றிசைக் கருங்கடல் திரைப்புறத்து மேவினன். (7)

## V. தனிப் பாடல்.

ஒருநாள், ஒரு பாண்டியன் தன் சபையிலிருந்த தமிழ்ப் புலவர்களை நோக்கி, நாரையின் மூக்குக்கு எதனை உபமானமாகக் கூறலாம் என்று கேட்டான். அவர்கள் அதற்கேற்ற உவமைகூற முடியாதிருந்தனர். அன்றிரவு அரசன் நகர்சோதனை வரும்போது, வறுமையால் வாடிப் பொருள்தேடிவரப் புறப்பட்ட சத்திமுற்றப் புலவர், மதுரையம்பதியின் ஒரு பாழும் சத்திரத்தில் படுத்துக்-கொண்டிருந்தனர். அச்சமயம் தனக்குமேற் பறந்துசென்ற நாரையைப் புலவர் நோக்கிக் கூறியது இச்செய்யுள்.

நாராய்! நாராய்! செங்கால் நாராய்!
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!
நீயுநின் மனையும் தென்திசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீர் ஆயின், எம்மூர்ச்
சத்தி முற்ற வாவியுள் தங்கி,
நனைசுவர்க் கூரைக் கனைகுரல் பல்லிப்
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டு,
எங்கோன் மாறன் வழுதிக் கூடலில்,
ஆடை யின்றி, வாடையின் மெலிந்து,
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனம் எனுமே. —சத்திமுற்றப் புலவர்.

## VI. திரிகடுகம்.

பிறர்தன்னைப் பேணுங்கால் நாணலும், பேணார்
திறன்வேறு கூறின் பொறையும்—அறவினையைக்
கார்ஆண்மை போல ஒழுகலும், இம்மூன்றும்
ஊர்ஆண்மை என்னும் செருக்கு. (1)

கணக்காயர் இல்லாத ஊரும், பிணக்கறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும்—பாத்துண்ணும்
தன்மை இலாளர் அயலிருப்பும், இம்மூன்றும்
நன்மை பயத்தல் இல. (2)

தாள்ஆளன் என்பான் கடன்படா வாழ்பவன்,
வேள்ஆளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்,
கோள்ஆளன் என்பான் மறவாதான், இம்மூவர்
கேள்ஆக வாழ்தல் இனிது. (3)

வருவாயுள் கால்வழங்கி வாழ்தல், செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை—எய்தப்
பலநாடி நல்லவை கற்றல்இம் மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள். (4)

உண்பொழுது நீராடி உண்டலும், என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்—தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை, இம்மூன்றும்
தூஉயம் என்பார் தொழில். (5)

கோல்அஞ்சி வாழும் குடியும், குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும்,—வேலின்
கடைமணிபோல் திண்ணியான் காப்பும், இம்மூன்றும்
படைவேந்தன் பற்று விடல். (6)

தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிடப்
பல்பொருள் வெஃகும் சிறுமையும், இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை. (7)

வைததனை இன்சொல்லாக் கொள்வானும், நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்—ஊறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும், இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். (8)

கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம், காமுற்ற
பெண்ணுக் கணிகலம் நாணுடைமை—நண்ணும்
மறுமைக் கணிகலம் கல்வி, இம்மூன்றும்
குறியுடையார் கண்ணே உள. (9)

நன்றிப் பயன்தூக்கா நாணிலியும், சான்றோர்முன்
மன்றிற் கொடும்பா டுரைப்பானும்—நன்றின்றி
வைத்த அடைக்கலம் கொள்வானும், இம்மூவர்
எச்சம் இழந்துவாழ் வார். (10)

காவோ டறக்குளம் தொட்டானும், நாவினால்
வேதம் கரைகண்ட பார்ப்பானும்—தீதிகந்
தொல்வதுபாத் துண்ணும் ஒருவனும், இம்மூவர்
செல்வர் எனப்படு வார். (11)

ஈதற்குச் செய்க பொருளை, அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை—யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லை, இம்மூன்றும்
இருள்உலகம் சேராத ஆறு. (12)

—நல்லாதனார்.

## VII. நட்பு.

ஆயின்மறை முதற்கலைகள் அனைத்துமுணர்ந் தறமறம்பார்த்
தேஇனிது நன்றிதுதீ தென்றுணர்த்தும் அவர்நட்பை
வீயினுந்தான் மறப்பர்களோ மேதையோர்; மறப்பரேல்,
நாயினும்கீழ்ப் பட்டவர்கள் அவர்காண்இந் நால்நிலத்தே (1)

பொன்உள்ளான் பூமியுள்ளான் புந்தியுள்ளான் ஆயிடினும்
என்உள்ளான் அவன்அவன் இருந்தவர்தம் நட்பிலனேல்?
பொன்இல்லான் பூமியில்லான் புந்தியில்லான் ஆயிடினும்,
என்இல்லான் அவனவன் இருந்தவர்தம் நட்புளனேல்? (2)

பேயோடு பழகுறினும் பிரிவதரி தரிதென்று
தூயோர்கள் மொழிவரால்அத் தூயோரும் புகழ்தூயோர்
ஆயோர்கள் பெறுநட்பை அருந்தவத்தாற் பெறலன்றி
ஏயோ!எண் மையிற்கிடைப்பின் இகழ்வரோ இகழ்வில்லார்?

சமயம்வரின் இடித்துரைப்பார், தக்கவழிச் செலச்செய்வார்,
இமையவர்தம் உலகுறவும் இருளுலகம் பகையுமாய்
அமைய அறி வுறுத்துவார், அந்தோ நூல் கற்றுணர்ந்த
கமையுடையார் நட்பெவர்க்குக் காண்கிடைக்கும் அரிதரி

கூடுதற்குக் கூடாத கூட்டத்துப் படும்நட்பு
வீடுதற்குத் தக்கதாய் நாடோறும் மெலிந்தொழியும்.
நீடுதற்குத் தக்கதுநல் நெறிநின்றார் நட்பொன்றே
தேடுதற்குக் கிடையாத திரவியமும் அஃதாமால். (5

—தேவராசபிள்ளை.

84635

மதுரை, புத்தக வியாபாரம்

# இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன் வெளியிட்ட

## தமிழ்ப் புத்தகங்கள்.

புதிய பாடப் புத்தகங்கள்:—இவை துரைத்தனத்தார் விதிகளை அனுசரித்து, நூதன போதனாமுறைக் கிணங்க, சுகாதாரம், அரசியல், பூமிசாஸ்திரம், இலக்கணம், தேகதத்துவம், பிராணி சாஸ்திரம், தாவரசாஸ்திரம், புராணம், சரித்திரம் முதலியன வகுப்புக்குத் தக்கவாறும், மாணவர்கள் எளிதில் உணருமாறும், சிறந்த தமிழ் நடையில் எழுதப் பெற்றுள்ளன.

| | |
|---|---|
| புதிய முதல் பாடம் | 0—2—0 |
| புதிய இரண்டாம் பாடம் | 0—3—0 |
| புதிய மூன்றும் பாடம் | 0—3—6 |
| புதிய நான்காம் பாடம் | 0—4—6 |
| புதிய ஐந்தாம் பாடம் | 0—6—0 |

நல்லொழுக்க போதவர்க்கம்; நீதிவாக்கியக் கதைகள்.

| | | |
|---|---|---|
| உலகநீதி | நீதி வாக்கியக் கதைகள் | 0—2—0 |
| ஆத்திசூடி | நீதி வாக்கியக் கதைகள் | 0—2—0 |
| கொன்றைவேந்தன் | நீதி வாக்கியக் கதைகள் | 0—2—0 |
| வெற்றிவேற்கை | நீதி வாக்கியக் கதைகள் | 0—3—0 |
| மூதுரை | நீதி வாக்கியக் கதைகள் | 0—5—0 |
| நல்வழி | நீதி வாக்கியக் கதைகள் | 0—10—0 |

ஒவ்வொரு வகுப்பிற்கும் குறித்துள்ள செய்யுட்பாட வாக்கி-ங்களை மாணாக்கர்கள் நெட்டுருக்கொண்டு பதவுரை, கருத்துரை ளை மனனம் செய்தும், அவைகளின் கருத்துக்கள் மனதில் பதி-யாது நிற்கும் குறையை நீக்கும் நோக்கங் கொண்டு, கதைகளைப் படித்துத் தெளிவது, அக்கருத்தமைந்த வாக்கியங்களைக் கற்றல் கன்மேற்பதிந்த எழுத்தைப்போல் மனதில் நிலைபெறுமாறு எழுதப் பெற்றுள்ளன. நல்லொழுக்க போதத்திற்கும் இவை நற்றுணையா-கும். கதாவாசகப் புத்தகங்களாகவும் இவற்றை வழங்கலாம். காம்பொஸிஷன் என்னும் பாஷாஞானபோதத்திற்கும் இவை ஏற்றவை.

IIR / 1083

பசுமலை கலாசாலைகளின் தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
நே. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்கள் எழுதிய
செந்தமிழ் வாசகப் புத்தகங்கள்.

---

**செந்தமிழ் வாசகப் புத்தகம்.** (ஆறும் வகுப்பு) அணா 7.

துருவன், காங்கரு, செல்வப்பிள்ளையின் சீரழிவு, தேயிலை, பரிகசிக்கும் பறவை, வைசூரி, சாவித்திரி, பக்தர்கள் சரித்திரம், அரங்கநாத சாஸ்திரி, பீற்றரும் விகடனும், பொற்கைப்பாண்டியன், ஜீரணம், விசுவநாத நாயக்கர், மஹாவீரர், ஒளவையார், இந்தியதேச அரசாட்சி, இராசராசசோழன், வினைச்சொல், இலை, சந்திரகுப்தனது மதிநுட்பம், உரங்கள், சீதா கல்யாணம் முதலிய வசன பாடங்களும், செய்யுட்கதைகள், நீதிகற்பிக்கும் பாடல்கள் சேர்ந்த செய்யுட் பாடங்களும் இதிற் சேர்க்கப்பட்டுள்ளன.

**செந்தமிழ் வாசகப் புத்தகம்.** (ஏழாம் வகுப்பு) அணா 8.

அரிச்சந்திரன், தாஜ் மஹால், பக்தர், அரங்கநாத முதலியார், எரிமலைகள், ஆர்தை, ஆகுபெயர், முத்து, அன்னப்பன் பொன்னப்பன் ஆனது, இந்திய ராஜாங்க காரியதரிசி, கரிகாற்சோழன், இராமர் வனமடைதல், விஷபேதி, புஷ்பம், கனிமரங்களை யொட்ட வைத்தல், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி முதலிய பல வசன பாடங்களும், செய்யுள் தழுவிய பல கதைப் பாடங்களும், தனிச் செய்யுள்களும், நீதிச் செய்யுட் பாடங்களும் இவ்வாசகத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**செந்தமிழ் வாசகப் புத்தகம்.** (எட்டாம் வகுப்பு) அணா 8.

இ. மா. கோபால கிருஷ்ணக் கோன்,
புஸ்தக வியாபாரம்,
மதுரை.